காவேரி

June - 1946
விய - ஆனி

-/6

வெளிவரத் தயாராகிவிட்டது

இவ்வருடத்திய நிகரற்ற படம்

நாகய்யா நடிக்கும்

தியாகய்யா

டைரக்ஷன்
நாகய்யா

தயாரிப்பவர்கள்:- ஸ்ரீ ரேணுகா பில்ம்ஸ் லிமிடெட்

16. Dr. நாயர் ரோடு — டி. நகர் மதராஸ்.

25 JUN 1946
MADRAS

இந்திய மக்களிடையே
புகழ்பெற்று விளங்கும் நமது
வாசனைத் திரவியங்கள் சுமார் அரை
நூற்றாண்டுகளாக வினியோகிக்
கப்பட்டு வருகின்றன.

விஜயபுரம்

கே. டி. ஆர்.

சரக்குகள்—பன்னீர், அரைக்கீரை, சந்தனாதி
தைலங்கள், கிருஷ்ணா அகர்பத்தி, ராஜா
பற்பொடி — மணத்திற்கும் குணத்திற்கும்
பெயர்போனவை — எங்கும் கிடைக்கும்

K·T·R
சந்தனாதி
தைலம்

வாஸன

...SOLE DISTRIBUTORS...
GIRISON & Co...MADRAS

தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஊர்களிலும் எல்லா வியாபாரிகளிடத்திலும், வட இந்தியாவில் பம்பாய், கல்கத்தா, பூனா, குண்டூர் டிஸ்டிரிக்ட்டு முதலிய ஊர்களிலுள்ள எங்கள் ஏஜண்டுகளிடமும் கிடைக்கும். மற்றப் பாகங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

K. T. R. என்ற விலாஸ எழுத்துக்களை எழுத்துக்கெழுத்து
— கவனித்து வாங்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம் —

திருவிழாவில்—

எத்தனை கேளிக்கை. என்ன குதூகலம். கிராமவாசிகள் ஆவலுடன் எதிர்பார்ப்பது திருவிழாவே. விதவிதமான ஆடை ஆபரணங்களோடு வேடிக்கை விநோதங்களைக் கண்டு களிக்கப் பலர் கூடுகின்றனர். குடைராட்டை, குறிசொல்பவன், கூத்தாடி, ஜாலவித்தைக்காரன், வாத்திய முழக்கம், பலவகைப்பட்ட சாமான்களை விற்கச் சிங்காரித்திருக்கும் கடைகள்—காட்சிகளில்தான் எத்தனை வகை.

கூச்சலும் குதூகலமுங் கூடக் களைப்பையுண்டு பண்ணுகிறது. களைப்பு நீங்கிக் கண்விழித்துக் காட்சிகளைக் கண்டு களிக்க ஒரு கோப்பை சூடான தேனீர் வேண்டியதுவே. சிறு கிராமங்களிலும் தோட்ட மணங்கமழும் ப்ரூக் பாண்ட் தேயிலை கிடைக்கும். எங்கள் விற்பனையாளர்கள் புத்தப் புதிய சரக்கை இடைவிடாது வழங்குகிறார்கள்.

புதுமையிலும் மணத்திலும் தலை சிறந்தது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

தாய்மார்கள் அறிவர்

—உட்வர்ட்ஸ் க்ரைப் வாட்டரின்—
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

WOODWARD'S GRIPE WATER

keeps baby well

1-WW108-111' W. WOODWARD LTD. LONDON. ENGLAND

Agents:— **T. T. KRISHNAMACHARI & CO.**
12A Lingha Chetty Street, G. T. MADRAS.

Noting the events of the day
3rd June 1946
marriage fixed
jewels solicited &
Ordered at P.A.R's
1. necklace.
3 Pairs bangles,
1 Saree pin
1. Diamond nose screw
1. Pair thodu 1.5. cts.
all to be recd on 20
BASKARA
Better cultivate the diary habit
P. A. RAJU CHETTIAR & BRO.,
JEWELLERS
COIMBATORE.
LOUIS

கோடிக்கணக்கான உடல் நல மற்ற மக்களுக்குப் புத்துயி ரளித்து நரம்புகளுக்கு வலி வையூட்டி திடகாத்திரர் களாக்கி வரும் டானிக் ஜீவாம்ருதம். இன்னும் இரண்டு வருடங்களில்— பொன்விழா கொண்டாடும்

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட்,

டி, நகர் :: மதராஸ்.

பொருளடக்கம்

விய மலர் 5 | ஆனி இதழ் 11

இறுதிக் கட்டம் 11

கதம்பம் 14

வாழ்வு 19
கே. வி. கே.

புத்தக விமர்சனம் 23

ஒளியும் மின்சாரமும் 25
ஆர். கே. விசுவநாதன்

வீடு வேட்டை 29
டாக்டர் வே. ராகவன்

சித்ரா 33
கே. சுந்தரம்மாள்

சஞ்சலம் 45
வே. ரங்கராஜன்

பஞ்சாயத்தார் 49
கி. ஸந்தானம்

பஞ்சப் பாட்டு 52
யோகி சுத்தானந்த பாரதியார்

கண் பார்வை 57
க. கணபதி

குறிப்பு:- காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவை களில் அடங்கிய அபிப்பிரா யங்கள் அவற்றை எழுதியவர் களுடையனவே. அவைகளுக் குப் பத்திரிகாசிரியர் பொறுப் பாளியல்லர்.

198071

யூனியன் லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ் :-பம்பாய்

மானேஜிங் டைரக்டர் : ஜே. எம். அக்ஹானே

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 10,27,970

●

சென்னை மாகாணம் பூராவும், நல்ல தாராளமான நிபந்தனைகளில் ஆயுள், நெருப்பு, கப்பல் விபத்து இன்ஷ்யூரன்ஸ் அலுவல்களுக்கு ஊக்கமும் அனுபவமும் வாய்ந்த ஏஜண்டுகள் தேவை.

●

விபரங்களுக்கு

எல். எஸ். டிராஸி

பிராஞ்சு காரியதரிசி

செம்புதாஸ் தெரு, தபால்பெட்டி நெ. 285

மதராஸ்

A. D. S.

நைஜாம் சமஸ்தானங்கள், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ்நாட்டிற்கு ஏஜண்டுகள் :-

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்,

செகந்திராபாத்-பெஜவாடா-மதுரை.

காவேரி

விய மலர் 5 | ''சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்—'' பாரதியார் | ஆனி இதழ் 11

இறுதிக் கட்டம்

காபினட் தூதுகோஷ்டியினர் தங்கள் தீர்ப்பை வெளியிட்டு ஒரு மாதம் ஆகிவிட்டது. எனினும் இன்னும் நாட்டில் அவர்கள் அளித்த தீர்ப்பை ஒப்புக் கொண்டபாடில்லை. இன்னும் நீண்ட விவாதங்கள், சமரசப் பேச்சுக்கள் நிகழ்ந்துவருகின்றன. இதற்கு அடிப்படையான காரணமென்ன?

காபினட் கோஷ்டியினர் கையாண்டு வரும் முறை என்றே கூறவேண்டும். இறுதித் திட்டத்தைப்பற்றிய தீர்ப்பை நீண்ட நாள் சம்பாஷணைகளுக்குப் பிறகு வெளியிட்டனர். உடனடியாக இடைக்கால சர்க்காரை அமைக்கப்போவதாக வாக்களித்தார்களேயொழிய அதன் அமைப்பு எவ்வகையில் இருத்தல்வேண்டும் என்று நிர்ணயிக்கவுமில்லை, விவாதிக்கவுமில்லை. வருங்கால திட்டம் வகுக்கச் சில கொள்கைகளை அவர்களளித்த தீர்ப்பு கையாண்டுள்ளது. அதே கொள்கைகளை இடைக்கால சர்க்கார் அமைப்பதிலும் கையாளவேண்டியதே முறை. அதை விடுத்து, சமப் பிரதிநிதித்வம் என்ற பழைய பூச்சாண்டியைக் கிளப்பி விவாதம் நீண்டுகொண்டுவருகிறது. இவ்வளவு காலமாகச் செய்த முயற்சி எல்லாம் வீணாகிவிடும்போலிருக்கிறது,

காபினட் கோஷ்டியினர் இடைக்கால சர்க்கார் அமைப்புப் பற்றியும் ஒரு தீர்ப்புக் கூறப்போவதாக வதந்தி. இது உண்மையானால் அது வருங்காலத் திட்டம் நிர்ணயிப்பதில் வகுக்கப்பட்ட கொள்கைகளை அனுசரித்தே இருத்தல் அவசியம். இல்லையேல் பெருத்த பூசல்களுக்கு இடமளிப்பதாகும்.

இறுதித் திட்டத்தைப்பற்றிக் காபினட் தூதுகோஷ்டினர் அளித்த தீர்ப்பு பல அம்சங்களில் பிற்போக்காயுள்ளதுஎன்று காங்கிரஸ் காரியக்கமிட்டியார் கருதினர். சில சிக்கலான அம்சங்களைத் தெளிவுபடுத்தவேண்டுமென்று வற்புறுத்தினர். ஆனால் முற்றிலும் திருப்திகரமான பதில் வரவில்லை. எனினும் நிலையைச் சமாளித்துக்கொள்ளலாம் என்று சிற்சில அம்சங்களை மாற்ற அரசியல் நிர்ணய சபைக்கு உரிமையுண்டு என்றெண்ணி வாதாடி வந்தது. இத்தருணத்தில் ஜின்னாவும் லீக்கும் காபினட் தீர்ப்பைச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒப்புக்கொண்டுவிட்டதென அறிவிக்கப்படவே, இடைக்கால சர்க்கார் அமைப்பதைப்பற்றிப் பேச்சுக்கள் தொடங்கின. இதில் காங்கிரஸின் முக்கிய எதிர்ப்புக்கள் அமுங்கிவிட்டன. வேண்டா வெறுப்பாக உள்ள ஒரு சமப் பிரதிநிதித்வ அம்சத்தை மறுபடியும் இடைக்கால சர்க்காரில் புகுத்தவே கிளர்ச்சியெல்லாம் அதை ஒழிப்பதில் ஈடுபட்டுவிட்டது. இது ஒரு சூழ்ச்சியாக இருக்கலாம் என்று நமக்குத் தோன்றுகிறது. சமப் பிரதிநிதித்வத்தை எதிர்க்கும் முயற்சியில் இறுதித் திட்டத்திற்கு நாம் கொண்டுள்ள எதிர்ப்பை மறந்துவிடக்கூடாது.

எத்தகைய குறைபாடுகள் உள்ள திட்டமாயினும், அதிகாரம் இந்தியர் வசம்

மாறக்கூடியதாயிருப்பின் அதை ஏற்பதே நலம். ஆனால் உள்ளே நுழையும்போது வெளிவரப் பாதுகாப்புடன்தான் நாம் நுழையவேண்டும். எனவே இத்திட்டத்தை அரசியல் நிர்ணய சபை மாற்ற அதிகாரம் பெற்றதாயிருக்க வேண்டும். இதைத்தான் மஹாத்மா காந்தி வற்புறுத்துகிறார். எந்தத் திட்டத்திலும் குறைபாடுகள் இருக்கத்தான் இருக்கும். ஆனால் அதை மாற்றும் உரிமை நமது ஜனப் பிரதிநிதி சபைக்கு இருக்கவேண்டும்.

காபினட் தூதுகோஷ்டியினரை இந்தியாவுக்கு அனுப்புவதெனத் தீர்மானித்திருப்பதாக விடுத்த அறிக்கையில் பிரிட்டிஷ் பிரதம மந்திரி அட்லி துரை சொன்ன வார்த்தைகள் குறிப்பிடத்தக்கவை. "எத்தகைய அரசியல் அமைப்பு, தற்கால அரசாங்கத்திற்குப் பதில் அமையவேண்டுமென்பது இந்தியா தீர்மானிக்கவேண்டிய விஷயம். எங்களுடைய (பிரிட்டிஷார்) விருப்பமெல்லாம் அத்தகைய அரசியல் அமைப்பதற்கு ஒரு ஸாதனம் தேடித் தருவதே." காபினட் கோஷ்டியினர் தாங்கள் அளித்த தீர்ப்பில் இவ்வார்த்தைகளை முதலில் எடுத்துரைத்துவிட்டு, இந்தியக் கட்சிகளுக்குள் ஒற்றுமை ஏற்படாமையால் வருங்காலத் திட்டம் அமைக்கச் சில உபாயங்களைக் காட்டியிருக்கிறார்கள். இவையே அவர்கள் தீர்ப்பு எனப்படுவன. தங்கள் தீர்ப்பு என்று கூறாமல் தங்கள் சிபார்சு என்று இதை அவர்கள் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. அவர்கள் அளித்த திட்டத்தின் பாரா 16-ல் கூட தங்களுடைய நோக்கம் வருங்கால அரசியலின் அமைப்பை நிர்ணயிப்பதன்று; இதை நிர்ணயிக்கும் சபையைக்கூட்டி அதில் இந்தியர்களே முடிவுசெய்யுமாறு செய்வது என்று தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள்.

இதிலிருந்து அரசியல் நிர்ணய சபைக்கு இத்திட்டத்தை மாற்றப் பூரண அதிகாரம் உண்டு என்று தெளிவாகிறது. அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டவுடன் பூரண அதிகாரமும் அதனிடம் மாறிவிடுகிறது. இதைத்தான் மஹாத்மா காந்தி நன்குணர்ந்து வற்புறுத்துகிறார்.

இத்திட்டம் எக்கட்சிக்கும் பரிபூரண திருப்தியை அளிக்கவில்லை என்பது உண்மை. எனினும் இரு கட்சியினரும் வரவேற்கக்கூடிய அம்சங்கள் பல அதில் உள. ஆகவே, இதை வியாஜமாகக் கொண்டு அரசியல் நிர்ணய சபையில் இரு கட்சியினரும் கலந்துகொள்வதுதான் முறை.

திட்டம் வெளிவந்தபின் அதை இயற்றியவர்களுக்குக்கூட அதை ஒருமுகமாக வியாக்கியானம்செய்ய உரிமையில்லை. அது பொதுச் சொத்தாகிவிட்டது. இவ்வம்சத்தையும் அடிப்படையாகக்கொண்டு திட்டத்தை ஏற்று, அரசியல் நிர்ணய சபை அமைப்பது உடனடியாகச் செய்ய வேண்டிய காரியம்.

இடைக்கால சர்க்கார் அமைப்பதில் விவாதம் அர்த்தமற்றது. சில பொதுப்படையான கொள்கைப்படிதான் காபினட் தூதுகோஷ்டியினர் திட்டம் வகுத்துள்ளனர். அதில் சமத்துவ பிரதிநிதித்வம் கேட்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுவிட்டது. அப்படியிருக்கையில் அதை மறுபடியும் கிளப்புவது விதண்டாவாதமாகும். அதற்குக் காபினட் தூதுகோஷ்டியினர் செவிசாய்ப்பதும் ஆச்சரியகரமாயிருக்கிறது. காலம் கடத்த எண்ணியே இப்படிச் செய்கிறார்கள் எனத் தோற்றுகிறது.

கிரிப்ஸ் தூதுவந்தபோதும் இடைக்கால சர்க்கார் விஷயமாகத்தான் சமரசப்பேச்சு முறிந்தது. அதே நாடகம்தான் இப்பொழுதும் நடிக்கப்படுகிறது. அதே கிரிப்ஸ்தான் சமத்வ பிரதிநிதித்வத்திற்கு ஆதரவளிக்கிறார் என்று கூறப்படுகிறது. இப் பிரச்னையில் பேச்சு முறிவு ஏற்பட்டால் இனி பிரிட்டிஷாரின் நல்லெண்ணத்தில் எத்தகைய நம்பிக்கை வைக்க வேண்டுமென்பது புரிந்துவிடும். இதுதான் இறுதிக் கட்டம். இன்னும் இரண்டு மூன்று தினங்களில் ஜின்னாவின் பிடிவாதத்திற்குத் துணை புரிவது யார் என்பது தெளிவாகிவிடும்.

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

பனிமலைத் தென்றல் போன்று குளிர்ச்சி வாய்ந்ததும், அரிய மலர்களின் நறுமணம் போன்று களைப்பாற்றுவதுமான டாடா ஓடிகொலோன் உங்கள் தினசரி உபயோகத்திற்காயினும் சரி, ஜுரத்தால் வேகும் நெற்றித் தடத்தை குளிரப் பண்ணுவதற்காயினும்சரி உகந்தது தான்.

எப்பொழுதும் ஒரு பாட்டில் வீட்டில் கையோடு காவலாய் வைத்திருங்கள்.

டாம்கோ விற்பனை இலாகா 19A, வாணியர் தெரு, த. பெ. நெ. 31, மதராஸ்.

கதம்பம்

பலே பம்பாய்!

"லண்டன் சாக்கடை ஜலம் இந்தியாவில் கிடைக்கும் பாலைவிடச் சுத்தமானது"!-இவ்வாறாக ஓர் ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் அனுபவத்தின் பேரில் விஷயமறிந்து கூறியுள்ளார். லண்டன் மாநகர் சாக்கடை ஜலத்தின் விசேஷத்தை நாம் அறியாவிட்டாலும் நம்முடைய ஊர்களில் விற்கப்படும்-விநியோகிக்கப்படும்-பால் என்று சொல்லப்பட்ட திரவப் பொருளைப்பற்றி நன்கு தெரிந்து கொண்டுள்ளோம்.

நாம் உபயோகிக்கும் பால் எனப்படுவது மாடுகளின் மூலம் கிடைக்கும் உணவுப் பொருளா அல்லது ஒருவித பால்நிறமுள்ள மண்ணைக் கரைத்து விநியோகிக்கும் செயற்கைப் பொருளா அல்லது தண்ணீரில் வெள்ளைச்சாயம் ஏற்றிய பொருளா என்பதைத் திட்டமாகக் கூறுவது கடினம். பால் என்ற உண்மைப் பொருளும் நாம் சாப்பிடும் திரவப் பொருளில் கலக்கப்பட்டுளது என்பது உண்மையானால் பாலுடன் தண்ணீர் சேர்க்கப்பட்டதா அல்லது தண்ணீரில் பால் கொஞ்சம் கலக்கப்பட்டதா என்பதைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. தண்ணீர் கலந்ததானது சுத்தமான தண்ணீரா என்பதை ஆண்டவனே அறிவான். வெளுத்ததெல்லாம் பால் என்றே அருந்துகிறோம்.

பால் இன்றியமையாத முக்கிய உணவுப் பொருள் என்பதை யாவரும் அறிவார்கள். ஏழை மக்கள்கூட அதை முக்கியமாக, 'காப்பி', டீ முதலியவற்றுடன் கலந்து உபயோகிக்கின்றார்கள்.

நிறையக் காசு கொடுத்தாலும் சுத்தமான பால் டிப்போக்கள் முதல்தர மோசடியான ஸ்தாபனங்களாகிவிட்டன. கலப்புச் சட்டப்படி தண்டனையுண்டு என்பதைக் கலப்புப் பால் விற்பவர்கள் அசட்டை செய்கின்றார்கள். கருட புராணத்தில் 'பாலுடன் நீரைக்கலந்து விற்ற பாவிக்கு, காலுடன் கால் கட்டப்பட்டு கழுவிலேற்றப்படும்,' என்று சொல்லியிருப்பது பலருக்குத் தெரியாது. தெரிந்தாலும் கட்டுக்கதை என்று ஏளனம் செய்வோர் பலர்.

அரசாங்கம் பாலின் மகிமையைப் பற்றிப் பிரசாரம் மட்டும் பலமாகச் செய்துள்ளது. சென்னை அரசாங்கம் புட்டிப்பால் வரவழைக்கவும், பால்பொடி கிடைக்கவும் திட்டமியற்றியது. உருப்படியாக ஒன்றும் நடைபெறவில்லை. ஆனால் பம்பாய் மாகாணம் முந்திக்கொண்டுவிட்டது! மாகாணத்தின் பல பாகங்களில் அரசாங்கத்தின் ஆதரவில் பல பெரிய பால் பண்ணைகளை வைத்து நடத்த ஏற்பாடு செய்துள்ளது. ஒவ்வொரு பண்ணையிலும் ஆயிரம் நல்ல மாடுகள் போஷிக்கப்படுமாம். இலாபமில்லாமல் உற்பத்தி விலைக்கு மக்களுக்குப் பால் விநியோகிக்கப்படுமாம். 75 லட்சம் ரூபாய் இந்தத் திட்டத்துக்குச் செலவு.

'மக்களுக்குச் சுத்தமான பால் கிடைக்கச் செய்வதே எங்கள் முதன்மையான கடமை' என்று பம்பாய் மந்திரிகள் பிரகடனம் செய்துவிட்டார்கள்.

எல்லா நல்ல திட்டத்திற்கும் சென்னையைப் பார் என்று சொல்லிவந்த காலம் மலையேறிவிட்டது. மந்திரிகளின் சம்பளம் கூடப் பம்பாயில் குறைவு. சென்னை மந்திரி சபை பால் விஷயத்திலாவது பம்பாயைப் பின்பற்றுமா? பலே பம்பாய்!

புதிய சக்தி

மது விலக்கை ஆதரிப்பதாகச் சொல்லும் திருக்கூட்டத்தார்கள் ஆளுக்கொரு மொந்தை கள்ளை உண்டால் அவர்களது பிரசாரத்தைக் 'குடிகாரன் பேச்சு' என்றே மக்கள் ஏசுவார்கள். சமாதானத்திற்குப் பாடுபடுவதாகப் பறை சாற்றிவிட்டுப் பயங்கர ரகசிய ஆயுதங்களை வல்லரசுகள் தயாரித்து அதன் அற்புத கொடிய சக்திகளை வெளியிட்டுக்கொண்டிருந்தால் என்ன நினைப்பது! என்ன சொல்வது?

வருங்காலத்தில் "விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் ஒழிக!" என்று ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு நல்ல ஆதரவு கிட்டுமென்றே நினைக்கிறோம்! மனித சமூகத்தின் நன்மைகளைப் புறக்கணித்து, மனிதப் பூண்டையே அழிக்கும் விதத்தில் ஆராய்ச்சியாளர்கள் தங்கள் அறிவையும், ஆற்றலையும் பயன்படுத்துவது கொடிய குற்றம். பெரிய நகரங்களை அழிப்பதற்கு அணுகுண்டு உபயோகமெனக் கண்டுபிடிக்கப்பட்டது. மனிதப் பூண்டையழிக்க மற்றொரு ரகசிய ஆயுதம் அமெரிக்காவில் அவதரித்துள்ளது. "அணுகுண்டைவிடப் பன்மடங்கு



ஆபரேஷனுக்குப்

பிறகும் அதிர்ச்சிக்குப் பிறகும், விபத்துக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. நீடித்த ரோகங்களாலும், பிரஸவத்தாலும், ஜுரங்களாலும் கூந்தல் நஷ்டமடைவதுண்டு. மயிர் விடாமல் உதிர்ந்து வந்தால் கேசத்துக்குப் பதில் அடித்தலையே புலப்படும்.

எந்தக் காரணத்தால் உதிர்ந்தாலும், கேசவர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள். இழந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலை வளரச்செய்யுங்கள். இருக்கும் கூந்தலை இழக்காமல் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 12

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயன சாலை

கோயமுத்தூர்.

போலிகளை வாங்கி மோசம் போகாதீர்கள். "கேசவர்த்தினி தென்னிந்திய ரஸாயன சாலை என்ற பெயர்களைக் கவனித்து வாங்குங்கள்."

அதிகசக்தி வாய்ந்தது. கொடியது. ஒருவித விஷப் புழுக்களை ஆகாய விமானங்களிலிருந்து வெளியே விட்டால் பல பெரிய நகரங்கள் பாலை வனங்களாகிவிடும்! புல்பூண்டுகள்கூட மிச்சப்படா. அவை மட்டுமா? பூமிக்குள் விதைக்கப் பட்டிருக்கும் முளை கிளம்பாத விதைகளும் பஸ்மீகரமாகிவிடும். ஒரே ஒருதரம் உபயோகித்தால் போதும்; நகரத்துக்கு நகரம் புழுக்கள் பரவி நிர்மூலமாக்கிக் கொண்டே போகும். அதன் சக்திக்கு எல்லை காணமுடியாது?"

இப்படிப்பட்ட பயங்கர சாதனமிருப்பது உண்மைதானா அல்லது பிரசார தந்திரமா என்று நினைக்கலாம். எப்படி இருந்தாலென்ன? வெள்ளை வல்லரசு நாடுகளுக்குச் சமாதானத்தில் நம்பிக்கையில்லையென்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது.

அட்டைப் படம்

பண்டித நேருவும் அபுல் கலாம் அஸாதும் காட்சி அளிக்கின்றனர். கண் கொள்ளாக் காட்சி இது. தேசாபிமானத்திலும் ஒழுக்கத்திலும் காந்திஜிக்கு அடுத்தபடி இவ்விரு தலைவர்களே எனலாம். நேரு தீர்க்கதரிசி, விசால மனப்பான்மை கொண்டவர், கொள்கையினின்று வழுவாது நடக்க விரும்புகிறவர். அஸாத் ஒரு கவி, ஜாதி மத பேதமில்லாத மதப் பற்றுள்ளவர், நெறி தவறாமல் நடக்கும் சீலர். ஜின்னாவின் விதண்டாவாதத்திற்கிணங்கி நாட்டிலுள்ள பெரும்பாலான முஸல்மான்கள் அவர் வலையில் சிக்குண்டு களிக்கையிலும்கூட, எதையும் பொருட்படுத்தாமலும் ஜாதிமதப் பிரச்னைகளில் ஈடுபடாமலும் தேசியத்தையே முதன்மை எனக் கருதி, காங்கிரஸில் நீண்ட நாளாக உழைத்துவரும் சீலர் அஸாத். இவர் காங்கிரஸில் இந் நெருக்கடியான காலங்களில் இருந்து செய்து வந்த தொண்டை யாரும் மறக்க முடியாது. இவருடைய பேராதரவினால்தான் காங்கிரஸ் ஒரு தேசீய ஸ்தாபனம், ஹிந்துக்களின் ஸ்தாபனம் மட்டுமன்று என்று நிரூபிக்க முடிந்தது. நீண்ட நாளாற்றிய தொண்டிற்குப் பிறகு நாட்டின் மகோன்னத பதவியான காங்கிரஸ் தலைமையிலிருந்து விலகிக்கொள்கிறார்.

லாக்ஸாமிண்ட்

இனிய தித்திக்கும் சுகபேதி பெப்பர்மிண்ட் மாத்திரைகள்

தயாரிப்பவர்கள்:- செல்டோனு பார்மகல்ஸ்

ஏஜெண்டுகள்:— தாதா & கம்பெனி, சென்னை.

எங்கும் கிடைக்கும்

சகலவிதமான வலிகளும் மாயமாய் மறைந்து விடும்!

ஸாரிடோன்

மாத்திரைகள் சாப்பிட்ட பத்தே நிமிஷங்களில்

தியாகிகள் கோரும் ஊதியம்.

காங்கிரஸ் மந்திரி சபையைச் சேர்ந்தவர்கள் தியாகிகள். அதுவும் நமது மாகாண மந்திரிகள் பொறுக்கியெடுத்த தியாக மணிகள்! இந்தத் தியாக மணிகளின் சேவைகளை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். அதற்காக அவர்களுக்கு ஊதியமும் கொடுத்தாகவேண்டும்.

ஊதியம் எவ்வளவு? சம்பளம் ரூ. 1000 மாதம்தோறும். தியாகிகளுக்கு மோட்டார் கார் வசதிவேண்டாமா? அதற்காக மாதம் ரூ. 250. குடியிருப்பு வசதிக்கு ரூ. 250. மற்றபடி அவர்களது பிரயாணச் செலவுகள், இதர படிச் செலவுகள்—இவைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தியாகிகளெனப்பட்டவர்களுக்கு இவ்வளவு கொழுத்த சம்பளமும் மற்றவையும் எதற்கு? பிரதம மந்திரி பிரகாசம் பந்துலு, "வாழ்க்கை நிலை உயர்ந்துவிட்டது, அரையணு விற்ற எலுமிச்சம்பழம் ஒரு அணுவுக்கும் கிடைப்பதில்லை என்று சமாதானம் சொல்லுகிருர். பழைய மந்திரிகள் வாங்கிய 500 ரூபா போதாதா என்ருல் அதற்கும் பதில் இல்லை" பம்பாய் மாகாணத்திலுள்ளதைவிடச் சென்னையில் வாழ்க்கைத் தரம் உயர்வா என்பதற்கு எதற்காகப் பம்பாயைப் பின்பற்ற வேண்டுமென்ற பதில் கிடைக்கிறது. மற்ற ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பள விகிதம் $17\frac{1}{2}$ சதம் வீதம்தான் உயர்ந்துள்ளதே என்று கேட்டால் அதைப் பற்றி இப்பொழுது என்ன பேச்சு எனப்படுகிறது. மற்ற மக்களின் ஏழ்மை நிலைமையை உணர வேண்டாமா என்பதற்குப் பதில் சொல்வாரில்லை. போகட்டும், உலகம் புகழும் உத்தமர் காந்தியடிகளின் வார்த்தைகளுக்கு மதிப்பு வைக்கலாதா என்பதற்கு 'மௌனம் சர்வார்த்த சாதனம்' என்று இருந்துவிடுகிருர்கள். மக்களுக்குச் சேவைசெய்ய ஏராளமான மந்திரிகள் எதற்கு என்று கேட்பாரில்லை. யாதொரு சேவையும் செய்ய முடியாத 'பார்லிமெண்டரி செகரட்டரிகள்' எதற்கு? அவர்களுக்கு வேறு ஏன் பொதுப் பணத்தை விரயம் செய்யவேண்டும் என்பதைப்பற்றிச் சிந்தனை செய்வோர் இல்லை.

பதவி மோகமும் பணத்தாசையும் தியாகிகளையும் மயங்கச்செய்யும் என்பது வெளியாகிவிட்டது. இதற்காக என்ன சூழ்ச்சிகள்? என்ன தடபுடல்? எல்லாம் வெட்கக்கேடாயிருக்கிறது.

"போதுமையா உங்கள் சேவை! அப்படிச் சேவைசெய்யத்தான் செய்வோம் என்று முரண்டினுல் ரூ. 500 மட்டுமே எல்லாவற்றிற்கும் மாதாமாதம் கொடுப்போம், அது கட்டாவிட்டால் வேறு இலாபகரமான வேலையைத் தேடிக்கொள்ளும்" என்று சொன்னுல் மந்திரிகள் கேட்பார்களா! பெரிய இடத்து வார்த்தைக்கே மதிப்பு வைக்காதவர்கள் நாம் சொல்வதையா சட்டை செய்வார்கள்? எல்லாம் நம்முடைய விதி ஸ்வாமி!

டாக்டரும் மருந்தும்

உணவுப் பஞ்சம்! அதுவும் தென்னுட்டில்! உற்பத்தி குறைவா? பிரஜோற்பத்தி உயர்வா? காரணத்தைப் பற்றிக் கவலையில்லை. தடுக்க வழியாது?

உண்ணு விரதமிருத்தல், உயர்ந்த நோக்கம். ஆனுல் சாத்யமில்லாதது. சர்க்கரை வள்ளிக் கிழங்கை நிறையப் புசிக்கலாம்; வயிற்று நோயை யாரும் வரவேற்கமாட்டார்கள். கோதுமை? பழக்கமில்லாத பொருள். அன்னிய நாடுகளின் உதவி! இலகுவில் கிட்டுமெனத் தோன்றவில்லை. பழம், பால், காய்கறிகள் சிலாக்யம்; ஆனுல் எளிய மக்களுக்குக் கிட்டாதவை. உண்ணும் அளவைக் குறைத்தால்! அதற்கும் ஒரு வரம்புண்டு. பின் வழிதான் என்ன?

பிரதம மந்திரி பிரகாசம் பந்துலுகாரு செப்புவதற்குச் செவிசாய்ப்போம்.

1. உண்ணும் அளவைக் குறைத்தல். ரேஷன் விதிகளைமீறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை.

2. குறைந்த விலைக்குக் கோதுமையை வினியோகித்தல்.

3. கிராம கமிட்டி, தாலூகா கமிட்டி, ஜில்லா கமிட்டி இவைகள்மூலம் உள்ளதைத் திறம்படச் சுரண்டுதல். பதுக்கலைக்கண்டு வெளிப்படுத்துபவர்களுக்கு வெகுமதி!

4. உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்யத் தூண்டுதல். கிணறு வெட்டச் சொற்ப மான்யம். முப்போகம் விளையச் செய்தால் ஏக்கருக்கு ரூபா 15 இனம். ஜூன் மாதக் கடைசிக்குள் தானியம் கொடுத்தால் மணங்குக்குக் கூடுதல் விலை ரூபா 1. ஜூலை மாதக் கடைசிக்குள் உற்பத்தி செய்யப்படுவதற்குப் பரிசு!

காலத்திற்கு உதவ அடிப்படையான திட்டம் அதிக உற்பத்தியே. அதற்கு விவசாயி

களிடையே ஊக்கமூட்டவேண்டும். அத்தகைய ஊக்கமளிக்கக்கூடிய மருந்து யாது? டாக்டர் ராஜன் அவர்கள் பகர்ந்துள்ளதைக் கவனிப்போம். "விவசாயம் மூலம் அரசாங்கத்துக்கு நல்ல வருமானமுண்டு என்ற கொள்கை கைவிடப்படவேண்டும்." அருமையான, குணத்துக்குக் காரண்டியுள்ளதான மருந்து. விவசாயிகளின் வரிச் சுமை குறையவேண்டும். விவசாயிகளுக்கு வரி யில்லையென்றுகூட அரசாங்கம் பறை சாற்றி விடலாம். நிச்சயமாகப் பலன் கிடைக்கும். வெறும் பிரசாரம் பயனளிக்காது. ஒரு மாதத்திலும், இரண்டு மாதங்களிலும் பயிர்கள் கிளம்பிப் பலன் கொடுக்க மந்திர சக்தி வேண்டும். முயற்சி வீண்.

கிராம கமிட்டி முதலியனவற்றின் சேவைகள் ஓரளவே நல்லது. முழுவதிலும் நம்பி விட்டால் மோசம்! விளையும் பொருள்களுக்கு நல்ல விலை ஏற்படுத்துவது நலம். பதுக்கல் குறையும். காட்டிக்கொடுப்பவர்களுக்கு இனும் கொடுப்பதாகச் சொல்வது அபாயம்! வீணான துன்புறுத்தல் அதிகப்படும். வாய்க்கால்கள், பாலங்கள், அணைக் கட்டுகள் இவைகளை அரசாங்கமே கட்டுவதுபோல் கிணறுகள் வெட்டுவதும் அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் நடைபெறுவது நலம். மான்யம் கொடுத்தால் போதுமானதாக இருக்கவேண்டும்.

மற்றொரு முக்கிய விஷயம். எளிய மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள்களாகிய மிளகாய், மல்லி, பருப்பு வகைகள் இவைகளின் விலைகளைக் குறைத்துக் கட்டுப்படுத்த வேண்டும். அப்பொழுதே மக்களுக்கு ஊக்கம் அதிகமாகும்.

நல்ல நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கும் திட்டங்கள் உடனடியாகச் செய்யக்கூடியவையல்ல. பெரிய பண்ணைகளை அரசாங்கம் எடுத்து நடத்தல், மிராசுதார்களை ஒழித்துக் கட்ட உழுபவர்களுக்கு உரிமையளித்தல் முதலியவைகள் ருசிகர விஷயங்கள்.; ஆனல் சுலபமல்ல. தற்காலத்துக்குப் பயன் படுமா என்பது சந்தேகம்.

"கள்ளமார்க்கெட்"

ஆறு மாதகாலத்திற்குள் கள்ளமார்க்கெட்டை ஒழித்துவிடுவேன்!" என்று பிரதம மந்திரி பிரகாசம் அவர்கள் சபதம் செய்துள்ளதைப்பற்றி கள்ளமார்க்கெட் சங்கத்தலைவர்.........அவர்களை நமது நிருபர் பேட்டிகண்டார், சங்கத்தலைவர் கூறியதாவது.

இதற்கு முன் அட்வைசர் அரசாங்கமும் இப்படித்தான் ஆர்ப்பாட்டம் செய்தது. கடுமையான தண்டனை விதித்தது. நாங்கள் திடுக்கிடவில்லை. மக்களின் ஆதரவும் அதிகாரிகளின் தயவும் பூரணமாக இருக்கையில் யார் என்ன செய்யமுடியும்?

"இந்தப் பஞ்சகாலத்தில் எங்களுடைய சேவை மகத்தானது; அத்யாவசியமானதும்கூட. மக்களது அத்யாவசிய தேவைகளை வேறு யாரால் கவனிக்க முடியும்? டிக்கெட் இல்லை, இடமில்லை என்று ரயில்வே அதிகாரிகள் கண்டிப்பாய்க் கூறிவிடுகிறார்கள்; கொஞ்சம் கூடக் காசை வீசினல் நாங்கள் இடவசதி தருகிறோம். துணியில்லை, உணவுப்பொருளில்லை என்று மற்றவர்கள் கையை விரிக்கையில் எங்களுக்கு இரக்கம், தயை எல்லாம் ஒருங்கே திரண்டுவிடுகிறது! கொஞ்சம் அதிகம் வாங்கிக்கொண்டு தேவைகளைக் கவனிக்கிறோம். அதிகாரிகளால் விரட்டியடிக்கமுடியும், அலக்கழிக்க முடியும், தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியுமா? எங்கள் சேவைக்குத் தடை ஏற்பட்டால் மக்கள் தவியாய்த் தவிப்பார்கள்.

"ஏதோ நாங்கள் கொள்ளை இலாபமடிப்பதாக அறியாத சிலர் வாய் கூசாமல் சொல்லிவிடுகிறார்கள். கஷ்டத்துக்குத் தகுந்த ஊதியம் வேண்டாமா? அசட்டுத்தனமாக அகப்பட்டுக்கொண்டால்?

"சாமான்கள் தட்டு இருக்கும் வரை கள்ள மார்க்கெட் இருந்தே தீரும்.

"பதுக்கிவைத்துக் கள்ளமார்க்கெட்டை உண்டுபண்ணுவது நாங்களென அறியாமையால் கூறப்படுகிறது; ஓரளவு உண்மைதான். ஆனல் சாமான்கள் குறைவு என்பதை மறக்கமுடியுமா?

"உண்மையில் நாங்கள் பரோபகாரிகள். எங்களைக் குறை கூறுவது எளிது, நாங்கள் செய்யும் சேவையை மற்றவர்கள் செய்வது கடினம். எங்களை ஒழிக்க முயல்வது மக்களைத் துன்புறுத்துவதுபோலாகும்.

"நிற்க, எங்களைத் தடுக்க முயல்வது இயலாது. மந்திரிகளைவிடத் தந்திரிகள் நாங்கள். வேண்டுமானல் மக்களை அவர்களது தேவைகளைக் குறைத்துக் கொள்ளமன்றாடட்டும். பஞ்சம் உள்ளளவும், பாருள்ளவும், கடல் நீர் உள்ளளவும், நாங்கள் இருந்தே திருவோம். எதற்குமஞ்சோம்! இது சத்தியம்!

வாழ்வு

கே. வி. கே.

"டாண், டாண்!" என்ற ரம்மியமான மணி ஓசையைக் கேட்டு, கோயிலை நோக்கி நடந்தேன்.

மாலைவேளை. பரிசுத்தமான ஆகாயம். தென்றலின் குளிர்ந்த அணைப்பு. சோலைகளினின்றும் எழுந்த சுகந்த மணம். அருவியின் சலசலப்புச் சங்கீதம். வேறென்ன வேண்டும்! பட்டண வாழ்க்கை நெருக்கடியில் அலுப்புற்றுக் கிராமத்தில் சில நாட்களைக் கழிக்கச்சென்ற எனக்கு இவைகளெல்லாம் ஒருங்கே சேர்ந்து இன்பமூட்டின.

இயற்கையில் ஆழ்ந்து சென்றவன் சொக்கநாதரின் ஆலயத்தை அடைந்ததும் நின்றேன். ஆஹா, சிறிய கோவிலாயிருந்தாலும் அதை அமைத்தவன் கலையில் எவ்வளவு பெரியவனாக இருக்கவேண்டும்! கல் தூண்களில் காணப்பட்ட சிலைகள் ஒவ்வொன்றும், அவைகளைச் சிருஷ்டித்தவனைப் பற்றிப்பெருமை கொள்வதுபோலல்லவோ தோன்றுகிறது! சுவர்களிலும் மண்டபத்தின் விமானங்களிலும் தீட்டப்பட்ட ஓவியங்களில்தான் எவ்வளவு ஜீவ களை! பிராகாரத்தின் நாற்புறச் சுவர்களிலும் அவன் வரைந்திருந்த அபூர்வ வர்ண ஜாலங்கள் சொக்கேசனின் அறுபத்துநாலு லீலைகளையும் அள்ளியள்ளி வீசின.

பண்டை நாட்டுக் கலைஞர்களையும், கலை வளர்த்த அரசர்களையும் எண்ணி வியந்துகொண்டே அலங்காரமண்டபத்தினுள் பிரவேசித்தேன். அங்கேதான் சொக்கநாதரின் விக்கிரகம் அலங்கரிக்கப்பட்டு வைத்திருந்தது. மேடை முழுவதும் சிறிய தீபங்களினால் அழகு செய்யப்பட்டு அவைகளின் நடுவே வீற்றிருந்த அழகேசனின் கம்பீரம் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

சற்று நேரத்தில் தெய்வாராதனையாயிற்று. விபூதிப் பிரஸாதம் பெற்றுக்கொண்டு பக்தர்கள் யாவரும் திரும்பினர். அப்பொழுதுதான் அங்கு அம்மாதைக் கண்டேன்.

அவள் விதவை. வயது சுமார் ஐம்பதுக்கு மேலிருக்கும். ஏழ்மைத் தோற்றத்தை அளித்தாலும் அவள் முகத்தில் தோன்றிய பெருந்தன்மையும் சாந்தமும் பார்ப்பவர்களுக்குப் பக்தியை ஊட்டுவதாயிருந்தன. நரைத்த இமை, உள்ளடங்கிய ஒளியற்ற கண்கள், முதுமையின் தளர்ச்சி யாவும் சேர்ந்து அவள் முகத்தில் சோகத்தின் சாயலாகப் பிரதிபலித்தன. அவள் சிறிய கண்களில் தோன்றிய ஆழ்ந்த ஏக்கம் மறக்கமுடியாததாயிருந்தது.

மேடையின் கடைசிப் படியில் அவள் அமர்ந்திருந்தாள், வழக்கம்போல. ஆம், நான் அவளை இதற்குமுன் அதேயிடத்தில் பார்த்திருக்கிறேன். கரங்குவித்து அவ் விக்கிரகத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள் ஏங்கிய கண்களுடன். வாயால் ஏதோ பிரார்த்தனை செய்துகொண்டே வழிந்த கண்ணீரையும் துடைக்காமல் தனியாக அவள் உட்கார்ந்திருப்பதைக் காணச் சகியாமல் நானும் மற்றவர்களைப் போல் வெளியே வந்தேன். அக்கிராமவாசியான அவளுக்கு ஏற்பட்ட துராத்துயர் யாதாயிருக்கும் என்று எண்ணிக்கொண்டே நடந்தேன் சத்திரத்தை நோக்கி.

உத்தியோக நிமித்தம் மறுநாளே நான் பட்டணம் புறப்படும்படி நேர்ந்துவிட்டது. அதற்குப்பின் இரண்டு வருஷகாலம் கிராமத்திற்குப் போகவேயில்லை. மூன்றாம் வருஷம் கோடையில் பத்து நாள் ரஜாவில் அங்குச் சென்றேன். மன நிம்மதியுடன் ஒரு வாரமும் கழித்தேன்.

அன்று வெள்ளிக்கிழமை சூரியாஸ்தமனத்தை ஆனந்தித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தேன் ஆற்றங்கரை மணல் மேட்டின்மேல். சங்கின் ஒலி கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஆம், சவம்தான் வந்துகொண்டிருந்தது. கூட்டமின்றி நான்கே பேர் தூக்கிக் கொண்டுவந்தனர். மெலிந்து இளைத்திருந்த அச்சவத்தின் முகம் இருபத்துநாலு வயது காளைப் பருவத்து இளைஞனின் முகமாயிருந்தது. சவத்தின் பின்னால் தள்ளாடிக்கொண்டே நடந்து வந்த ஸ்திரீயைப் பார்த்து ஒருகணம் திகைத்துவிட்டேன். ஆம், அவளேதான். இரண்டாண்டிற்கு முன் அவ்வூர்க் கோவிலில் பார்த்த அம்மாதுதான் அவள். இரண்டு வருஷத்தில் எவ்வளவு மாறிவிட்டாள்! அவள் உடலில் இவ்வளவு முதுமை எப்படி

சமீப வெளியீடுகள்

1 கன்யா குமாரி 2 8
த. நா. குமாரசாமி, பி. ஏ.

2 சக்திவேல் 2 0
அகிலன்

3 மோகினி 2 0
வேங்கட லக்ஷ்மி

4 தமிழகம் "ஊரும் பேரும்" 5 0
ரா. பி. சேதுப் பிள்ளை
சிறப்புரை : திரு. வி. க.

5 கதைக் கொடி 2 8

6 புயல் 5 0
மஹா கவி டாகுர்

7 மாணவர்க்கு நிர்மாணத் திட்டம் 1 8

8 காந்தி காட்டும் பாதை 0 6

9 கதைக் கோவை 4 10 8
75 எழுத்தாளர்களின் கதைகள் 75

10 திருப்புகழ் விருத்தியுரை 7 8

11 கம்பன் கவியமுதம் 2 8
17 அறிஞரின், 17 அரிய கட்டுரைகள்

12 Philosophy of Bheda Bheda 4 0
by Sri P. N. Srinivasachari M.A.

13 Rikshawala & other Stories 2 8
Manjeri S. Eswaran

விரைவில் வருபவை

1 தாய்ப்பால்
2 வஸந்தா
3 போகிற வழியில்
4 சந்திரிகா
5 Finger of Destiny

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் — சென்னை

வந்தது! கன்றையிழந்த பசுப்போல், முகத்தில் கண்ணீர் சோரப் புலம்பிக்கொண்டு நடந்த அவளைக் கண்டு என் மனம் பதைத்தது. இறந்தவன் அவள் மகனாயிருக்கும் போல் தோன்றுகிறது. வாடி, கொடி போல் துவண்டிருந்த அவளுடலைத் தாங்கிக் கொண்டு வந்தாள் அன்பே உருவான மற்றொரு ஸ்திரீ. இரண்டொரு கிராமச் சிறுவர்களைத் தவிர வேறு ஒருவரும் பின் தொடரவில்லை.

ஆற்றங்கரையின் அருகிலிருந்த மசானத்தில் சவக்குழி தோண்டப்பட்டது. கோவில் அர்ச்சகரே ஏதோ கடமைக்காக மந்திரங்களை உச்சரித்தார். கரைகாணாத துன்பத்துடன் ஈன்சுரத்தில் கதறிய அம்மாதின் ஓலத்தைக் கவனியாமல் குழியில் மெதுவாக இறக்கினர் அச்சவத்தை. ஒரு பக்கம் பிடி தளரவே உணர்ச்சியற்ற அச்சவம் குழியின் ஓரத்தில் மோதியதைக்கண்டு அவள் தன் இருதயத்தில் பட்டுவிட்டதைப்போல் துடித்ததைப் பார்த்த என் கண்கள் கலங்கிவிட்டன. ஐயோ, தாய்ப் பாசத்திற்கு ஓர் எல்லை இல்லையா!

திடீரென்று உணர்வடைந்தேன். சவக்குழியின் அருகில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த என்னையே நான் வெறுத்தேன். துன்பத்தில் ஆழ்ந்திருந்த அத்தாய்க்குக் கொடுமை இழைத்து விட்டதாகவே உணர்ந்து மெதுவாக அவ்விடத்தை விட்டுச் சென்றேன்.

என் ஹிருதயத்தில் ஒரு பெரிய பாரம் அழுத்தியது. "சி! என்ன உலகம்! முதுமை வயதில் ஏழ்மையுடன் பரிதவிக்கும் மாது தன் மகனையும் இழப்பதென்றால், அவளுக்கு வேறென்ன இருக்கிறது! 'கண் கண்ட தெய்வம்' என்று அவ்வூரரால் போற்றப்படும் சொக்கநாதப் பெருமான் இவள் விஷயத்தில் ஏன் இப்படிக் கண் திறக்காமலிருக்கவேண்டும்!"

அன்றிரவு தூங்காமல் தூங்கினேன். இறந்து சென்ற என் அன்னையின் உருவம் கண்முன் தோன்றியது. அன்பின் கடல் அல்லவா அவள்; தான் பிள்ளையைப் பெறும் போது பாசத்தையும் பெறுகிறாள். பாலூட்டும்போது பிள்ளைக்குப் பாசத்தையும் அல்லவா ஊட்டிவிடுகிறாள்.

மறுநாள் காலை வெளியே சென்றவன் கோவில் பக்கம் சென்றேன். முதல் நாள் சவத்தின்பின் அத்தாயைத் தாங்கிச்சென்ற ஸ்திரீ அங்கு நின்றுகொண்டிருந்தாள், என்னைப் பார்த்ததும் மரியாதையாக

ஒதுங்கி நின்ருள். அவளருகே சென்று பேச்சுக் கொடுத்ததில் அவள் கூறினுள்.

''மகனை இழந்த அத்தாய் அவ்வூர் வாசி தான். வெகுகாலமாய் இந்த ஸ்திரீயின், வீட்டில்தான் அவள் கணவனுடன் வசித்து வந்திருக்கிருள். அவள் கணவன் ஏதோ ஒரு சிறிய கடையில் வேலைபார்த்து வந்தான். எளிய வாழ்க்கை யாளுலும் இன்பமாயிருந்தனர்.

அவர்கள் இன்பத்தை அதிகப்படுத்தப் பிறந்தான் சோமேசன். சிறு வயதிலேயே புத்தி கூர்மையும் நேர்மையும் பெற்றிருந்த மகனைக்கண்டு பெற்ருேர்கள் பூரித்தனர். அவர்கள் வாழ்வைத் துலக்க வந்த ஜோதி என்றே அவனைக் கருதினர்.

ஆனுல் அவர்கள் ஆனந்தம் நீடிக்கவில்லை. சோமேசனின் தந்தை கொள்ளை நோய்க்குப் பலியாளுன். இளம்வயதில் தாலிப்பாக்கியத்தை இழந்த அவள் கதறினுள், துடித்தாள், புலம்பினுள், சோர்ந்தாள். மாண்டவன் என்னவோ மீளவில்லை.

காலம் மனப்புண் ஆற்றும் என்றபடி சிறிது காலத்தில் அவள் சற்று ஆறுதலடைந்தாள். பத்து வயதான சோமேசனே பிறகு அவளுக்கு இவ்வுலகமாயிருந்தான். தொட்டுத் தொட்டு வளர்த்தாள் அவனை. தன் அன்பை எல்லாம் அவள்மேல் சொரிந்தாள்.

பதினெட்டு வயதை அடைந்தான் சோமேசன், அவ்வூரிலேயே எல்லோராலும் புகழப் பட்டான். நேர்மைக்கும் தூய்மைக்கும் அவனே உதாரணமாய் விளங்கினுன்.

ஐயோ! வஜ்ரம் பாய்ந்த அவன் தோள்களின்மேல் சாய்ந்துகொண்டு பெருமையுடன் அவன் தாய் கோவிலுக்குச் செல்வதைக் காண வேண்டுமே! கொடிபோன்ற அவள் வாழ்க்கை படர்வதற்கு அவன் ஸ்தம்பமாய் விளங்கினுன் ஐயா'' என்று எனக்குக் கூறிக்கொண்டுவந்த அந்த ஸ்திரீயின் மொழிகளில் ஒலித்த ஆர்வம் என் மனதில் ஆழப் பதிந்தது. அவள் மேலும் கூறினுள்:

''ஒருநாள் வெளியே சென்ற சோமேசன் வீடு திரும்பவில்லை. வெகு நேரம் காத்திருந்தாள் அவன் தாய். ஆனுல் அவன் வரவில்லை. மறுநாளும் பார்த்தாள். அவனைப் பற்றித் தகவலில்லை.

கவலைக்கிடையில் நாட்கள் மாதங்களாகி வருஷங்களாயின. சென்ற சோமேசனே திரும்பவில்லை. விசாரித்ததில் அவன் கங்காணிகளால் ஏமாற்றப்பட்டுத் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யக் கொண்டு போகப்பட்டான் என்றுமட்டும் தெரிந்தது.

பரதவித்தாள் அவன் தாய். சற்று மிருதுவாகச் சென்றுகொண்டிருந்த அவள் வாழ்க்கைச் சக்கிரம் மறுபடியும் கரடுமுரடான பாதையில் சென்றது. தோட்டத்தில் காய் கறிகளைப் பயிர்செய்து அதில் கிடைத்த ஊதியத்தைக்கொண்டு காலம் கடத்தினுள். சொக்கநாதரின் ஆலயமே கதியென்றிருந்தாள். அவள் செய்யாத பிரார்த்தனையில்லை. அவள் முறையிடாத தெய்வமில்லை. தான் இறப்பதற்குள் எப்படியும் தன் பிரார்த்தனை நிறைவேறிவிடும் என்று நம்பினுள். அநேக நாட்கள் குடிசையின் உள்ளிருந்து ஆவலுடன் வாயிலை நோக்கிக்கொண்டிருப்பாள் தன் சோமேசன் அப்பொழுதுதான் வரப்போகிருன் என்ற எண்ணத்துடன்.

ஒன்றன்பின் ஒன்ருய் ஆறு வருஷங்கள் மறைந்தன. அன்று தோட்டத்தில் களை பிடுங்கிக் கொண்டிருந்தாள் அவள். காலடிச் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவன் நின்றுகொண்டிருந்தான். சோமேசன் இல்லை. அவன் எலும்புக்கூடு என்று தான் சொல்லவேண்டும்.

பஞ்சடைந்த அவள் கண்களுக்கு முதலில் அவனை அடையாளம் தெரியவில்லை. ''தாயே'' என்ற அலறல் அவளுடலில் மின்சாரம்போல் பாய்ந்தது. தாயும் மகனும் அன்புறத் தழுவிக்கொண்டனர். பெருமையினுல் அவள் மார்பு அகன்றது. ஆனுல் புத்திரனின் நிலைமையைக் கண்டு மனம் பதறினுள்.

அவன் உடல், உயிரிருந்தும் உயிரற்று இருந்தது. கண்கள் பாதாளத்தில் புதைந்து ஒளியற்றுக் கிடந்தன. அவன் முகத்தில் தோன்றிய துன்பக் கீற்றுக்கள், அவள் மனதை அறுத்தன. திரண்ட அவன் தோள்கள் ஒட்டி உலர்ந்திருந்தன. நீண்ட உழைப்பையும், அமைதியின்மையையும் அவன் ஒவ்வொரு அவயவமும் எடுத்துக் காட்டின.

அன்றிரவே அவன் காய்ச்சலாகப் படுத்தான். ஒருவாரந்தான் அவன் உயிருடன் இருந்தான். அந்த ஒரு வாரமும் அவன் தன் தாயின் மடியின்மேல் வைத்த தலையை எடுக்கவில்லை. அவன் ஒரு கணங்கூடத் தன் பார்வையை வீட்டு வெளியே செல்லச் சகியாமலிருந்தாள். திரளுய்

விளங்கிய அவன் அவள் மடியில் குழந்தையைப்போல் அழுதான்.

கதை கூறிக்கொண்டு வந்த மாதின் கண்களில் கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்று. அவள், "ஐயா, அவனைப்பெற்ற அவளோ தன் உயிரையே அவனுக்காக அர்ப்பணிக்கத் தயாராயிருந்தாள்; தன் சக்திக்குட்பட்ட சகல வைத்தியமும் செய்தாள்; சுவையுள்ள பண்டங்களைப் பக்குவப்படுத்தி அன்புடன் ஊட்டினாள்; இராப்பகலாக அவனிடம் உட்கார்ந்து தைரியமான மொழிகளை அவனுக்குக் கூறி உற்சாகப்படுத்தினாள்; தன் அன்பை மழைபோல் சொரிந்தாள். உலகமே அவளை வெறுத்துத் தள்ளினாலும், அவனுக்குத் தானே உலகமாய் விளங்கினாள். ஆஹா! தூய தாய்ப் பாசத்தின் எல்லையைக் கண்டேன், ஐயா" என்று அவள் கூறி முடித்தபோது நீர் நிரம்பிய அவள் கண்கள் வியப்புடன் ஜ்வலித்தன.

என் தொண்டையில் ஏதோ ஒன்று அடைத்துக்கொண்டு பேசமுடியாமற் செய்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு, கொஞ்சம் பணத்தை எடுத்து அவளிடம் நீட்டி,

"அம்மா, சேயைப் பிரிந்த அத்தாய்க்கு இது ஆறுதலாயிருக்காது. ஆனால் அவசியமாயிருக்கும். தயவுசெய்து ஏற்றுக் கொள்ளச் சொல்" என்று கூறிவிட்டுத் திரும்பினேன்.

* * *

அதற்குப் பின் நான்கு வருஷங்கள் நான் கிராமத்திற்குச் செல்லவில்லை. போன வருஷம் அங்கேசென்றபோதுதான், அப்பழைய சம்பவங்கள் நினைவிற்கு வந்தன. அன்று என்னுடன் பேசிக்கொண்டிருந்த மாதைத் தற்செயலாகக் கண்டு அவ் விதவைத் தாயைப் பற்றி விசாரித்தேன்.

"ஐயா, அவள் மைந்தன் இறந்த இரண்டு மாதங்களில் அவளும் சிரமமின்றிப் போய் விட்டாள், பேதை" என்றவள் கூறியபோது எனக்கே சற்று ஆறுதலாக இருந்தது. ஆம், தள்ளாத காலத்தில் தேற்றுவாரற்று, புத்திர சோகத்தினாலும், வறுமைப் பிணியாலும் அவதியுறாமல் அவள் வாழ்வு சாந்தியை அடைந்து விட்டதல்லவா!

புத்தக விமர்சனம்

ஸ்ரீபஞ்சாக்ஷர விளக்கம்.

இயற்றியவர் ஸ்ரீ சிவ. அருணசிவயோகியாரவர்கள். திருவைந்தெழுத்தாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் அருமை பெருமைகளைத் தெளிவாகக் கூறும் இந்நூல், திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிநாத சுவாமியின் செந்தமிழ்க் கல்லூரியின் தமிழாசிரியர் வித்வான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் தொகுத்த திருமுறைத்திரட்டுடனும் குறிப்புரையுடனும் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் குமாரர் ஸ்ரீ. S. கலியாண சுந்தரமையரவர்களால், சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டுமென்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்போது திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்களாக விளங்கும் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருணந்தித்தம்பிரான் சுவாமி அவர்கள் பொருளுதவியைக்கொண்டு வெளி வந்துளது. இரண்டாம் பதிப்பு. 112 பக்கங்கள் கொண்டது.

சைவர்கள் மிகவும் விரும்பி யோதுதற்குரியது இந்நூல். விலை குறிக்கப்பெறவில்லை.

கண்ணன் கதை.

ஆசிரியர், ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

திருச்சி ஜில்லா இராமச்சந்திரபுரம் அன்பு நிலய வெளியீடு. விலை அணு 5.

இச் சிறுநூல் எட்டுப் பிரிவுகளுடையதாய், ஸ்ரீ கண்ணபிரான் வரலாற்றுடன் ஸ்ரீகீதோப தேசத்தையும் சுருக்கமாக விளக்குகிறது.

ஆசிரியர் சுத்தானந்த பாரதியார், பன் மொழிகளையும் அவற்றின்கண் மிளிரும் நன்னூல்களாகிய பன்னூல்களையும் பயின்று, அனுபவ ஞானமும் கைவரப் பெற்ற பெரியாராதலின் கற்றோரும் மற்றோரும் ஊக்கத்துடன் கற்கும் வகையில் பலப்பல நூல்களைக் காலத்திற்கேற்றவாறு ஆக்கிக் குவித்துக்கொண்டிருக்கிறார். அவர் உதவிய நூல்களிலே இச்சிறு நூலும் ஒன்று. அவர் உதவி எண்ணுதற்கும் ஆக்குதற்கும் அரிது. அப்பெரியாரின் அறிவுப் பெருக்கின் அமுதத்தைத் தமிழர் அனைவரும் பருகி மகிழும்படி செய்ய முன் வந்துள்ள அன்பு நிலயத்தார் செய்கையை யாம் பெரிதும் பாராட்டுகின்றோம்.

வளையாபதி நாடகம்.

ஆசிரியர் யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

இதுவும் மேற்படி அன்பு நிலயத்தார் வெளியீடே; விலை ரூபாய் ஒன்று.

இந்நூல், அன்பு நிலயத்தார் தம் பதிப்புரையிற் கூறியுள்ளபடி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருடார்த்தங்கள் நான்கையும் விளக்குவது. நாடகம் சுருக்க விளக்கமாக எழுதப்பெற்றுளது.

நூலிலே செய்யுள் நடை, வசன நடை காலத்திற்கு ஏற்ற வகையிலே சிறந்த முறையிலே ஆக்கப்பட்டுள. நாடக பாத்திரங்களின் பேச்சிலே அவரவர்களுடைய நிலைக்கேற்ற கருத்துக்களைக்கொண்ட பேச்சுக்கள் தெளிவாகவும் திறம்படவும் அமைந்துள்ளன. இதன்கண் உலகினரைக் கெடுக்கும் ஆபாசப் பேச்சுக்களோ பாடல்களோ காணப்படவில்லை. அதிகம் சொல்லுவானேன்? இத்தகைய நாடக நூல்களே மேடைகளிலே நடிக்கவும் படங்களிற் பதிவு செய்யவும் தகுதி வாய்ந்தவை. அறிவாளரும் பொருளாளரும் அரசியலாரும் இப்பணியைக் குறிக்கொண்டு உலகிற்கு உதவ இது நல்ல சமயம்.

தமிழ்நாட்டுச் சிறு கதைகள்

(மூன்றும் தொகுதி) கன்யாகுமரி முதலிய 15 கதைகள்.

த. நா. குமாரசுவாமி, பி.ஏ. எழுதியது. அல்லயன்ஸ் கம்பெனி பிரசுரம், மலிவுப் பதிப்பு. விலை ரூ. 2—8—0; உயர் பதிப்பு ரூ. 3—0—0

ஏக்கம், உருக்கம், இரக்கம், காதல், ஹாஸ்யம் ஆகிய பல சுவைகளையும் அளவு மீறாமல் உபயோகித்து எளிய நடையில் கல்பனைத் திறனுடன் எழுதப்பட்ட இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு கதையும் நம் கருத்தைக் கவருகிறது. பாவச் சித்திரம்

கவியின் கனவு

''வள்ளியின் மையுண்ட கண்கள்
அழகுக் கடவுள் குமரனையே கவர்ந்தது''
''கண்ணகி அழுகையில் கண்களின் மை
கரைந்து அவள் வனப்பைக் குறைத்தது''
—இது கவிகள் கண்ட உண்மை.

பெண்மணிகளின் எழிலை எடுத்துக்காட்ட கண்களுக்கு மை தீட்டிக் கொள்வது என்பது பண்டைய காலத்திலிருந்தே நம் நாட்டு ஸ்திரீகளால் கையாளப்பட்டு வரும் ஒரு சிறந்த பழக்கமாகும்.

தற்போது இந்த மை (Eyetex) ஐடெக்ஸ் என்னும் பெயரால் சாஸ்திரீய முறைப்படி தயாரிக்கப் பெற்று விற்கப்படுகிறது. இதை நாரீமணிகள் கண்களில் முறை தவறுமல் தீட்டிக்கொள்வதால் கண்களின் உஷ்ணத்தைத் தணித்து, ஓர் குளுகுளுப்பான உணர்ச்சி யளிப்பதுடன் தீக்ஷண்யமான பார்வையும் அளித்து, கண்களின் கீழ் தென்படும் விகாரமான சுருக்கங்களைப் போக்கி, நேத்திர சம்பந்தமான நோய்களைத் தடுக்கிறது.

அத்துடன் உங்கள் சோபையை பன்மடங்கு அதிகப்படுத்துகிறது. இது நாகரீக நங்கையர்க்கும், குழந்தைகளுக்கும் இன்றியமையாதது.

Eyetex
மை

AN ARVIND LABORATORIES PRODUCT
SOLE DISTRIBUTORS:
PUSHPAVANAM STORES
TRIPLICANE — MADRAS

சென்னை ஸ்டாக்கிஸ்டுகள் :
ஜெனரல் சுதேசீஸ் லிட்—எஸ்பிளனேட் ஜெனரல் சுதேசீஸ் லிட்—வேப்பேரி மதராஸ் சுதேசி எம்போரியம்—மவுண்ட் ரோட். சுந்தரம் ஸ்டோர்ஸ், மயிலாப்பூர். சுந்தர் பார்மஸி. மயிலாப்பூர். சந்திரா ஸ்டோர்ஸ்—தி. நகர். N. G. ராஜு பிரதர்ஸ்—தி. நகர்

எல்லா முக்கிய கடைகளிலும்கிடைக்கும்.
வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

பலவும் கற்பனைகளை விளக்கும் வகையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இந்தோ—போலிஷ் லைப்ரரி பிரசுரங்கள்.

The Soviet occupation of Poland
விலை 0—12—0

America on Poland விலை 1—4—0

கிடைக்குமிடம்:— பத்மா பப்ளிகேஷன்ஸ்
பம்பாய், மேட்டா ரோட்.

ருஷ்யா, நாடாசை பிடித்து அலையவில்லை என்று நாம் இதுகாறும் எண்ணி வருகிறோம் அல்லவா? அது அவ்வளவு சரியன்று என்பது இப்பிரசுரங்கள் மூலமாகப் புலப்படும். பிரசாரத்துக்காக எழுதப்பட்டவைகளே ஆயினும் பெரும்பாலும் உண்மையான விவரங்களே இப்புத்தகங்களில் விளக்கப்பட்டிருப்பதாக முன்னுரையிலிருந்து தெரியவருகிறது.

கொன் புத்ஸன்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது விலை 0—5—0. அன்பு நிலயப் பிரசுரம்.

'கன்ப்யூஷியஸ்' என்று நாம் அறிந்துவரும் சீன ஞானியின் பெயர் கொன் புத்ஸன். கிருஸ்துக்கு முன்பு, புத்தருக்குப் பின்பு, அவதரித்தவர். பொது நலத்திற்காகத் தம்மைப் பலி தானமாக்கிக்கொண்டவர். தம்மைச் சீர்திருத்திக்கொண்டு தமது சமூகத்தையும் சீர்திருத்த முன் வந்தவர். ஒரு புதிய மதத்தை உபதேசிக்கவில்லை. மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதைச் சொந்த அனுபவத்தைக்கொண்டு விளக்கினார். இவருடைய அருள் மொழிகளைப் படித்துப் பயன்பெறும் வண்ணம் நம்மை ஊக்கி உற்சாகமளிக்கும் முறையில் சுவாமிகள் இப்புத்தகத்தில் கொன்புத்ஸனது வரலாற்றையும் வாக்கமுதத்தையும் தந்துள்ளார்.

துவாரகை மன்னன் அல்லது
பூபாரந்தீர்த்த புண்ணியன்

ஸ்ரீ தேவநேசன் எழுதியது. ஸ்ரீ ஷண்முகா பப்ளிஷிங் ஹவுஸ் பிரசுரம். மன்னார்குடி, விலை 0—12—0.

கண்ணன் கதையைப் பாடசாலை மாணவர்க்கு ஏற்ற முறையில் இலக்கண இலக்கியச் சிறப்பியல்புகளுடனும் எளிய வசன நடையில் பாரத பாகவத கதைப்போக்கை ஒட்டி இதில் எழுதப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடத்தில் பாட புத்தகமாக வைக்க ஏற்றது.

ஒளியும் மின்சாரமும்

ஆர். கே. விசுவநாதன்

விஞ்ஞானிகள் கண்ட உலகத்தில் பொருளும் சக்தியும்தான் உண்டு. பொருள்களின் வகை எண்ணற்றவை; ஆனால் சக்தியின் வகை அதிகமில்லை. சக்தியை வெப்பம், ஒளி, ஒலி, காந்தம், மின்சாரம்என்று வகைப்படுத்தினார்கள். இவை எல்லாம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறும் தன்மை வாய்ந்தவை. வெப்பத்துக்கும் ஒளிக்கும் உண்டான தொடர்பும், காந்தத்துக்கும் மின்சாரத்துக்கும் உண்டான தொடர்பும் அதிக சிரமமில்லாமல் அறியப்பட்டது. இதைப்போல மின்சாரத்தை வெப்பமாகவும் ஒளியாகவும் மாற்ற முடிவதைச் சுலபமாக அறிந்தார்கள். ஆனால் ஒளியை மின்சாரமாக மாற்றுவதற்குச் சற்றே சிரமப்பட்டார்கள். இது நிறைவேறிய பிறகுதான் பேசும் படங்கள், ரேடியோ படங்கள் முதலிய வினோதங்கள் ஏற்பட்டன. இக்கட்டுரையில் ஒளியை மின்சாரமாக மாற்றுவதற்குண்டான சாதனத்தைப்பற்றியும் அது பயன்படும் விதத்தையும் கவனிப்போம்.

செலீனியம் (Selenium) என்று ஓர் உலோகம் உண்டு. மின்சாரத்தைக் கடத்திச் செல்லும் இயல்பு உலோகத்துக்கு உலோகம் மாறுபடும். இவ்வேற்றுமையை மின் தகைவு (Electrical Resistance) என்று குறிப்பிடுவார்கள். மின் தகைவு அதிகமுள்ள உலோகத்தில் மின்சாரம் பாய்வது கடினம். மின் தகைவு குறைவாயுள்ள உலோகத்தில் மின்சாரம் சுலபமாகப் பாயும். உதாரணமாகச் செப்புக் கம்பியின் மின்தகைவு மிகக் குறைவு; எனவே இதன்மூலம் மின்சாரம் வெகு சுலபமாகப் பாயும். செலீனியத்தின் மின் தகைவு அதிகம். வானொலி அலைகளை ஏற்கும் கருவிகளில் மின் தகைவு அதிகமுள்ள உலோகம் வேண்டியிருந்தது. எனவே இதை இணைத்துக்கொண்டு சோதனைகள் நடத்திவந்தார் 'வில்லபி ஸ்மித்' (Willoughby Smith) என்னும் விஞ்ஞானி. அப்போது ஒரு நிகழ்ச்சியைக் கண்டார். சூரிய வெளிச்சம் இவ்வுலோகத்தின்மீது விழும்போதெல்லாம் இதன் மின்தகைவு குறைவதைக் கண்டார். மற்றும் விழும் வெளிச்சத்தின் அளவைப் பொறுத்து இதன் மின்தகைவு குறைவதையும் கண்டார். ஏன் ஒளியை மின்சாரமாக மாற்றுதவற்கு இதைப் பயன் படுத்தக் கூடாது என்று ஆராயத் தொடங்கினார்கள். ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வேலைக்கு அவ்வளவு திறமை இதற்கு இல்லாமல் இருப்பது தெரிய வந்தது. எனவே இதை விட்டு விட்டு வேறொரு சாதனத்தைக் கண்டுபிடிக்க முனைந்தார்கள்.

ரேடியோ செட்டில் உபயோகிக்கும் 'வால்வ்' (Valve) என்ற சாதனத்தை அனைவரும் கவனித்திருக்கலாம். இதன் வெளித் தோற்றம் மின்சார விளக்குக் குமிழைப்போலிருக்கும். இதனுள்ளிருக்கும் காற்றெல்லாம் வெளியேற்றப்பட்டு வெற்றிடமாகச்செய்யப்பட்டிருக்கும். இதனுள் ஒரு கம்பி உண்டு. அதன் மூலம் மின்சாரம் பாயும்போது அது சூடேறி, அதிலிருந்து கண்ணுக்குத்தெரியாத மிகச் சிறிய துகள்கள் வெளிப்படுகின்றன. இவற்றுக்கு மின்னுருக்கள் (Electrons) என்று பெயர். இத் துகள்களெல்லாம் குறை மின்சாரத்தைக் கொண்டிருக்கின்றன. இவை வால்வின் ஒரு முனையிலிருந்து மற்றொரு முனைக்குப் பாயும்போது இது இணைக்கப்பட்ட மின்சாரத் தொடரில் (Electrical Circuit) ஒரு மின்சார ஓட்டம் உண்டாகிறது. பொடாஸியம் (Potassium), ஸோடியம் (Sodium) ருபிடியம் (Rubidium) போன்ற உலோகங்களின் மீது ஒளி விழும்போது ரேடியோ வால்வில் வெளிப்படுவதைப் போல இவ்வுலோகங்களிலிருந்தும் மின்னுருக்கள் வெளிவருவதைக் கண்டார்கள். இவ்வுலோகங்களின் மீது விழும் ஒளியின் தன்மை, அளவு இவற்றுக்குத்தகுந்தவாறு மின்னுருக்களின் அளவு மாறுவதையும்

கண்டார்கள். இந்நிகழ்ச்சியைப் பயன்படுத்திய சாதனம்தான் ஒளி மின் கடம் (Photo electric cell) என்னும் கருவி. இக்கருவிதான் ஒளியை மின்சாரமாக மாற்றுவதற்கு உபயோகப்படுவது. இதுவும் அமைப்பில் மின்சார விளக்கின் குமிழைப் போலவே இருக்கும். இதில் இரண்டு வகை உண்டு. ஒரு வகையில் குமிழ் வெற்றிடமாக்கப்பட்டிருக்கும். மற்றொரு வகையில் 'ஆர்கான்' (Argon) என்னும் ஜடவாயு குறைந்த இறுக்கத்தில் குமிழினுள் அடைக்கப்பட்டிருக்கும். இக்குமிழின் நடுவில் ஒரு மெல்லிய உலோகக் கம்பி தலையிலே ஒரு வளையத்தோடு இருப்பதைக் காணலாம் (படம் 1). குமிழின் முன் புறத்திலுள்ள சிறிது பாகம் நீங்கலாக உட்புறம் முழுவதும் பொடாஸியம் உப்பினால் லேசாகப் பூசப்பட்டிருக்கும். இப்படலத்தைத் தொட்டுக்கொண்டு மற்றொரு சிறிய கம்பி குமிழில் இருப்பதைப் பார்க்கலாம். இதுவும் முன் கூறிய கம்பியும் இக்கடத்தின் இரண்டு துருவங்களாகக் கொள்ளப்படும். குமிழில் பொடாஸியம் பூசப்படாமல் இருக்கும் பாகத்தின் வழியாக ஒளி, படலத்தின்மீது விழும்போது மின்னுருக்கள் வெளிப்பட்டு மற்றொரு துருவத்தை நோக்கி ஓடுகின்றன. அப்பொழுது இரண்டு துருவங்களுக்கும் இடையே ஓர் அருவி உண்டாகிறது. இவ்வருவியின் பலம் கடத்தினுள் நுழையும் ஒளியின் அளவுக்குத் தகுந்தவாறு அமைகின்றது. குமிழில் ஆர்கான் வாயு அடைபட்டிருந்தால் வெளிப்படும் மின்னுருக்கள் இவ்வாயு அணுக்களை மோதும்போது அணுக்கள் சிதைந்து அவற்றிலிருந்தும் மின்னுருக்கள் வெளிப்படுகின்றன. எனவே மின்னுருக்களின் எண்ணிக்கை அதிகமாகிவிடுகின்றன. இதனால் துருவங்களினிடையே உண்டாகும் அருவியின் பலமும் அதிகமாகிவிடுகிறது.. ஆகையினால் வெற்றிடமின்கடத்தைவிட வாயு அடைபட்ட கடமே ஒளியை மின்சாரமாக மாற்றும் வேலைக்குச் சிலாக்கியமானது என்று கூறாமலே விளங்கும். இனி இக்கருவியின் உபயோகங்களைப் பற்றிச் சிறிது கூறுவோம்.



வெகுநாள்வரை சினிமாவில் மௌனப் படங்களே காண்பிக்கப்பட்டு வந்தன. இதற்கு ஸெலுலாயிடு (celluloid) படலத்தில் காட்சிகளைச் செகண்டுக்குப் பதினாறு படங்கள் வீதம் தக்க காமிராக்களைக் கொண்டு படம் பிடிப்பார்கள். பின்னர் இப்படலச் சுருளை ஒரு பிரகாசமான விளக்கின் முன் செகண்டுக்குப் பதினாறு படங்கள் வீதம் நழுவிவரச்செய்து அவ்விளக்கின் உதவியால் தூரத்திலுள்ள திரையில் படங்கள் விரிந்து காணுமாறு ஏற்பாடு செய்வார்கள். திரையில் ஒரு படம் நழுவி மற்றொரு படம் வரும்போதெல்லாம் வெளிச்சம் மறைக்கப்படும். இதனால் காட்சிகள் தொடர்ந்து நமக்குப் புலனாகி இன்பத்தை அளிக்கும். இதைப் போல அரக்கு வட்டிலில் பேச்சையும் சங்கீதத்தையும் பதிவுசெய்ய தெரிந்துகொண்டார்கள். இவ்வட்டிலைத்தான் நாம் இசைத் தட்டு என்று கூறுவது. இசைத் தட்டையும் மௌனப் படத்தையும் சேர்த்துப் பேசும் படத்தைச் சிறிது காலம் காண்பித்து வந்தார்கள். இவ்விரண்டையும் சேர்ப்பதில் அநேக தொல்லைகள் இருப்பதை அறிந்தார்கள். படமும் இசைத் தட்டும் ஒரே வேகத்துடன் ஆரம்பம் முதல் முடிவுவரை ஓடினால் அன்றிப் பேசும்படம் திருப்தி அளிப்பதில்லை. இரண்டும் லயப்படாவிட்டால் படத்தில் வாய்மூடி இருக்கும் காட்சியும் இசைத் தட்டில் அதேசமயத்தில் பாட்டுக் கேட்பதும் போன்ற அதிசயங்கள் அடிக்கடி நேரிடுவதைக் கண்டார்கள். அப்படி இரண்டும் ஒரே வேகத்துடன் ஓடிக்கொண்டிந்தாலும் ஏதோ காரணம்பற்றிப் படலம் அறுந்து போய்விடின் உண்டாகும் கஷ்டம் சொல்

லாமலே விளங்கும். இத்தொல்லைகள் காரணமாக இம்முறையைக் கைவிட்டுப் படலத்திலேயே காட்சியுடன் ஒலியையும் பதிவுசெய்யும் வழியைக் கண்டுபிடித்தார்கள். அதாவது ஒலியை ஒளியாக மாற்றிப் படத்தில் பதிவுசெய்தார்கள். இது மட்டும் போதாது. படம் காண்பிக்கும்போது ஒளியை மறுபடியும் ஒலியாக மாற்றினால் அன்றி இம்முறை பயனளிக்காது. இதை வெற்றியடையச் செய்தது ஒளி மின் கடம். என்வே இச்சாதனம்தான் பேசும் படங்கள் வெளியிடுவதற்கு முக்கிய காரணமாயிருந்தது.

இப்பொழுது இச்சாதனம் எவ்வாறு பேசும் படங்களில் பயன்படுகிறது என்பதைக் கூறுவோம். படலச் சுருளின் ஓரத்தில்தான் ஒலி பதிவுசெய்யப்படும். காட்சிப் படங்கள் பிடிக்கும்போதே மைக்ரோ

விளக்கின் ஒளி படத்தின்மீது வில்லையினால் குவிக்கப்பட்டு அதன் வடிவம் திரையின்மீது விழுகிறது. அதற்குக் கீழே மற்றொரு விளக்கு இருப்பதைப் பார்க்கலாம். இதன் வெளிச்சம் சிறியதொரு சந்தின் வழியாகப் படலத்திலேயுள்ள ஒலிப்பதிவின்மீது விழுந்து, பின்னர் அதையடுத்துள்ள ஒளிமின் கடத்தின் மீது விழுகிறது. படலத்தின் மூலம் வெளிவரும் ஒளியின் அளவு ஒலிப்பதிவுக்குத் தகுந்தவாறு மாறுவதால் ஒளிமின் கடத்தில் மின்னுருக்கள் வெவ்வேறு அளவுக்கு உற்பத்தியாகி அதன் மூலம் பாயும் மின்சாரமும் அதற்கு தகுந்தவாறு மாறுகிறது. இம்மின் அருவியை "வால்வுகள்" அமைந்த இரண்டு சாதனங்களினால் பெருக்கிக்கொண்டு அதை ஒலிபெருக்கியின் (Loud speaker) மூலம்



படம் 2

போனில் ஒலியும் ஏற்றுக்கொள்ளப்படும். மைக்கில் விழும் ஒலிக்குத் தகுந்தவாறு அதில் மின்சார ஓட்டம் ஏற்படுகிறது. இம்மின்சாரத்தைப் பல மடங்கு பெருக்கி அதைக்கொண்டு ஒரு விளக்கிலிருந்து வரும் ஒளிக்கற்றையை அதற்குத் தகுந்தவாது மாறும்படி செய்தே சுருளின் ஓரத்தில் ஒலியை ஒளியாகப் பதிவுசெய்கின்றார்கள். படங்களைக் காட்டும்போது படமும் ஒலியும் சேர்ந்து பதிவுசெய்யப்பட்ட படலச்சுருள் மேல்கண்டியிலிருந்து கீழ்க்கண்டிற்கு இழுக்கப்படுகிறது. இதன் செயல் முறையை இரண்டாவது படத்தில் பார்க்கவும் (படம் 2). மேலுள்ள வீச்சு அனுப்புவார்கள். இதனால் மின்சாரம் ஒலியாக மாற்றப்படுகிறது. எனவே படத்துடனேயே ஒலியையும் கேட்பது சாத்தியமாகிறது.

தற்காலம் படம் பிடிக்காமலே ஆங்காங்கே நிகழும் காட்சிகளை நேராகவே ரேடியோ மூலம் பார்ப்பதற்கு வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ்வழியைத்தான் (Television) டெலிவிஷன் என்று கூறுவது. இதுவும்சித்தித்ததற்குகாரணம் ஒளி மின்கடம்தான். நாம் ஒரு காட்சியைக் காணும்போது அதன் பலபாகங்களிலிருந்து வரும் ஒளியின் பிரகாசம் வெவ்வேறு

அளவுக்கு நம் கண்ணிலே படுவதால் நமக்குத் காட்சியின் தோற்றம் ஏற்படுபடுகிறது. அதாவது காட்சியைப் பார்க்கச் செய்வது அதன் பலபாகங்களிலிருந்து வெளிப்படும் ஒளி மாறுதல்களே என்று அறியலாம். ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு இவ்வொளி மாறுதல்களை ரேடியோமூலம் அனுப்பினால்தான் காட்சியைக் காணமுடியும். இதற்கு இன்றியமையாததாக இருப்பது ஒளி மின் கடம் தான். இது ஒளி மாறுதல்களை மின்சாரமாகச் செய்கிறது. இம் மின்சாரத்தையே ரேடியோ மூலமாக அனுப்புகிறார்கள். பார்க்கவேண்டிய இடத்தில் இம் மின்சாரத்தை மீண்டும் ஒளி மாறுதல்களாக மாற்றிக் காட்சியைப் பார்க்குமாறு செய்கின்றார்கள். இதுதான் டெலிவிஷனின் தத்துவம். மற்றுமோர் உபயோகத்தைப் பார்ப்போம். நாம் தூங்கிக் கொண்டு இருக்கும்போது வீட்டில் திருடர்கள் வருவதை உடனே அறிவிப்பதற்கு இச்சாதனத்தைப் பயன்படுத்தலாம். கதவுகளுக்கு அருகில் சுவர்களுக்கிடையே யாராவது வரும்போது இம்மின் கடத்தில் விழும் ஒளியைப்பாதிக்கச்செய்து அப்பொழுது ஏற்படும் மின்சாரத்தைக் கொண்டு மணி அடிக்குமாறு செய்துவிடலாம். இதைக் கேட்டவுடனே நாம் விழித்துக்கொண்டு திருடர்களைப் பிடித்துவிடலாம். பல ஆபீஸுகளிலும், பெரிய வியாபார ஸ்தலங்களிலும் இரவில் இவ்வேலையைச் செய்வதற்கு இச்சாதனத்தை உபயோகித்து வருகின்றார்கள். மற்றும் பெரிய கட்டிடங்களில் கீழ்மாடியிலிருந்து மேல்மாடிகளுக்குப் போகும் லிப்ட் என்னும் சாதனத்தின் கதவுகளைத் தாமாகவே திறக்கவோ மூடவோ செய்வதற்கு இதை உபயோகிக்கின்றார்கள். இதுபோன்ற எண்ணற்ற காரியங்களுக்கு இக்கடம் பயன்பட்டுவருகின்றது.

பொதுஜன ஆதரவுக்கு நமது முன்னேற்றமே சான்று

ஏராளமான பாலிஸிகள், இடைவிடாத மகத்தான முன்னேற்றம், அதிகரித்துக்கொண்டே வரும் புகழ், பொதுஜன ஆதரவு— இவைகளுக்குப் போதிய அத்தாட்சி அடியிற் காணப்படும் புள்ளிவிபரங்கள்:-

வருஷம்	புதிய பாலிஸிகள்	மொத்த ஆஸ்தி	நடைமுதலிலிருக்கும் பாலிஸிகள்
1941	1 கோடி 1 லக்ஷத்திற்குமேல்	1 கோடி 95 லக்ஷத்திற்குமேல்	8 கோடி 36 லக்ஷத்திற்குமேல்
1943	2 கோடி 20 லக்ஷத்திற்குமேல்	2 கோடி 50 லக்ஷத்திற்குமேல்	10 கோடி 53 லக்ஷத்திற்குமேல்
1945	3 கோடி 75 லக்ஷத்திற்குமேல்	3 கோடி 30 லக்ஷத்திற்குமேல்	14 கோடி 87 லக்ஷத்திற்குமேல்

1945ல் புதிய பாலிஸிகள் பெருக்கு:— 1 கோடி 15 லக்ஷத்திற்குமேல்

வருடா வருடம் இந்தப் பெரிய தேசீய ஸ்தாபனத்தில்
பொது ஜனங்கள் பாலிஸி எடுக்கிறார்கள். அத்துடன் பெருவாரியான பழைய பாலிஸிதார்களும் மேலும் மேலும் புதிய பாலிஸிகள் எடுத்துக்கொள்கிறார்கள்.

லக்ஷ்மி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

(தலைமை ஆபீஸ்:- **லாகூர்**)

மதராஸ் பிராஞ்சு:-
4/105, அரண்மனைக்காரத்தெரு, ஜி. டி. சென்னை.

C. R. சேஷன், M. A.,
பிராஞ்சு மானேஜர்

"வீடு வேட்டை"

டாக்டர் வே. ராகவன்

"என்ன ஒடம்பு, ஒரு மாதிரியா, எளச்சாப்பல இருக்கு?"

"ஒடம்பு ஒன்னும் இல்லேனா; அலச்சல் தான்"

"பொண்ணுக்குக் கல்யாணம் ஆகனம் போல இருக்கு?,'

"இல்லே, ஸார்"

"பையனுக்குக் 'காலேஜ்' அட்மிஷன்' ஆகனமோ?"

"இல்லே ஸார்; காலம்பர ஸாயந்தரம் இந்தமாதிரிதான், வெய்யில் வீண்போகாம அலயரேன் ஸார்?"

"எதுக்குனு சொல்லுங்களேன்?"

"வேறெதுக்கு? வீட்டுக்குத்தான்; எதாவது ஓங்காத்துகிட்ட இருந்தாச் சொல்லுங்களேன்?"

"ஸரிதான், வரேன்; டிராம் வந்தூடுத்து" என்று சொல்லிவிட்டு. நண்பரை நிர்த்தாக்ஷிண்யமாய் விட்டுவிட்டு, டிராமில் ஏறிக் கொண்டேன்.

டிராமில் பத்திரிகையுலகில்' வேலையாயிருக்கும் நண்பர் ஒருவரைப் பார்த்தேன்.

"என்ன ரொம்ப நாளாச்சுது பாத்து; 'ராமாயண லெக்சர்களை' விடாமல் கேட்டிண்டிருந்தபோது அடிக்கடி ஸந்தித்துண்டுருந்தோம்.........பாவம்! மஹாகனம் சாஸ்திரிகள் காலமாயிட்டார் " என்றேன்.

" அதிருக்கட்டும் ஸார், இப்ப என் கவலையெல்லாம் வீட்டைப்பத்தி தான் ஸார்; ஏதாவது ஓங்கபக்கத்திலே இருத்தாச்சொல்லுங்களேன்; ரூ. 50 கூடக்கொடுக்கறேன் ....'' என்று சொல்லிக்கொண்டே போனார்.

"ஏன், திருவல்லிக்கேணியிலே இருந்துண்டுருந்தேளே? "என்று குறுக்கிட்டேன்.

"அது 'ரூம் ஸார்; ஆத்துலே திடீர்னு வந்துட்டா; ஒரு ஒரவாத்துலே வச்சிருக்கேன்; ஒருவாரத்துலே 'பிக்ஸ்' பண்ணிவிடனும்.

"அப்படி—ஏன் திடீர்னு வரவழச்சுட்டேள்?

"எங்கே ஸார், இந்த 'ஹோடல் மீல்ஸ்', நமக்கு ஸரியா வல்லே" ஒரு கப்லே கொண்டுவந்து கவுத்தூட்டுப் போரன்; மேலே மூஞ்சிய நீட்டினா ரண்டு பூரியை நீட்டரான்; அது தோல் துண்டு போல இருக்கு; அதைக்கடிச்சு இழுத்துண்டு..."

"ஓங்க மினிஸ்டர்ஸை இந்த 'ஸிடிலே' 'அகாமொடேஷன் ப்ராப்ளத்தை' மொதல்ல 'டாகிள்' பண்ணச்சொல்லுங்களேன்."

"ஸரிதான்; இப்ப எல்லாமே, 'ப்ராப்ளம்' தான் அவர்களுக்கு, தங்கள் நிலமை உள்பட. மொதல்லெ, மினிஸ்டர்ஸுகளுக்கு வீடு ஆம்பிட்டுதானு தெரியனும்."

"'ஆந்த்ராஸ்' ரொம்ப 'இன்பில்ட்ரேட்' பண்ணிவிட்டா, ஸார்"?

"அதுவேறே 'ப்ராப்ளம்' இருக்கு, 'ஸிடி' ஓங்குளுதா எங்குளுதானு வரப்போரது"—என்று பத்திரிகைக்காரர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே 'வரேன்' என்று சொல்லிவிட்டு நான் இறங்க முயன்றேன். டிராமில் உள்ள நெருக்கடி சென்னையிலுள்ள நெருக்கடிக்கு ஒரு குறி என்று வைத்துக் கொள்ளலாம். நாங்கள் இருவரும் இதுவரைக்கும் ஒரே கொக்கியைப் பிடித்துத் தொங்கிக்கொண்டவராய் எங்கள் ஸம்பாஷணையை நடத்திவந்தோம். எப்படியோ ஏறிவந்துவிட்டேன், வெளியே போவது அதைவிடக் கஷ்டமாயிருந்தது. இப் புழுக்கத்திடையே இருவர் தம் சுருட்டையும் விடாமல் ஊதிக்கொண்டே வந்தனர், 'ராங் ஸைடாய்' இறங்கிவிடுவோம் என்றால் அந்தப்புறம் படிக்கட்டில் ஸுமார் 20 பேர் வழிகள் அரைத் தொங்கல், கால் தொங்கலாய் நின்றுகொண்டிருந்தனர். குழந்தை எப்படியோ வெளியே வந்து விழுவது போல் வந்தேன்......

நான் பார்க்கப்போன ஸ்னேகிதர் வீட்டிலில்லை; அவருடைய தம்பி மட்டும் இருந்

தார். 'அண்ணா எங்கே' என்று கேட்டதும், அவர் வெளியே சென்றிருக்கும் அலுவலைத் தெரிவித்தார். ஷை நண்பர் 'வீட்டு முதலாளிகள் சங்க'த்தின் காரியதரிசி; இவர்களுக்கு மூன்று வீடுகள் உண்டு; அவற்றைக்கொண்டே ஜீவனம் நடத்தியாக வேண்டும். இவரும் சில 'பென்ஷனர்'களுமாகச் சேர்ந்து 'மீட்டிங் கூடி, 'ரெஸலூஷன்கள்' 'பாஸ்' செய்துதான் 'ரெண்ட் கண்ட்ரோலையும்' 'அகாமொடேஷன் கண்ட்ரோலை'யும் ரத்து செய்து வைத்தனர். தற்போது அவர் தம் காரியமாகச் செல்லாமல், தம் உறவினர் ஒருவருடைய காரியமாகச் சென்றிருந்தார். அந்த உறவினருக்குத் திருவட்டீச்வரன் பேட்டையில் ஒரு வீடு உண்டு. அதிலுள்ள வாடகைக்காரரைப் போகச்சொல்லிவிட்டுத் தாமே மறுபடியும் தங்குவதற்கு வரவேண்டுமென அவர் முயன்றும் பயன்படவில்லை; மூன்று மாதம் நோட்டீஸ் ஒன்றை வக்கில் மூலம் கொடுத்திருந்தார். குடியிருப்பவரும் வக்கீல்; நோட்டீஸை லக்ஷ்யம் செய்யாமல், மூன்று மாதகாலம் ஆகியும் நகராமல் உட்கார்ந்திருந்தார். அதன்மேல் வீட்டுக்காரர் போலீஸ் உதவியைக்கொண்டு பலாத்காரமாய் ஸாமான்களைத் தெருவில் எடுத்து வைத்து, அரைச் சமையலிலும் அரைக் குளியிலும் குழந்தையும் குஞ்சுமாயுள்ள அப்பெரும் குடித்தனத்தை தெருவில் வெய்யிலில் நாள் முழுதும் நிற்கும்படி செய்து வைத்தார். இந்த, 'சந்தியில் நிற்கும்' நிலையை நோக்க ஊர்கூடி நின்றது......

இந்தக் கதையைக் கேட்டுவிட்டு வீடு திரும்பினேன். வீட்டிற்குள் வருவதற்கே நான் பயப்பட்டுக்கொண்டிருப்பவன். வந்தவனுக்குக் கதவு திறப்பதற்கு முன்னமையே 'உர்' என்ற மூஞ்சியுடன், மனைவி 'என்ன ஏதாவது வீடு பார்த்தேளா, ஆம்புட்டதா?' என்பாள். கதவைத் திறந்து நான் குடியிருக்கும் மாடிப் போர்ஷனுக்கு ஏறிக்கொண்டு போகும்போதே பின்னால் முனகிக் கொண்டே வருவாள்.

"யாரால் இருக்கு இப்படி ஒவ்வொத்தருக்கும் இறங்கி இறங்கி கதவு திறக்க! கால் பூட்டு விட்டுப்போறது; தண்ணி அடிச்சு அடிச்சு கையெல்லாம் ஆடிப்போச்சு ......" ஆனால் நானிருக்கும் மாடியைவிட்டால், இரண்டு பங்கு வாடகையைக்கொடுத்து அதே இடத்துக்கு அடி தடி ஏற்படும்!

இரண்டு பங்கு வாடகை ஸாதாரணமாய் நடக்கும் ஸம்பவமே; 'அடிதடி' என்னமோ அதியாகச்சொல்லும் விஷயம் என்று தோற்றலாம்! நடந்தால் அதுவும் ஆச்சரியமில்லை. இது அன்றிரவும் மறுநாளும் என் தெருவிலேயே நடந்த நிகழ்ச்சியிலிருந்து தெரிந்தது.

எங்கள் தெருவிலேயே இரண்டு மூன்று வீடுள்ள முதலாளிகள் இருக்கிறார்கள். இருவர் தம் வீட்டிலேயே மாடியை வாடகைக்கு விடுபவர்; மற்றொருவர் தம் வீட்டில் கீழ்ப் பாகத்தையும், தமக்குள்ள மற்றோர் வீட்டை முழுதும் வாடகைக்கு விடுபவர். இம்மூன்றுவதாகச் சொன்னவர், ஒரு வயதான விதந்து ஸ்திரீ; கணவன் நல்ல ஸொத்தை வைத்துவிட்டுப் போனான்; இவள் ஸொத்தைப் பரிபாலித்தோ அனுபவித்தோ வரும் விதத்தைக் கவனித்தால் 'ராவ் கமிட்டி'யாரின் பிரயாஸை வீண் போனதற்கு ஒருவரும் வருந்தார். உடம்பும் ஸரியாயில்லாதவள், புத்தியும் ஒருவகைப்பட்டு நிதானமான யோசனையோடு இல்லாதவள்; நிமிஷத்திற்கு ஒரு எண்ணம்; ஒரு பக்கம், போனால் போகட்டுமென்பாள்; அதே மூச்சில் பண ஆசையினால் தனக்குத் குறைந்த வாடகையைக் கொடுத்துவருபவரைத் தூற்றுவாள். வீட்டு நெருக்கடியில் தனக்கென்று வைத்துக்கொண்டிருக்கும் மாடி ரொம்ப பெரிதாயிருப்பதால், அதில் ஒரு பாகத்தை வாடகைக்கு விடலாமென்று தோன்றி ரூ. 60 வசூல்செய்து வந்தாள். கேட்டவர்களுக்கு உறவுக்காரர் வந்திருக்கிறார்கள் என்று தெரிவித்துவந்தாள்; இது எப்படியோ 'ஹௌஸ் கண்ட்ரோல'ருக்குத் தெரியவந்து, இவளுக்கு ரூ. 500 தண்டம் போட்டு, அந்த வாடகை இடத்திற்கும் ரூ. 35 குடிக்கூலி என்று திட்டம் வைத்து விட்டார். இவளுடைய மற்றொரு வீட்டில் வாடகைக்கு இருந்தவர் ஏதோ குடும்பக் கஷ்டத்தால் காலிசெய்துகொண்டு கிராமத்தோடு போவதாக ஒரு பேச்சு ஏறபட்டது. இப்பேச்சு எழுந்ததுதான் தாமதம், உடனே எம் தெருவில் போக்குவரத்துகள், நடமாட்டம், காரோட்டம், ராணுவப்பணியிலுள்ளவரின் மிலிடரி லாரிகள் எல்லாம் அதிகரித்தன. தப்பாய் தகவல் கொடுக்கப்பட்டு 'ரெண்ட்-கண்ட்ரோலர்'கூட இரண்டு தரம் வீணாக இதை, 'கமாண்டியர்' செய்தார். சாரை சாரையாய் மாடியேறி வீட்டுக்கார அம்மாளை ஜனங்கள் கேட்டுக்கொண்டனர்; சிலர் தமக்குள்ள கஷ்டங்களை மிகவும் உருக்கமாய் அவளிடம் சொன்னார்கள்; சிலர் பெண்பிள்ளைக்குப் பெண்பிள்ளை தாக்ஷண்யமிருக்கும் என்று தம் மனைவி மக்களை அனுப்பிப் பார்த்தார்கள். நானும் ஸ்வயமாகவும் என் மனைவி மூலமாகவும் முயற்சிசெய்து பார்த்தேன்.

"ரிப்பேர் செஞ்சூட்டுதான் விடனும்...... ......என் மருமான் வரப்போரான்......... எங்க வக்கீலாத்துலே ஏதோ கல்யாணம் பண்ணனமாம், அதுக்கு ஜனங்கள் வந்து தங்களமாம்............வாடகை 80 ரூபா வேனும்...100 ரூபாகூட கொடுக்கலாமே, பெரிய வீடு......ஆகட்டும், அப்பரம் வாங்கோ; டாக்டர் 'ப்ளட் ப்ரெஷர்' இருக்கரத்துனாலே அதிகமாப் பேச வேண்டாங்கரார்......"

இதுமாதிரி எவ்வளவோ ஸால்ஜாப்புக்கள் சொன்னாள் வீட்டுக்கார அம்மாள். நாட்கள் கழிந்து வந்தன. உண்மையிலேயே பழைய குடித்தனக்காரன் அவ்வீட்டை விட்டுப்போக ஏற்பாடு செய்துவந்தான். திடீரென ஒருநாட் காலை தெரு அல்லோலகல்லோலமாயிற்று; வீட்டு வாசல்களிலும் மாடிகளிலும் பெண்களும் சிறுவரும் மற்றோரும் வேடிக்கை பார்க்கக் குவிந்தனர். ....

முந்திய நாள் ஸாயங்காலமாய் திருவட்டீச்வரன் பேட்டையிலிருந்து வக்கீல்ஒருவர், வீட்டை விட்டு வீட்டுக்காரரால் பலத்காரமாய்த் தெருவிலே விரட்டப்பட்வர், தம் பரிதாபகரமான நிலைமையைச்சொல்லி, நம் அம்மாளிடம் சரணம் புகுந்து ரூ. 125 அட்வான்ஸ் கொடுத்து விட்டு, ராத்திரியே தம் ஸாமான்களைக்கொண்டு வர ஏற்பாடு செய்தாராம். நாம் முன் கேள்விப்பட்ட ஆசாமியாகத்தான் இவர் இருக்கவேண்டும். அம்மாள் வீட்டில் குடியிருப்பவர் இரண்டு நாளில் நிச்சயம் காலி செய்துகொண்டு போவதாய்ச் சொல்லி இரண்டொரு பெரும் சாமான்களையும் அனுப்பி விட்டாராம். போகும் ஸாமான்களை நிறுத்தி வண்டியாட்களிடம் உளவு தெரிந்து கொண்டு ஒரு மிலிடரி இஞ்சினீர் வீட்டு அம்மாளிடம் இரவு 10 மணிக்கு வந்து ரூ. 150க்கு ஒரு செக் கொடுத்து விட்டு காலையில் ஸாமான்களைக் கொண்டு வருவதாய்ச் சொல்லிவிட்டுப் போனாராம். அம்மாள் இரண்டு அட்வான்ஸையும் வாங்கிப் பூட்டி வைத்துக்கொண்டாள். வக்கீல் ராத்திரியெல்லா மிருந்து தம் ஸாமான்களை வாசல் தாழ்வாரத்தில் இறக்கினார்; பொழுது புலர்ந்ததும் அவர் சற்று வாசலிலேயே கண் அயர்ந்து தம் 'ஈஸிச் சேரில் தூங்கும்போது மிலிடரி லாரி ஒன்றில் பல ஸாமான்களைப் போட்டுக் கொண்டு வந்து, மிலிடரி இஞ்சினீர் உள்ளே நுழையப் பார்த்தார். வக்கீல் திடீரென விழித்துக் கொண்டு, ஓடிப்போய் வாயிற் கதவைத்தாளிட்டுப் பூட்டினார். 'கார்ஷெட்' கதவுவழியே இஞ்சினீர் இரண்டொரு சாமான்களை உள்ளே தூக்கிப் போட்டார். 'காம்பௌண்ட்' சுவரின் மேலாகவும் உள்ளே நாற்காலிகளை விட்டார். "நான் அட்வான்ஸ் கொடுத்திருக்கிறேன்" என்றார். "நான்தான் மொதலில் கொடுத்தேன்" என்றார். வார்த்தை தடித்தது; யஜமானரிடமிருந்து சச்சரவு வேலையாட்களுக்குப் பரவிற்று; கைகலந்தது; நாற்காலிகள் சுவரின் மேல்பக்கமாய்த் தெருவில் வீசி எறியப்பட்டு, அங்க ஹீனமாயின. இஞ்சினீயர் ஆங்கிலத்தில் வசவுகளை வர்ஷித்துக்கொண்டிருந்தார்; வக்கீல் மெள்ள நகர்ந்து தம் பூட்டுகளைக்கொண்டு வீட்டுக் கதவுகளைப் பூட்டிக்கொண்டு தாமும் வெளியே வந்துவிட்டார். பாவம்! வீட்டிற்குள் இருந்த பழம் குடித்தனக்காரர் உள்ளே மாட்டிக்கொண்டு, காபிக்கு வெளியே போகமுடியாமல் கத்திக்கொண்டிருந்தார். வக்கீல் உள்ளிருப்பவர் கத்தலை கவனிக்காமல் வீட்டுக்கார அம்மாளிடம் விரைந்து வந்தார், இஞ்சினீரும் வந்தார்; அவளுக்கு எதிரில் சிறு வாய்ப்போர் நடந்தது. இருவருமாய் 'இரண்டுபேரிடம் எப்படி அட்வான்ஸ் வாங்குவாய்' என்று தாக்கினார்கள். அம்மாளுக்கு உடம்பு சரியா இல்லை; மூளை குழம்பியிருந்தது; ரத்தக்கொதிப்புப் பாதையொருபக்கம்; பதிலேஉரைக்காமல் இருந்தாள். 'ரூ. 150 கொடுக்கும் இஞ்சினீயரே வீட்டிற்கு வரவேண்டியவர்' என்றாள்; 'எனக்கு ரசீது' கொடுத்திருக்கேளே, என்ன பைத்யமா உமக்கு?' என்று போலீஸ் கோர்ட் கூச்சலைப் போட்டார் வக்கீல். விட்டுக்கார அம்மாள் தம் சார்பாயிருப்பதைத் தெரிந்துகொண்ட இஞ்சினீர், அம்மாள் தம் டாக்டரையும் வக்கீலையும் கூப்பிடுவதற்காக வைத்திருக்கும் டெலிபோனை எடுத்து, போலீஸை வரவழைத்தார். போலீஸ் வந்ததும் வக்கீல் திருவட்டீச்வரம்பேட்டை வீடு 'எவிக்ஷன்-கேஸால்' வந்தவர் என்பதையும், வீட்டுக்கார அம்மாள் பழம் 'ரெண்ட் கண்ட்ரோல் கேஸில்' தண்டம் கொடுத்தவள் என்பதையும் தெரிந்துகொண்டனர். அம்மாள் பயந்துபோனாள்......

"ப்ளட் ப்ரஷர்!! டாக்டர், டாக்டரைக் கூப்பிடுங்கள்!! நம்பர் 3553........" என்று சொல்லிக்கொண்டே படுக்கையில் சாய்ந்தாள்......

சில நாட்கள் கழிந்தன. வக்கீல் பாவம் ஸம்ஸாரி என்ற அனுதாபத்தால் வீட்டில்

இருக்க அனுமதிக்கப்பட்டார். போலீஸாரும் அதிக வாடகைக்காக ஆசைப்பட்ட அம்மாளுக்குச் சிக்ஷையொன்று ஏற்பட வேண்டுமென்ற காரணத்தாலேயும் வக்கீலை அவ்வீட்டில் இருக்க அனுமதித்தனர். மிலிடரி இஞ்சினீர் பாவம் தோல்வியுற்றதுமன்றி, தன் அட்வான்ஸை அம்மாளிடமிருந்தும் வீட்டிற்குள் அகப்பட்டுப்போன தன் ஸாமான் இரண்டொன்றை வக்கீலிடமிருந்தும் திரும்ப வாங்கிக்கொள்வதற்குள் படாத பாடுபட்டுப் போனான்.

அம்மாளுக்குச் சிக்ஷை போதாதென நினைப்பீர்கள்; வக்கீலிடம் வாங்கின ரூ 125 அட்வான்ஸுக்கு அப்புறம் இன்று மாதங்கள் மூன்று கழிந்தும் காலணா வாடகையென்று கொடு—பட்டதாகத்தெரியவில்லை. முன் போலவே, தன் மாடி 'பால்கனி' யில் வந்து நின்று கொண்டு, தன் வாடகை வீட்டை நோக்கி அங்குள்ளவரை மூன்று காலம் சாப்பிடுவதற்கு முன்வைதுவிட்டுப்போகிறாள் நம் அம்மா................

நின்றுபோன மாதவிடாய்

குமாரி (TABLETS) மாத்திரையின் உபயோகத்தினால் நின்றுபோனது நீங்கும். வருங்காலத்திலும் கஷ்டங்கள் நேரிடா. கெடுதலின்றி விரைவில் நலம் கிட்டும். இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் ஆயிரக்கணக்கானவர்கள் உபயோகிக்கின்றார்கள்.

சாதாரண கேஸ்களுக்கு	....	ரூ 3
நீண்டநாளைய கேஸ்களுக்கு	....	ரூ 5
மிக ஆபத்தான கேஸ்களுக்கு	...	ரூ 8
கர்ப்பத்தடை (6 மாத உபயோகத்திற்கு)		ரூ 4

(வி. பி. அணா 12 கூட)

தயாரிப்பவர்கள்

Mrs. P. DEVEE F. D. S. (C. M.)

Tollygunge, CALCUTTA.

கீழ்க்கண்டவர்களிடமும் கிடைக்கும் :—

(1) ஹரி & ஸன், 93, சைனாபஜார் ரோடு, மதராஸ்.
(2) வாஸு & ஸன்ஸ், 187, மவுண்ட் ரோடு, மதாரஸ்.
(3) ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பங்களூர் கண்டோன்மெண்ட்.
(4) L. M. முகர்ஜி & சன்ஸ் லிட்., 167, துரம்டோலா தெரு, கல்கத்தா.
(5) Miss. D. D. பாண்டே, ஹரிநிவாஸ், கிங்ஸ்வே, தாதர், பம்பாய்.
(5) J. டிராத்&கோ, மஹாத்மா காந்தி ரோடு, கராச்சி.

சித்ரா

கே. சுந்தரம்மாள்

— 4 —

காலமலரில் வருஷ இதழ்கள் இரண்டு உதிர்ந்தன. பிரபாகரன் B. Sc. பாஸ் செய்துவிட்டான். மெடிகல் காலேஜில் சேர ஏற்பாடு நடந்துகொண்டிருந்தது. சௌதா இண்டர் பரீக்ஷையில் தேறிவிட்டாள். வாழ்க்கைப் பரீக்ஷைக்கு ஆயத்தமாகிக்கொண்டிருந்தாள். பணமில்லா ராகவனுக்குச் சௌதாவைக் கொடுக்கமுடியாது என்ற பெற்ரோரின் மனதைத் திருப்தி செய்விக்க, முயற்சி செய்து, காசிக்குப் பக்கத்தில் முந்நூறு ரூபா சம்பளமுள்ள வேலை கிடைக்கும்படி செய்து, சௌதாவின் காதல் மணத்தை நிறைவேற்றி வைத்தான் பிரபாகரன்.

மண வாழ்க்கையைத் தொடங்கக் கணவனுடன் புறப்படத் தயாரான சௌதாமினி, புறப்படும் முதல் தினம், தனது அறையில், சித்ராவையும் பிரபாகரனையும் அழைத்துச் சென்று விடை கேட்கும்பொழுது, சித்ரா பிரிவின் துக்கம் பொறுக்கமுடியாமல் தேம்பி அழலானாள்.

"சித்ரா! ஏன் வருந்துகிருய்? பெண்களெல்லாம் இவ்விதமாக ஒருநாள் பிரிவது சாதாரணமாக நடக்கக் கூடியதுதானே. கூடிய சீக்கிரம் உன்னைச் சந்திப்பேன். இவ்வருஷம் S. S. L. C.-ஐ முடித்துவிடு. பிறகு அண்ணாவின் இஷ்டப்படி நடப்பது உன் கடமை. இன்னும் கொஞ்சகாலம் ஜாக்கிரதையாகவே நடந்துகொள். அண்ணா! உன் கொள்கைப்படி என் விஷயம் நடந்தது ஒருமாதிரி. உன் விஷயம் அவ்வளவு எளிதல்லவென்று எனக்குத் தோன்றுகிறது. என்ன நேர்ந்தாலும் சித்ராவைக் கைவிடாமலிருக்கும்படி உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். அவளைப் பிரிந்துபோவது என்னைச் சஹிக்கச் கூடாத வேதனையில் ஆழ்த்துகிறது. கள்ளமற்ற பெண். அவளது இளம் ஹ்ருதயத்தில் காதல் விதையை ஊன்றியவன் நீ. இப்பொழுதுதான் தளிர்விட்டுப் பூக்கும் சமயம். மலர் வாடாமலிருப்பது உனது பொறுப்பு. அண்ணா! நான் சிறியவள். ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். குற்றமிருந்தால் மன்னித்து விடு" என்ருள்.

"சௌதா! மன்னிப்பதற்கு ஒன்றுமே இல்லை. யௌவனகாலத்துமனோநிலைமையை ஆண்களைவிடப் பெண்களே சித்திரிப்பதில் வல்லவர்கள் என்பது எனது நம்பிக்கை. தற்சமயம் நானும் சித்ராவைப் பிரியவேண்டிய நிலைமையிலிருக்கிறேன். இனி அவள் தான் ஜாக்கிரதைப் படவேண்டும். நம்ப அம்மா அவள் அம்மா இருவரும் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்வார்கள். இவள் சம்மதிக்கவே கூடாது. நிலைமை நெருக்கடியானல், எனக்கும், உனக்கும், பயமில்லாமல், சித்தரா கடிதம் எழுதவேண்டும். லஜ்ஜையோ, பயமோ, கட்டுப்பாடோ கொஞ்சகாலமாகச் சித்ரா என்னுடன் சரியாகப் பேசுவதில்லை. தனிமையில் கண்டுவிட்டால், சிம்மத்தைக் கண்ட யானைபோல் பயந்து ஓடுகிருள். சில சமயம் என் மனோராஜ்யம் கற்பனை தானேவென்று கூடத் தோன்றி விடுகிறது. உன் தோழியின் விஷயத்தை உன் முன்னுகவே சொல்லிவிட்டேன்.

"படித்த பெண்ணுகவே அவள் என்னிடம் நடந்துகொள்ளவில்லை. நீ போகும் முன்பே அவளின் மனோபாவத்தை நான் தெரிந்துகொள்ளும்படி செய்தாயானல், மேல் நடக்கவேண்டிய விஷயத்தை ஒருவாறு தீர்மானிக்க முடியும்",

"அண்ணா! என்ன இருந்தாலும் ஆண்பிள்ளையின அவசரபுத்தி உன்னிடம் மட்டும் விலக்காகுமா? சித்ரா குழந்தைப் பருவமாக இருக்கும்வரை தாராளமாகப் பழகினாள். யௌவனத்தின் இயற்கை லஜ்ஜையைக் கொடுக்கிறது. அவ்வளவே. உன் மீது வெறுப்பு என்றோ, காதலில்லையென்றோ நினைப்பது தவறு. ஆழ்ந்த காதலே வெளியில் விகஸிக்காது. நீ சற்று வெளியில் போய் வா. எல்லாம் விளங்கும்படி செய்கிறேன்"

அவன் வெளியே சென்றதும் "சித்ரா! என் விஷயத்தில் எவ்வளவோ உதவிசெய்த நீ ஏன் இவ்விதம் நடந்துகொள்ளுகிருய்?" என்று அவள் கண்களைத் துடைத்துப் பக்கத்தில் உட்காரவைத்து அணைத்துக் கொண்டு கேட்டாள்.

"சௌதா! ஆரம்பமுதல் நான் சொல்லுவதைக் கேட்டுவிட்டு நான் நடந்துகொள்ளுவது சரியா தப்பா என்று தீர்ப்புக் கூறு. முதலில் எங்கள் உள்ளத்தை நீ எவ்விதம் அறிந்தாய். சொல் பார்க்கலாம்."

லிவர்க்யூர் பிராஞ்ச் ஆபீஸ்
பெரியதெரு
கும்பகோணம்.

Liver Cure Branch Office
Parekh Mansion
Sandhurst Road, (West)
BOMBAY 4.

"சாதாரணமாக நானுகவே உன்னை மதனியாக்கினல் என்ன? பணம் ஒன்றைத் தவிர, அழகு, படிப்பு எதில் குறை என்று எண்ணுவேன். சுகன்யா யாவற்றிலும் பொருந்தியவள். அம்மா அப்பாவிற்கும் மிகவும் இஷ்டம். அதனுல் நமது எண்ணம் பிரயோஜனமில்லை யென்று சமாதானம் செய்து கொள்ளுவேன். இரண்டு வருஷங்களுக்கு முன் அண்ணு பிரசங்கம் செய்தானே ஞாபகமிருக்கிறதா?"

"அதை மறக்கமுடியமா?"

"அதற்கு மூன்ரும் நாள் இவர் நான் அண்ணு மூவரும் பிரசங்கத்தைப்பற்றிப் பேசும்பொழுது "அண்ணு! எல்லோரையும் போல் மேடை மீது பேசுவதுடன் சரிதானு! காரியத்தில் நடத்தச் சக்தி உண்டா?" என்றேன்.

"அதென்ன அப்படிச் சொல்லுகிருய்? நிச்சயம் நடப்பேன்" என்ருன்.

"அப்படியானுல், சுகன்யாவை விட்டுச் சித்ராவை ஏற்றுக்கொள்ளுவாயா?" என்றேன்.

"சௌதா! என்ன சஹோதர ஒற்றுமை. என் மனதிலுள்ளதைச் சொல்லிவிட்டாயே. அம்மா அப்பாவை எதிர்க்காமல் பொறுமையாக நடந்து சித்ராவையே மணப்பேன்." என்ருன்.

"அவள் சம்மதம் வேண்டாமா?" என்ருரிவர்.

"கரும்பு தின்னக் கூலியா?" என்றேன்.

"இப்பொழுது எப்படி நிர்ணயிக்க முடியும், அவள் குழந்தை" என்ருரிவர்.

"அவள் சம்மதமிருந்தால்தான். சௌதா! அதை நீ அறிந்துகொள்ளுவாய்" என்ருன் அண்ணு.

"உன்னைவிட மூன்றுவயது பெரியவளல்லவா நான். உனது யௌவனப் பருவம் தொடங்கினது முதல், நாம் மூவரும் சேர்ந்து பேசும்பொழுது, உங்கள் கண்களையும், முக பாவங்களையும், வார்த்தைகள் வரும் ஸ்வாரஸ்யத்தையும் நான் கண்டு கொள்ளாமலிருக்க முடியுமா? பிறகு நான் செய்யும் பரிஹாஸங்களையும் அவன் விஷயமாக நான் சொல்லும் பணியை நீ செய்வதிலிருந்தும் உன் மனம் தெரிந்தது. தனிமையில் உங்கள் சந்திப்பு ஏற்பட்டிருக்குமென்று நினைத்திருந்தேன். ஆனுல் இன்று அவன் சொற்களில் வேதனை தொனிக்கின்றதே காரணம்?" என்ருள்.

"சொல்லுகிறேன் கேள். பிரசங்கம் நடந்த மறுநாள் நீங்கள் யாவரும் கல்யாண வீட்டிற்குச் சென்றிருந்தீர்களல்லவா? அம்மா ஆற்றில் ஜலமெடுத்து வரச்சொன்னாள். சென்றேன். பிரவாகம் மனதைக் கவர்ந்தது. உட்கார்ந்தேன்" என்று (அன்று நடந்த விஷயம் முழுவதும் சொல்லிமுடித்தாள்) "சௌதா! அந்தச் சமயம் அவர் சொன்ன விஷயம் ஒன்றுமே தெளிவாகப் புரியவில்லை. காத்தியாயினி கல்யாணம் செய்துகொண்டது எதனால்? பெண்கள் கல்யாண மில்லாமலிருக்க முடியாதா? என்ற ஏதோ விதமான சிந்தனைகளெல்லாம் ஓடிற்று. ஆனால் அன்றையிலிருந்து இவரின் ஞாபகம் தோன்றும் பொழுதும் நேரில் கண்டபொழுதும் என் மனதில் ஒருவித சந்தோஷ உணர்ச்சி தோன்றும். அதையும் நான் பொருட்படுத்தவில்லை. யௌவனத்தின் மனப் பான்மை தோன்றினதுமுதல் காத்தியாயினி ஏன் கல்யாணம் செய்துகொண்டாள் என்ற விஷயமும், மாசிலாமணி, எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த வாழ்க்கையை மேற்கொள்ள உறுதிகொண்டாளோ என்ற பிரச்னையும் தெளிவாயின. எனது நிலைமையை நினைக்க, சுகன்யாவின் வாழ்க்கையில் நான் குறுக்கிடுவது தப்பு என்ற முடிவில் கல்யாணமில்லாமலே காலங்கழிக்கத் தீர்மானித்துவிட்டேன், ஆனால் இவரை மறப்பது என்பது மட்டும் முடியாது என்பது தெளிவாயிற்று. அதற்கும் அவரை ஹ்ருதயாசனத்தில் வைத்துப் பூஜிப்பதே கடமை என்ற முடிவிற்கு வந்தேன். அம்மா ஒரு ஆண் பிள்ளையுடனும் பேசக் கூடாது என்றும், முக்யமாக இவரிடம் தனிமையில் பேசக்கூடாது என்றும் கண்டித்து வந்தாள். அதுவும் நன்மை தரும் என்றே அவள் கட்டுப்பாட்டிற்கு அடங்கி நடந்தேன். அதற்காக இவரிடம் பேசாமலுமில்லை. தனிமையில் சந்திக்கும் பிரமேயம் அதிகமாக ஏற்படவில்லை.

"அன்று என் அழகைப்பற்றி அவர் சொன்னபொழுது, என்னிடம் எதை எதிர்பார்த்தார் என்பது கொஞ்ச நாட்களுக்கு முன் சிந்தனைசெய்து பார்க்கும் பொழுது தான் தெளிவாயிற்று. தனிமைக்கு இடமளிப்பது உசிதமல்ல என்று நினைத்தேன். அவரிடம் நான் சரியாக நடந்துகொள்ளவில்லையென்று சொன்னதிற்குக் காரணம் சொல்லுகிறேன் கேள். ஆறுமாதத்திற்கு முன் ஒருநாள் சாயங்காலம் உங்கள் வீட்டிற்கு வந்தேன். ஒருவரும் தென்படவில்லை. ஹாலில் ரேடியோவின் பக்கத்தில் ஈஸிச்சேரில் இவர் சாய்ந்துகொண்டு பாட்டை ரஸித்துக்கொண்டிருந்தார். இவரைத் தாண்டிச் செல்லும்பொழுது வாய் பேசாமல் உற்றுப்பார்த்தார். நான் அதைப் பொருட்படுத்தாமல், சமையல் அறைக்குச் சென்றேன்; அம்மாவைக் காணவில்லை. நாடக ஒத்திகைக்காக ஸ்கூலுக்குச் செல்ல வேண்டியிருந்ததால் பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்துத் திரும்பினேன். வரும்பொழுதும் பேசாமல் சென்றால் என்ன நினைப்பாரோ? அலக்ஷ்யம் செய்வதாக நினைத்துவிட்டால் என்ன செய்வது என்ற பயத்துடன் சற்று எட்டவே நின்றுகொண்டு "அம்மா எங்கே?" என்றேன்.

"மார்க்கெட்டிற்குப் போய்வருவதாகச் சொன்னாள். உனக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"ஒன்றுமில்லை. வரச்சொன்னாள். என்ன விஷயம் என்று கேட்கத்தான். பிறகு வருகிறேன். ஸ்கூலுக்குச் செல்லவேண்டும்" என்றேன்.

"ஸ்கூல்சாக்கு. தனிமையில் என்னுடன் பேச மனமில்லை. அம்மா உத்தரவு. எவ்வளவுநாள் இந்த நாடகம் என்பதுதான் தெரியவில்லை" என்றார்.

"அவர் புன்சிரிப்புடன் சொன்னாலும், சொற்கள் என்மனதை என்னவோ செய்தன. உடனே செல்லக் கால் எழும்பவில்லை. அதனால் "அப்படி ஒன்றுமில்லை. என்மனம் அறிந்தும் தாங்கள் இப்படிப் பழி கூறுவது நியாயமா" என்றேன்.

"அப்படியானால் இப்படிவா. உதயவர்மராஜா எவ்வளவு இனிமையாக ராகமாலிகையை வீணையில் எழுப்புகிறார். சற்றே கேட்டுவிட்டுப் போகலாம்" என்றார்.

"சரி" என்று பக்கவாட்டில் ஒரு முழம் தள்ளியே நின்றுகொண்டேன். அப்படியும் எட்டி என் கையைப்பிடித்து அருகிலிழுத்தார். அதற்கும் சம்மதித்தேன். கையைப் பிடித்தவாறே ஏதோ அவருக்குத் தோன்றியவையெல்லாம் கேட்டார். பதில் சொல்லிக்கொண்டே வந்தேன். அப்படியிருந்தும் அவர் கையைப்பிடித்ததும் என் உடல் பதறினதுகண்டு, ஏன் இப்படிப் பதறுகிறது உன்தேகம். மனதில் அன்புண்டானால் இந்தப் பதட்டம் ஏன்?" என்றார்,

"இதற்கு என்னபதில் சொல்லுவது? உங்களிடம் அன்பில்லாமலில்லை, யாராவது வந்துவிடப்போகிறார்களே என்ற பயம் தான் காரணம்," என்றேன்.

"எனக்குத் தெரியும் சமயம், உனக்குள்ள மானுவமானத்தில் எனக்கும் பங்குண்டு" என்றூர்.

"அத்துடன் பிரிந்தாலும் நன்ருக இருந்திருக்கும். வீணை கேட்பதாகச் சொன்னூரேயன்றி, வீணை முடிந்து ஏதோ தெலுங்கில் நாடகம் நடந்துகொண்டிருந்தது. அதை அவர் கவனிப்பதாகத் தெரியவில்லை. அந்தச் சமயம் மனம் இருந்த சலுகையில், "உதயவர்மராஜா இப்பொழுது என்ன ராகம் வாசிக்கிருர்" என்றேன்.

சட்டென ரேடியோ பக்கம் திரும்பியவர், "ஓஹோ பரிஹாசமா செய்கிருய்? உனது சொல்லின் வீணா நாதத்தில் மனம் ஒன்றியிருக்கும்பொழுது நின்றுவிட்ட வீணா நாதத்தை எப்படித் தெரிந்துகொள்ள முடியும். எவ்வளவு குறும்பு? இந்தப் பேச்சே என்னைக் காந்தம்போலிழுக்கிறது. ஆனுல் அது கிடைப்பது குதிரைக்கொம்பாக இருக்கிறது" என்று சொல்லியவாறு எழுந்து உட்கார்ந்துகொண்டு அணைத்து முத்தமிடத் தம் பக்கமிழுத்தார். நான் கொண்டிருக்கும் மனே உறுதியில் இச்செய்கைக்கு இடமளிக்க இஷ்டமில்லை. ஆனுலும் அந்தச் சமயம் அவர் மனப்படி நடந்துவிட்டு இனிமேல் இதுமாதிரி விஷயங்களுக்கு இடமில்லாமல் நடக்கவேண்டுமென்றுதான் நினைத்தேன். ஆனுல் விதி வேறு விதமாக நடக்கச் செய்துவிட்டது. முதலில் அவர் செய்கைக்கு வாயினுல் மறுப்புக் கூறினேன். கேட்கவில்லை. விடுவிக்கப் பிரயத்தனம் செய்தேன். பயனில்லை. சம்மதிக்கும் சமயம் பின்பக்கம் ஏதோ சப்தம் கேட்டது. அவ்வளவே. என் மனம் பட்டபாட்டை ஈசன்தான் அறிவார். மேலே சிந்தனைக்கு இடமில்லை. முழுப் பலத்தையும் உபயோகித்து அவரைத் திமிறிக்கொண்டு ஓரே ஓட்டமாகத் திரும்பிப் பாராமல் ஓடி, தெருவாசற்படிவந்து, பிறகுதான் நிதானமாக நடந்து வீடு சென்றேன். இது ஏதோ விபரீதம்தான். அம்மா கண்டிருந்தால் என்னவாகுமோ என்று பயந்தேன். இரவு தூக்கமே இல்லை. மறுநாள் அம்மா பேசியதிலிருந்து அம்மா வரவில்லை, கன்றுக்குட்டி கழுநீர்ப் பாத்திரத்தை உருட்டினதாக இவர் சொன்னதாகத் தெரிந்தது. அன்றுமுதல் தனிமையில் காணும்பொழுது முகத்தைத் திருப்பிக்கொள்ளுகிருர். அல்லது கடுமையாகப் பார்க்கிருர். நான் மன்னிப்புக் கோரவில்லை. இதுவே ஒரு கட்டுப்பாடாக இருக்கட்டுமென்பது எனது தீர்மானம், சௌதா! நீயும் ஏதோ சொல்லுகிருய். அவரும் ஏதோ தீர்மானம் செய்கிருர். பெற்றவர்கள் மனம் நோக, ஏகபுத்ரன் நடப்பது என்பது சரியாகத் தோன்றவில்லை. அதனுல் மாசிலாமணியைப்போல்தான் நான் வாழ்க்கை நடத்தப் போகிறேன். கொஞ்ச காலம் மனதுடன் போராடவேண்டும். அவ்வளவே, பின்னுல் யாவும் சரியாகிவிடும். இதுவே எனது முடிவான தீர்மானம். இந்த நிலைமையில் நான் நடந்து வருவது சரியா தப்பா சொல்லு."

"நீ செய்வது சரியல்லவென்று சொல்ல முடியுமா? ஆனுல் மாசிலாமணியை நீ பின்பற்றுவது என்பது நடவாத விஷயம். அண்ணு அதற்கு இடமளிக்கமாட்டான். ஆண்பிள்ளைகளே இந்த விஷயங்களில் சற்று ஆத்திரப்படுவது என்பது சர்வ சகஜம்போலும். இருந்தாலும் நான் சொல்வதையும் கொஞ்சம் கேட்டு நட. அவனும் பட்டணம் போகப்போகிருன். லீவு நாட்களில்தான் வருவான். அந்தச் சமயங்களில் சற்றே சரஸமாகப் பேசி மனதைத் திருப்தி செய்துவிடு. எப்படியானுலும் நீ அவனை வரித்துவிட்டாய். இதில் தப்பு ஒன்றுமில்லை. அவன் மனம் வெறுத்து உன்னைக் கவனியாமல் விட்டுவிட்டால் மூன்ரும் தாரக் கிழவனிடம் உன்னைத் தள்ளிவிடுவார்கள். அண்ணுவிடம் மனதை இஷ்டப்படி விடும் சுபாவமில்லை. நியாயத்திற்கு விரோதமாக நடக்கமாட்டான். அளவிற்குமீறி ஒன்றும் செய்யமாட்டான். அதனுல் அச்சமில்லாமல் அவனிஷ்டப்படி நீ நடந்துகொள்ளுவதில் விபரீதம் ஒன்றும் நேரிடாது. இருந்தாலும் உன் உறுதி மெச்சத் தகுந்ததே. அண்ணுவிடம் சித்ரா உன் மனப்படி நடப்பாள். உன்னைத் தெய்வமாக வணங்குகிருள் என்று சொல்லிவிடுகிறேன். கவலைப்படாமல் படி. உனக்கு எந்தவிதமான உதவி வேண்டுமானுலும் எனக்கு எழுது. என் கணவர் பரந்த நோக்கமுள்ளவர். அதனுல் நீ பயமில்லாமல் எனக்குக் கடிதம் எழுது. நான் இப்பொழுது சென்ருல் அடுத்த வருஷம்தான் வரமுடியும். அநேகமாக உன் கல்யாணமே காரணமாகலாம். அண்ணு அன்று சொன்னபடி ஆண் பெண் இருவரும் விட்டுக்கொடுத்து நடப்பதுதான் நன்மை தரும். மாசிலாமணி மாசிலாமணியென்று வீண் விரோதத்தைத் தேடிக்கொள்ளாதே. இவ்வளவுதான் நான் உனக்குச் சொல்லமுடியும். நீ ஏன் வேறு வீட்டிலிருக்கவேண்டும். இவ்விடமே இருக்கும்படி அம்மாவிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்".

"வேண்டாம் சௌதா! வீட்டுக்காரப் பாட்டியம்மாள் என்னிடம் மிக்க அன்பு

கொண்டவள். எனக்குச் சாதம் போட்டுப் பக்கத்தில் படுத்து, கண்ணை இமைகாப்பது போல் காப்பாற்றுகிருள். அவளைப்பிரிய மனம் வராது. மேலும் உனது அம்மாவின் சுபாவத்திற்கு நான் தள்ளியிருப்பதே நன்மைதரும். படிக்கவும் வசதி யேற்படும். மற்ற விஷயங்களில் உன் புத்திமதிப்படி நடந்துகொள்ளுகிறேன். நாம் எல்லாம் முடிவு செய்து விடுகிருேம். விதியின் போக்கு என்னவிதமான முடிவைக் காண்பிக்கப் போகிறதோ? சில சமயம் என்ன உலகம்? பணமில்லாத ஜீவன்களை ஈசன் ஏன் வைத்து ஆட்டுகிருர் என்று தோன்றுகிறது.''

"சித்ரா! யாவரும் பல்லக்கில் ஏறினுல், சுமப்பதற்கு ஆள் வேண்டாமா. கவலைப் படாதே. எல்லாம் நன்மையாகவே முடியும். நான் புறப்படும்வரை இவ்விடமேயிருந்து சந்தோஷமாக விடைகொடுத்து அனுப்பு'' என்ருள்.

"நான் அங்கே வருகலாமோ'' என்ருன் வாயிற்படியில் நின்ற பிரபாகரன்.

"நல்ல சமயத்தில் வந்தாய். வா?'' என்ருள் சௌதா.

"என்ன விஷயம்? என்று கேட்டுக் கொண்டே அவர்களுக்கு எதிரிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தான்.

"நான் சொல்லவில்லையா. லஜ்ஜையைத் தவிர வேறென்றுமில்லை. வீண் மனத்தாங்கல் படாதே. இனிமேல் சித்ரா உஷாராக நடந்துகொள்ளுவாள். எனக்குத்தான் உங்களையெல்லாம் விட்டுத் தொலைதூரம் போகிருேமே யென்று வருத்தமாக இருக்கிறது''

"அட அசடே! உண்மைக் காதலில் கட்டுண்டவர்களுக்கு மற்றவர்களால் என்ன ஆகவேண்டும். ராகவனின் அன்பில் எங்களை நினைக்கக்கூட மாட்டாய்'' என்ருன்.

அந்தச் சமயம் 'சௌதா' என்று தாயார் கூப்பிட "நீங்களிருவரும் இவ்விடமேயிருங்கள். ஐந்து நிமிஷத்தில் திரும்பிவிடுகிறேன்'' என எழுந்து சென்ருள்.

"வக்கீல் வைத்துச் சமாதானம் பேசியாயிற்ரு? அவளிடம் என்ன சொன்னுய்?'' என்ருன்.

"வக்கீல் நான் ஏற்படுத்தவில்லையென்பது தங்கள் நெஞ்சைத் தொட்டுப் பார்த்தால் தெரியும். அன்று ரேடியோவின் கீழ் நடந்த விஷயத்தைச் சொன்னேன். அதுதானே உங்கள் மனதிற்கு வேதனை தந்த விஷயம். மன்னிப்புக் கோரவில்லையென்பதுதானே கோபம்?''

"மன்னிப்பு யாருக்கு வேண்டும்? என்னிடமுள்ள பயம்தானே அப்படி ஓடினுய், அல்லது அலக்ஷயம்''

"நீங்கள் நினைப்பது தவறு. சப்தம் கேட்டதே காரணம்''

"அப்படியானுலுமென்ன? காட்டிக் கொடுத்துவிடுவேனே. சட்டெனப் பக்கத்து அறையில் மறைத்துவைப்பேன். யார் வந்தாலும் ஏமாற்றிச் சமயத்தில் உன்னை வெளியில் அனுப்பியிருப்பேன். அவ்வளவு தைரியமில்லாமலா அப்படி நடப்பேன்''

"அதென்னவோ என் நிலைமையில் நீங்கள் இருந்தால் அப்பொழுது தெரியும் அந்தப் பாடு. தாங்கள் ஆண் சிங்கம். குற்றம் என்னைத்தான் சாரும். போனது போகட்டும் பயந்துகொண்டே நடப்பானேன். பயமில்லாமல் நடக்கும் காலம் வரும்மட்டும் மனதை அடக்கியாளுவது கஷ்டமா? கோபம்வேண்டாம். உங்கள் மனப்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன். என்னைக் காப்பது தங்கள் பொறுப்பு''

"சித்ரா! சும்மா விளையாட்டாகப் பேசினேன். வருத்தப்படாதே. அன்று நானும் திடுக்கிட்டேன். இருந்தாலும் நீ அவ்விதம் ஓடியிருக்கவேண்டாம். என்னைப் பெண்பித்தன் என்று எண்ணிவிட்டாய்; அப்படித்தானே?'' என்ருன் சிரித்துக்கொண்டே.

"உலகமே பித்தம் பிடித்ததுதான்'' என்று அவளும் சிரித்தாள்.

"பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது'' என்று பாடிய வண்ணம் சௌதா நுழைந்தாள். பின்னுல் ராகவனும் வந்தான். சம்பாஷணை வேறுவிதமாகத் திரும்பிற்று.

மறுதினம் சௌதாமினி புறப்படும் சமயம். ஒரே பெண்ணைப் பிரியும் பெற்ருேர்கள் கண்ணீரினுல் அவளை ஆசிர்வதித்து அனுப்பினுர்கள்.

"ராகவா! செல்வமாக வளர்ந்தவள். பிரித்து தொலைதூரம் அழைத்துச் செல்லுகிருய். குற்றம் செய்தாலும் பொறுமையாகக் கண்டித்து, ஆதரவுடன் நடத்து. சௌதா! கணவனுக்கு அடங்கி, எதிர்ப்பில்லாமல் நடந்து நல்ல பெயரெடு'' என்று சொல்லும்பொழுதே, தாயாரின் தொண்டை துக்கத்தால் பேச மறுத்துவிட்டது.

அவன் ஸ்கூலுக்குப் போகிறான். அங்கிருந்து என்ன கொண்டு வருவான்? புதிய அறிவு, புதிய முறைகள்—சில தொத்து வியாதிக் கிருமிகளுங்கூட! அவனுக்குக் கற்றுக் கொடுத்த எல்லாப் பாதுகாப்புகளுடனும் தாயார் தன் மகனை அனுப்புகிறாள். ஆரோக்கியமுள்ள சிறுவனையும் பீடிக்கக் கூடிய அழுக்கு அபாயத்திலிருந்து காப்பாற்ற லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிப்பதே அவற்றுள் முக்கியமானது.

லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.

அது ஒரு நல்ல பழக்கம்.

L. 78-23 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

"பிரிவு என்பது கொடிய துன்பம். வளர்த்த கண்வமகரிஷியே சகுந்தலையைத் துஷ்யந்தனிடம் அனுப்பும் சமயம் துக்க மடைந்தார். நாம் எவ்விதம் தாங்குவோம்? ஆனாலும் உலகில் பெண்கள் ஒருநாள் பெற்றோரைப் பிரிவது என்பது சர்வசகஜமாக நடப்பதுதான். ராகவா! சௌதா இருவரும் ஒற்றுமையுடன் வாழ்க்கைப் படகைச் செலுத்துங்கள்'' என்றார் தந்தை.

''ராகவா! இருவரும் எந்த விஷயத்திலும் ஒற்றுமையாக, விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளுங்கள். எந்த விஷயத்தையும் இருவரும் சேர்ந்து ஆலோசித்துச் செய்யுங்கள். ஒருவரை மறைத்து மற்றவர் ஒரு காரியமும் செய்யாதீர்கள். அப்படியிருந்தால் வாழ்க்கைப்படகு செல்லும் பாதையில் புயலே ஏற்படாது'' என்று தனது கொள்கையை உபதேசம் செய்தான் பிரபாகரன். ஆனாலும் பிரிவின் துக்கம் கண்களில் நீர் தளும்பிற்று.

ஸ்டேஷனுக்குச் சென்ற சித்ரா ரயில் புறப்படும் சமயம் கதறிவிட்டாள். வீட்டிற்கு வந்தாள். உலகமே சூன்யமாகத் தோற்றமளித்தது. தனது பலமே குன்றி விட்டதுபோன்ற உணர்ச்சி தோன்றிற்று. இனி ஆறுதல் சொல்வார் யாருமில்லை. உலகில் இனி, தான் தனிப்பட்டவள் என்ற உணர்ச்சிதான் மேல்நோக்கி நின்றது. வீட்டுக்காரப் பாட்டி சமாதானமெல்லாம் பயன்படவில்லை. இரவு அழுதழுது, கடைசியில் துக்கத்தின் முடிவு தூக்கம் என்பது போல் தூங்கினாள்.

— 5 —

காலை பத்துமணி. மார்கழிமாத மாதலால் பாஸ்கரனது பவனி ஜீவராசிகளுக்குப் பனியினால் உறைந்துபோயிருந்த நரம்புகளுக்கு ஓர்வித உணர்ச்சிபெறும் சக்தியைக் கொடுத்தது. முற்றத்திலுள்ள வெயிலில் கால்களை நீட்டியவாறு உட்கார்ந்து ராம ஜபம் செய்துகொண்டிருந்தாள் மீனுப் பாட்டி. அந்தச் சமயம்,

"பாட்டி! சித்ரா இருக்கிறாளா?'' என்று கேட்டவண்ணம் அவ்விடம் வந்தான் பிரபாகரன்.

"வா அப்பா! பிரபா. பட்டணத்திலிருந்து எப்பொ வந்தே. உடம்புவிச்சா இருக்காயா?'' என்றாள் பாட்டி.

"நேற்று சாயந்திரம் வந்தேன், விச்சா இருக்கேன். உங்கள் உடம்பு விச்சாயிருக்கேளா?''

''என்னமோ இருக்கேண்டா அப்பா. பொண்ணும் புள்ளையும் இருந்து என்ன? தந்தி அடிச்சாக்கூட மூன்று நாளாகும், இந்தப் பொண்ணு சித்ராதான் பெத்த பொண்ணு, சமைச்சு கலத்திலே சாதம் போட்டு, பாட்டீன்னு அருமையாக கூப்படர அன்பே போருமே. என்னமோ குழந்தை நல்ல இடத்திலே வாக்கப்பட்டு ஆயிரங்காலம் நன்னாயிருக்கணும்''

"பாட்டி! அன்பு ஒன்றுதான் மனிதனுக்கு இன்றியமையாதது. நீங்களும் அவளை அன்புடன் ஆதரிக்கிறீர்கள். அவளும் அதை அறிந்து நடக்கிறாள். உங்கள் சுபாவம் போற்றத் தகுந்ததே''

"நீயுமிருக்கையா? நானுமிருக்கேன்னு போரதுதான் அழகு. நம்ம தலையிலே கட்டிண்டு போறது கொடுமை ஒன்றுதான்''

"உங்கள் பின்னோடு அன்புதான் வரும். அதிருக்கட்டும், இப்பொழுது சித்ரா எங்கே? அவசரமாகப் பள்ளிக்கூட விஷயமாக அவளைப் பார்க்கவேண்டும்''

''இப்பதான் அவ டீச்சர் ஏதோ கடுதாசு கொடுத்தனுப்பினாள். அதை எடுத்துக் கொண்டு அவள் உள்ளுக்குப் போனாள்'' என்றாள்.

அவள் வார்த்தையை முடிக்கு முன்னமேயே உள் சென்ற பிரபாகரன் சத்தப்படாமல் அறையின் வாயிற்படியில் நின்று கொண்டான்.

மேஜையின்மீது விரித்து வைக்கப்பட்ட கடிதத்தையே உற்று நோக்கியவண்ணம், கண்களில் நீர் தளும்ப, இரண்டு கைகளையும் கன்னத்தில் வைத்து, முழங்கைகளை மேஜையின்மீது ஊன்றியபடி நாற்காலியில் உட்கார்ந்திருந்த தோற்றத்தை அவள் எதிரிலுள்ள கண்ணாடியின் பிரதிபிம்பத்தால் கண்ட பிரபாகரனின் மனம் துணுக்குற்றது.

நீண்ட மூச்சுடன் தலை நிமிர்ந்த சித்ரா கண்ணாடியில் பிரபாகரனின் உருவத்தைக் காணவே திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"வாருங்கள்! எப்பொழுது இவ்வூர் விஜயமோ'' என்றாள் தானாக வரவழைத்துக்கொண்ட புன்சிரிப்புடன்.

"நேற்றுச் சாயங்காலம் என்னுடைய விஜயம் நடந்தது. இதுவரை உன்னைப் பார்க்க வராமலிருந்தது தப்பிதம்தான். தங்கள் விஜயத்தை எதிர் நோக்கினேன். முன்பு

போல் அது சாத்யமாகாது என்ற விஷயம் அறிந்தபின்பு தேடிவந்தேன்'' என்று சொல்லியவண்ணம் அருகில் வந்து அவள் எழுந்திருப்பதைத் தடுத்து உட்காரவைத்து, நாற்காலிக் கையின்மீது உட்கார்ந்துகொண்டான்.

''தயவுசெய்து என்மீது வருத்தப்படக் கூடாது. யாராவது வந்தால் ஆபத்து, தாங்கள் நாற்காலியில் உட்கார்ந்துகொள்ளுங்கள். நான் பக்கத்தில் நிற்கிறேன்'' என்றாள் நிமிர்ந்து அவனை நோக்கி.

''வாசற் கதவைத் தாளிட்டு வந்துவிட்டேன். தட்டினால் சப்தம் கேட்கும். பாட்டி வெய்யிலின் சுக அனுபவத்தை விட்டு வரமாட்டாள். அப்படி வந்தாலும் சமாளிக்க எனக்குத் தெரியும். அது கிடக்கட்டும். இது என்ன கடிதம்? உலகை மறந்து சிந்தனைக்கிரகத்தில் அமிழ்ந்திருந்தாயே. கண்களில் நீர் துளித்ததே. என்ன விஷயம்?''

''நீங்கள் அறியாத விஷயம் ஒன்றுமில்லை. தாங்கள் இவ்விடம் வந்தது என்னைப் பார்ப்பதற்கு மட்டுமல்லவென்று நினைக்கிறேன்''

''நான் சொல்லுவதைக் கவனமாகக் கேள். காலை காபி சாப்பிட்டானதும் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து ''ஹிந்து'' வாசித்துக்கொண்டிருந்தேன். டெலிபோன் மணி அடித்தது. ரிஸீவரை எடுத்தேன். ''ஹலோ! குட்மார்னிங் பிரபாகர்'' நான் தான் மாசிலாமணி. ஓர் முக்யமான விஷயம் உதவிசெய்ய வேண்டுமென்றாள். தடையில்லாமல் செய்கிறேன் என்றேன்.

''ஏழை மாணவிகளின் உபகாரச்சம்பளத்திற்காக, S.S.L.C. மாணவிகளைக்கொண்டு காதலின் வெற்றி என்ற நாடகத்தை இன்று நடத்துவதாகத் தீர்மானித்து டிக்கெட் விற்றாகிவிட்டது. இதுவரை ரூபாய் பதினாயிரம் வசூலாகிவிட்டது. கேட் கலெக்ஷன் வேறு இருக்கிறது. நமது சித்ராதான் முக்யமான கதாநாயகி வேடம் ஏற்று நடிக்கப்போகிறாள். கதாநாயகன் வேடம் தாங்கி நடிக்கவிருந்த விசாலாக்ஷிக்குத் திடீரென்று ஜ்வரம் வந்துவிட்டது. நினைவின்றிப் பிதற்றுகிறாளாம். நிச்சயம் இன்று அவள் வர முடியாது. வேறு பெண்கள் இன்னும் பன்னிரண்டு மணி நேரத்திற்குள், பாடம் செய்து நடிக்கமுடியாது.........ஊர் ஜமீந்தாரும் கலெக்டரும் தலைமை வகிக்க ஏற்பாடு செய்துவிட்டேன். இனிமேல் நிறுத்த முடியாது. தாங்கள் சென்ற வருஷம் காலேஜில் இதே நாடகத்தை நடத்தியிருப்பதினால், நீங்களே கதா பாத்திரனாதலால், நீங்கள் இன்று அவ்வேடந்தாங்கி நடிக்க முடியுமென்று நம்புகிறேன். இன்று நான் அவமானமடையாமல் காப்பது உங்கள் கடமை'' என்று அழுதாள், ''சித்ராவுடன் நடிக்கும் பாக்யம் கிடைப்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன்'' என்று சொல்லிவிட்டு, ''நேரே அவள் வீட்டிற்குச்சென்று நான் நடிக்கப்போவதாகப் பிரஸ்தாபம் வேண்டாம், பின்னால் தெரிந்தால் பாதகமில்லை.'' என்றேன். சரியென ஒத்துக்கொண்டாள். என் பாடமும் உன்னிடமிருப்பதால்,போய்ப் பார்த்து இருவருக்கும் ஏதாவது சந்தேகங்கள் இருந்தால் தீர்த்துக்கொள்ளும்படி சொன்னாள். வந்தேன். இது விஷயத்தை உனக்கு எழுதியிருப்பாள். அதைப் பார்த்து வருத்தப்பட வேண்டிய காரணம்?''

''காரணம், எனது ஏழ்மையின் சின்னமே''

''இதென்ன அர்த்தமற்ற பேச்சு. ஏழ்மைக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''சம்பந்தமா? ஓர் தனவந்தர், அல்லது உயர்ந்த உத்தியோகஸ்தர் பெண், இப்படி உங்களுடன் நடித்தால், ஏழைகளுக்குத் தொண்டாற்றினதாகவும், கலைக்குப் புத்துயிர் கொடுத்ததாகவும், சமூகம், உங்கள் பெற்றோருமே கொண்டாடுவார்கள். என்னைப் போன்றவர்கள் என்றால், வயது வந்த பெண் லஜ்ஜையில்லாமல் மேடையேறி, அன்னிய ஆண்பிள்ளையுடன், கண்ணே, முத்தே, என்று கொஞ்சி, கட்டிப்பிடித்து, தொண்டு செய்யறாளாம், என்று ஏசுவதுமல்லாமல் என் முன்னாகவே, ''நீ இருக்கிற இருப்பிற்கு இதெல்லாம் நன்றாக இல்லை. நிலைமை தெரிந்து நட'' என்று அஞ்சாமல் சொல்லுவார்கள். அப்பொழுது எங்கள் மனம் என்ன பாடுபடும். மேலும் இன்று நமது ஊர் பிரபல பண்டாரம், வீரபத்ரன், எலெக்டிரிப் பல்பு வைத்து அழகிய இரு மல்லிகை மாலைகள் கட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறான், அந்த மாலையினழகை யாவரும் கண்டுகளிக்க; நூதனமாக இருக்கும் அம்மாலையைப் பார்த்து யாவரும் தங்களுக்கும் அதுபோல் செய்து தரும்படி கேட்க, விளம்பரமாக, கடைசியில் மாலை மாற்றும் ஸீனில், இரு நாற்காலிகளில் உட்காரவைத்து, ஹேமநளினியின் நடனம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நீங்களும் நானும் மாலை மாற்றினால், என்னவாகும்? சற்று சிந்தனைக்கு விடுங்கள்: என் வருத்தத்தின் காரணம் தெளிவாகும்'' என்றாள்.

''சே, இவ்வளவுதானா? விதியே நம்மைப் பிணைக்கிறது. அம்மா முதலியவர்களுக்கு,

நாடகம், நடிப்பு, இதற்காகப் பேசினால் நீங்கள் முட்டாள்'' என்று சொல்லிவிடு வேன். உலகம் பலவிதம். இப்படி வீணாகச் சிந்தனை செய்து மனதையும் மூளையையும் அலட்டிக் கொள்ளாதே. நம்முடைய மனச் சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நடக்கவேண் டும்.''

''அதுசரி. ஒன்றுமட்டும் கேட்டுக்கொள் ளுகிறேன்.''

''என்ன விஷயம்?

''மாலைமாற்ற வேண்டிய இடத்தில், எனக்கு நானே போட்டுக் கொள்ளும்படி என் கையில் கொடுத்துவிடுங்கள். நானும் உங்கள் கையிலேயே கொடுத்து விடு கிறேன். வீண் வசைமொழிக்கு இலக்காக வேண்டாம்.

''முடியாது'' என்ற பாவனையாகத் தலையை அசைத்தான்.

''ஏன்? இதில் என்ன தவறு?''

''சித்ரா! விதி. அதன் போக்கைத் தடுக் கும் சக்தி தேவர்களுக்குக்கூட கிடையாது என்று நிச்சயமாகச் சொல்லுவேன். திடீ ரென்று விசாலாக்ஷிக்கு ஜ்வரம் வருவா னேன். நமது பிணைப்பை ஈசனே ஊர்ஜிதம் செய்கிறார். விதி ஒன்று கூட்டுகிறது. நிச் சயம் நாம் மாலைமாற்ற வேண்டும். இந்த வீண் சிந்தனையெல்லாம் விட்டு விட்டு, நடிக்க வேண்டிய விஷயங்களைப் பற்றிப் பேசலாம்'' என்றான்.

''ஏனோ, என் மனம் வேதனையுறுகிறது. இது சமூகக் கதை. தங்கள் ரூபத்தை மேக் அப்பினால் மாற்றமுடியாது. புல்குட்டுடன் காட்சியளிக்கப் போகிறீர்கள். உங்கள் அம்மா உங்களைக் கண்டவுடனேயே, என் னைக் கண்டதுண்டமாக வெட்டிப்போட ஏற்பாடு செய்து விடுவாள்''

''அந்தச்சமயம் ஒன்றும் செய்யமாட்டாள். பிறகு நான் பார்த்துக் கொள்ளுகிறேன். ஏன் என் அம்மா விஷயத்தில் இவ்வளவு பயப்படுகிறாய்? நமது விஷயம் இன்னும் அவள் அறியவில்லையே?'' என்றான்.

''விஷயம் அறிந்தார்களோ, அறியவில் லையோ? அவர் ஜாடை பேசுவதிலிருந்தும், என்னைக் காணும்பொழுதெல்லாம், இவ ளுக்குச் சீக்கிரம் கல்யாணம் செய்யவேண் டும் என்று சொல்லுவதிலிருந்தும் என் மனம் சங்கை கொள்ளுகிறது. நான் சமை யல்காரி பெண்ணாக இருப்பதினால் அவர் கள் வீட்டுப் பெண்களுடன் சரிசமனாக உட் கார்ந்து பேசக்கூடாது. முன் தடவை சுகன்யா வந்திருந்தபொழுது, என்னை அடிக்கடி கூப்பிட்டனுப்பி, இருவரும் தோட்டத்தில் உட்கார்ந்து பேசுவோம். ஒரு நாள் நான், போகும்பொழுது, என் பெயர் பேசப்பட்டதால் நின்று கேட்டேன், ''சுகன்யா உனக்கு ஒன்றும் தெரியவில்லை. உன் அந்தஸ்தென்ன? அந்தப் பன்னாடை சித்ரா அந்தஸ்தென்ன? எப்பொழுதும் அவளை உனக்குச் சமமான ஆசனத்தில் உட்காரவைத்து என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறது. இனிமேல் அவளைக் கூப்பிட் டனுப்பாதே. அவளாக வந்தால் நிற்க வைத்து இரண்டு வார்த்தை பேசி அனுப்பி விடு'' என்றார்.

''சுகன்யா என்ன செய்தாள்?''

''மாமி! சமையல்காரி என்றால் அவளும் நம்மைப் போலுள்ள ஜீவராசிதான். நம் ரத்தமும் அவள் ரத்தமும் ஒரே மாதிரிதான். பார்க்கப்போனால் அவள்தான் நம்மைவிட உயர்ந்தவள். நமது சுக ஸௌக்யங்களை அவள் கவனிக்கிறாள். தனக்கும் பசியாற்றி, நமக்கும் பசியாற்றும் பணி செய்கிறாள். அவள் சக்தியை நம்பொருட்டு உபயோகப் படுத்துகிறாள். ஆண்டவன்முன் கௌரவ முள்ளவர் யார்? இல்லாதவர் யார்? இப் படிக் கௌரவம் கொண்டாடி என்னைக் கட்டுப் படுத்துவதானால் இன்று சாயங் திரமே என்னை ஊருக்கு அனுப்பிவிடுங்கள். சித்ராவினால்தான், எனக்கு இவ்விடம் இருக் கப் பிரியமாக இருக்கிறது. அவள் மகா புத்திசாலி, பெண்கள் ரத்னம். அவள் ஸ்னேகம் கிடைப்பதே பெரிய கௌரவம்'' என்றாள்.

''சரி சரி! காலமோ உங்கள் படிப்போ. எக்கேடும் கெடுங்கள்'' என்று சொல்லி விட்டு அப்பால் சென்று விட்டாள். நான் உள்ளே சென்றேன். என்னைக் கட்டிப் பிடித்துக் தோட்டத்தின் பக்கம் அழைத்துச் சென்றாள்.''

''நீ எல்லாம் கேட்டுக் கொண்டிருந் தாயா?'' என்றாள்.

''ஆமாம். நீ என்னை அழைத்து ஏன் அவ ரின் விரோதத்தை தேடுகிறாய்? என்றேன்.''

''இவர்கள் விரோதம் என்னை என்ன செய்யும்? கௌரவம் கௌரவம் என்று பிராணனை வாங்குகிறாள். இவர்கள் மனப் பான்மை எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை'' என்றாள்.

''அப்படிச் சொல்லாதே. நானோ அவர் களின் நாட்டுப் பெண்ணாக இவ்விடம்தான் காலம் தள்ளவேண்டும்'' என்றேன்.

அயோடிசால் IODISAL

(ரத்த சுத்தி மருந்து)

இது தேகத்தில் உஷ்ணம் அதிகமாகி அதனல் ஏற்படக்கூடிய வெட்டை, கிரந்தி, மொழி, முடக்கு, கண்டசூலேகள், வாதம், வாய்வு, மேக ரோகங்களேயும், தோலேப்பற்றிய துர்நீர் சம்பந்தமான படை, சொரி, சிரங்கு, தேக அரிப்பு முதலியவைகளேயும் குணப்படுத்தி, தேகத்திற்கு ஆரோக்கியத்தையும் கொடுக்கும். ரத்தத்தைச் சுத்திசெய்து மலப்பிரவர்த்தியை ஒழுங்காக்கி இரத்த விருத்தியை உண்டாக்கும்

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

* * * *

சைபால்

- CIBOL -

முகப் பரு, சேத்துப் புண், சொறி சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்டபுண், முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து.

பேபி - கிரைப்

BABY - GRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, அஜீரணம், மாந்தம், பல் முளேக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு முதலிய சகல வியாதிகளேயும் போக்கி நல்ல ஆரோக்கியத்தைத் தரும் சிறந்த திராவகம்.

தயாரிப்பவர்கள்

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனீ, மதுரை

மதராஸ் சிடி, நெல்லூர், சிடட் & விசாகபட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள்:

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்.

குண்டூர், கிருஷ்ணு, கோதாவரி ஜில்லா & நைஸாம் சமஸ்தான ஏஜண்டுகள்:

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா.

மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்:

சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் சிடி.

"என்ன குறும்பு?" என்று அவள் கன்னத்தைத் தட்டினான் பிரபாகரன்.

"குறும்பென்ன உள்ளத்தைச் சொன்னேன். இப்படி இவர்கள் இருந்தால், அவர்கள் நாட்டுப் பெண்ணாக நான் வரப்போவதில்லை. கௌரவத்தைக் காப்பாற்றும் பெண்ணைப் பார்த்துக் கொள்ளட்டும்" என்றாள்.

"சுகன்யா! இவர்களுக்காகவா கல்யாணம் செய்து கொள்ளப் போகிறாய்? அவர் ...." என்றேன்.

"அவரா" என்று வேதனைமிகுந்த நீண்ட மூச்சு விட்டுவிட்டு, "சித்ரா உன்னிடம் சொல்லுவதற்கென்ன? ஒருதலைக் காதலினால் என்ன பிரயோஜனம்" என்றாள்.

"யார்? நீயா? அவரா?" என்றேன்.

"என் மனம் அவரை வெறுக்கமுடியுமா? அவர் என்னை விரும்புவதாகத் தெரியவில்லையே" என்றாள்.

"எப்படி அறிந்தாய்? உன்மேல் ஆசை கொள்ளாதவர் ஆண்பிள்ளையோ?" என்றேன்.

"ஆண்பிள்ளையோ, பெண்பிள்ளையோ? நான் எவ்வளவு பிரயத்தனப்பட்டும் காதலின் கண்ணோட்டம் சிறிதுகூடக் கிடைப்பதில்லை. எவ்வளவோ தடவை, அவர் அறையில் தனித்திருக்கும்பொழுது சென்று பேசியிருக்கிறேன். இந்தத் தோட்டத்தில் எவ்வளவோ நாள் நிலவொளியில் உலவியிருக்கிறோம். ஒருநாளாகிலும் காதலைப்பற்றிய பிரஸ்தாபமே கிடையாது. என் மூச்சுக் காற்று அவர்மீது படும்படி நின்றால்கூட அவர் மனம் அசைவதாகத் தெரியவில்லை. காதலுண்டானால், அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் என் கையைப்பற்றாதிருக்க முடியுமா? லஜ்ஜைகொண்ட பெண் மனமே அவரின் ஹஸ்த ஸ்பர்சத்திற்குத் துடித்ததே. அவர் மனதில் காதலுண்டானால் இந்த நிலைமை ஏற்படாதிருக்க முடியுமா?"

"மனதைத் தளர விடக்கூடாது. காலம் வரும் வரை உறுதியுடனிருக்க வேண்டும். மனக் குதிரையின் கடிவாளத்தைச் சற்றே தளர்த்தினாலும், அது இஷ்டப்படி அடங்காமல் ஓடிவிடும். அதனால் பெண்மைக்கே ஹானி நேரக்கூடிய விதம் சம்பவங்கள் ஏற்பட்டுவிடும் என்று நினைக்கலாம். காதலில்லை என்று எப்படிச் சொல்லமுடியும்?" என்றேன்.

"அப்படியல்ல. நீ அவர் குணத்தை அறியவில்லை, எப்படி முடியும்? கௌரவமானது எங்களுடன் பழகக்கூட அனுமதிக்காத பொழுது அவரிடம் உன்னை எப்படிப் பழக விடும். குணம் சரளமான சுபாவம். சரசமாகப் பேசுவார். உனக்கு எப்படி விளக்கிக் காட்டுவது? அவருடன் நெருங்கி என்னால் ஆன வரையிலும் முயன்று பார்த்தாய் விட்டது. நிச்சயம் அவருக்கு என்மீது காதலில்லை. அந்தப் பாக்யவதி யாரோ? அதற்காக என் வாழ்நாளை அர்த்தமற்ற வழியில் வீணாக்கப் போவதில்லை. விதியானது அவர் மனதை மாற்றினால் அன்புடன் ஏற்றுக் கொள்ளுவேன். இல்லை, எனக்காக யாரை விதி ஏற்படுத்தியதோ அவரை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் என்ற முடிவில் என் மனதைப் பழக்கி வருகிறேன்" என்றாள்.

"பேதைப் பெண்ணே! நானா அவரிடம் நெருங்கிப் பழகவில்லை. நீ, யாசித்த அதே ஸ்பர்சத்திற்கு, என்னைச் சொல்லம்புகளாலும் கண்ணம்புகளாலும் எய்தாரே. உலகத்தில் பசிப்பவர்களுக்கு அன்னமில்லை. புளியேப்பக்காரனுக்கு விருந்துபசாரம் என்று சொல்லிவிடலாமா?" என்று நினைத்தேன். ஆனால்......"

"ஆனால் என்ன?"

"என் மனம் அப்பொழுது அளவற்ற குதூகலமடைந்தது. நான் எப்படிப்பட்ட பாக்யசாலி. உலகில் உன்னத லக்ஷ்யத்திலிருக்கும், தியாகியின் அன்பு முழுவதிற்கும் நானே பாத்ரவதி. அப்படி யிருக்கும் பொழுது சமூகத்தைப்பற்றிய கவலை ஏன்?" என்று தோன்றினது. அதனால், "நீ சொல்லுவதுபோல் மனதை அலைய விடக்கூடாது. விதிப்படி முடியட்டும்" என்றேன்.

"சித்ரா! இனி நானே உன் வீட்டிற்கு வந்து விடுகிறேன். இவ்விடம் இருக்கும் வரை நாம் சந்தோஷமாக மனம்விட்டுப் பேச உன் வீடுதான் சரியான இடமென்றாள். அவள் போகும் வரை அப்படியே நடந்தோம்"

"ஓஹோ! அதுதான் இன்று என்னிஷ்டத்திற்கு எதிர்ப்பே இல்லை போலும். அதிருக்கட்டும் அம்மாவின் அந்த வார்த்தைக்கும் இன்று நாடகத்திற்கும் என்ன சம்பந்தம்?

"சென்ற லீவிற்குத் தாங்கள் வந்திருந்த பொழுது, நீங்கள் ரேடியோவின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தீர்கள். நான் அந்தச் சமயம் வந்தேன். உங்கள் அம்மாவும் பக்கத்திலிருந்தார்கள். என்னைக் கண்டதும், 'சித்ரா சுகமா?!' என்றீர்கள் விஷமச் சிரிப்புடன். உங்கள் தயவால் சுகமே என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றேன் நான்,

இது உங்கள் அம்மா மனதிற்கு எப்படித் தோன்றினதோ? தாங்கள் சென்றதும் என்னை அழைத்து,

"சித்ரா! நீ முன்போல் நடந்துகொள்ள, சிறு குழந்தையல்ல. பிரபாகரனுடன் பேசுவது பிசகு. அவன் போகும்வரை நீ இவ்விடம் வர வேண்டாம். காலத்தின் சுபாவம் சிறுபிள்ளைகள், அழகிய பெண்களைக் கண்டால் சபலமுறுவது இயற்கை. இது விஷயம் எங்கள் கௌரவத்தையும், உனது வாழ்நாளையும் பாதிக்கும். உனது நன்மைக்கே சொல்லுகிறேன். நீ இனிமேல் அவன் கண்ணில் படாமல் நடந்து கொள்ளு" என்றார். இதன் அர்த்தமென்ன? ஆனால் நடந்தது என்ன?"

"அர்த்தம் அநர்த்தம்தான். நடந்தது தினம் நமது சந்திப்பு. ஆனந்தமாக உனது வீணாகானம் கேட்டேன்".

"நான் சொல்லுவதைக் கேட்பீர்களா?"

"கேட்கக் கூடியதாக இருந்தால் ஆட்சேபணையில்லை."

"வீணாகச் சுகன்யாவின் மனதைப் புண்படுத்தவேண்டாம். அம்மாவின் கௌரவம் பங்கமுறவேண்டாம். நான் என்றும் உங்களுக்கு உரியவள். என்னை உங்கள் இஷ்டப்படி நடத்திக்கொள்ளலாம். நான் இந்தப் பரீக்ஷை முடிந்ததும் மெடிகல் காலேஜில் சேர்ந்துவிடுகிறேன். பின்னால் உங்களுடன் டாக்டராகப் பங்கெடுத்து வேலைசெய்கிறேன்; என்றும் கன்யாகுமரியாக இருக்கப் பிரியப்படுகிறேன். தாங்கள் சுகன்யாவை மணந்து கொள்ளுங்கள். தாய்மை ஸ்தானம் பெறாமல் என்னைக் காப்பாற்றுங்கள். அவ்வளவே. யாவும் நன்மையாக முடியும்" என்றாள்.

"இந்தப் பாடத்தைக் கேட்க நான் தயாராக இல்லை. காதலைப் பங்கிடுசெய்ய என்னால் முடியாது. காதலில்லாமல் ஒரு பெண்ணின் வாழ்நாளை வீணாக்கமுடியாது. என் மனதில் காதல் என்பது தோன்றும் சமயம், 'என்னைக் கல்யாணம் செய்துகொள்ளுவீர்களா?' என்ற உனது கேள்வியே எனது மனதில் பதிந்துவிட்டது. என்ன முயன்றும் உன்னை மறக்கவோ அவளை ஏற்கவோ முடியவில்லை. மனதுடன் வேண்டியமட்டும் போராடியே இம்முடிவிற்கு வந்தேன். அதனால் இது தெய்வீகக்காதல். எனது கொள்கை நேர்மையானது என்பது தெய்வ சங்கல்பம். அதனால் இனிமேல் இதைப்பற்றி என்னிடத்தில் பேசினாயானால் என்மனம் மிக்க கஷ்டமுறும் என்பதை அறிவுறுத்துகிறேன். உன் மனம் என்னை வெறுக்காது. பேசாமல் நான் சொல்லுவதுபோல் நடந்துகொள்ளு. சரி, இந்தப் பேச்சை விட்டுவிட்டு நாடகத்தைப் பற்றிய விஷயங்களைக் கவனிக்கலாம்" என்றான்.

"சரி உங்கள் சித்தம் என் பாக்யம்" என்றாள் நீண்ட மூச்சுடன்.

"சற்று நேரம் நாடக ஒத்திகை பார்த்துவிட்டு, ஒரு முத்தத்துடன் பிரிந்தார்கள்."

(தொடரும்)

மெரி பிஸ்கோத் கம்பெனி
உயர்தர பிஸ்கோத்துகள் தயாரிப்பவர்கள், ஈரோடு.

சஞ்சலம்

வே. ரங்கராஜன்

பலவித இடையூறுகளுக்கு மனம் சளேக்காமல், சேஷநாகம், பஞ்சதர்ணி முதலிய இடங்களைக் கடந்து, அமரநாத் குகையை அடைந்து, அமரத்வம் அளிக்கும் பனி லிங்கேச்வரரைத் தரிசித்துத் திரும்பும் போதுகூட, யாத்திரிகர்களின் மனதில் நிலவும் சாந்தியும் மரணத்தை வெல்லும் அமைதியும் சுவாமி காமேசர் மனதில் உண்டாகவில்லை.

சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி பரமானந்தர் எழுதிய கடிதத்தின் ஒவ்வொரு எழுத்துக்களும் பக்குவத்தை—எட்டிப் பிடித்து நழுவவிட்ட அவர் மனதிலே ஆழப் பதிந்துவிட்டன.

அவைகளை அவர் மறக்க முயன்ருர். ஆனல் பட்சி ஜாலங்களின் குரல்கூட அணுகாது மயான மோனம் நிலவிய ஹிமோத்திரியிலேகூட சுவாமி காமேசர் மனம் அமைதியின்றிச் சஞ்சலித்துக்கொண்டிருந்தது.

பஞ்சதர்ணியை அடுத்து ஓடும் தெள்ளிய பளிங்கோடையிலே, தம் ஆத்ம களங்கத்தை—கர்மக் கறையைக் கழுவிப் போக்க முடியாமல் மனம் வெதும்பினுர் சுவாமி காமேசர்.

முட்டையைவிட்டு வெளிவந்த பறவை மறுபடியும் இரும்புக் கூட்டுக்குள் அகப்பட்டுக்கொண்டதுபோல் அவர் மனம் ஏங்கிற்று.

* * *

ஆ! அக் கடிதம்!

''.........நேற்றிரவு என் விடுதிக்கு முன்னுல் ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. வெளியே வந்து பார்த்தேன், ஒரு கந்தல் துணியிலே, அப்போதுதான் ஜனனமான ஆண் குழந்தை, கிடத்தப்பட்டிருந்தது! களை சொட்டும் முகம்!

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்றபொழுது தோட்டக்காரன் மகள் ஜெண்பகத்தின் நினைவுவந்தது. அவள் குடிசைக்கு ஓடினேன். அவளைக் காணவில்லை!

தோட்டக்கார சபாபதி கையை, காலை முறித்துக்கொண்டு விழித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

மறுநாள் மாலை மடத்துக் கிணற்றில் மிதந்த ஜெண்பகத்தின் பிரேதத்தைப் போலீசார் எடுத்துக்கொண்டு போயினர்.

குழந்தை ஆஸ்பத்திரியில் வளர்ந்து வருகிறது.

பாவம்! ஜெண்பகம் நல்ல பெண். காவியத்தில் சகுந்தலைக்கு நடந்ததைப் போன்ற அசம்பாவிதம் நடந்துவிட்டது அவளுக்கு!'

என முடிந்தது சுவாமி பரமானந்தரின் கடிதம்.

''பாவம்! ஜெண்பகம் நல்ல பெண்! காவியத்தில் சகுந்தலைக்கு நடந்ததைப் போன்ற அசம்பாவிதம் நடந்துவிட்டது அவளுக்கு!'' என்ற வாக்கியங்கள் சுவாமி காமேசர் மன ஆழத்தில் பதிந்து மரண வேதனையை உண்டாக்கின.

தம் நன்மதிப்பிற்குரிய நண்பர் சுவாமி பரமானந்தர் வாய்மொழியாக வந்த அச்சொற்களை ஒருபுறம் ஒதுக்கிவிட்டு மனச் சாந்தியை நாட அவரால் முடியவில்லை.

* * *

சுவாமி பரமானந்தரும் சுவாமி காமேசரும் ஒத்த சிந்தனையுடையவர்கள். தெளிந்த ஞானமுள்ளவர்கள். அகண்ட அறிவுள்ளவர்கள். பரஸ்பர நன்மதிப்புடையவர்கள்.

உபநிஷத் வியாக்யான விவாதங்களிலும் பரமஹம்ஸ தத்துவ விளக்கங்களிலும் இருவரும் சேர்ந்து ஆழ்ந்துவிட்டால் மணிக்கணக்கில் மனம் ஒன்றி விவாதித்து மணி மணியான கருத்துக்களை வெளியிடுவார்கள்.

இராமகிருஷ்ண மடத்தின் பிரசுரங்களைப் பூர்வாங்கமாகப் பார்வையிடுவதும் பிரசுர அனுமதிக்கு அனுப்புவதும் இவர்கள் பொறுப்பேற்றுச் செய்துவந்த காரியங்கள்.

இது காரணமாகக் கல்கத்தா மடத்திலிருந்து அடிக்கடி சென்னைக்கு வந்துபோவார், சுவாமி காமேசர்.

அப்படி வந்தவர் எதிர்பாராதவிதமாய்ச் சென்னை மடத்திலே ஒருமாதம் தங்கிவிட்டார்.

இந்தச் சமயத்தில்தான் சுவாமி காமேசர் வழுக்கி விழ நேர்ந்தது! ஆம்; பிரம்மசரிய விரதத்திலிருந்துதான்!

இந்தச் சம்பவம் தமக்கும், தோட்டக்காரன் மகள் ஜெண்பகத்திற்கும், அவர்களிடையே சாக்ஷியாக நின்ற முழுமதிக்கும், இடமளித்து ஆதரித்த மல்லிப்பந்தருக்கும் மட்டுமே தெரியும் என்று அன்றுவரை நினைத்திருந்தார், சுவாமி காமேசர்!

ஆனால் சுவாமி பரமானந்தர் இகழாமல் இடித்து, சொல்லாமல் சொல்லிக் காட்டிய சுக பாவனையில், அதை அவரும் அறியும் படியாயிற்றே என மனம் நொந்தார்.

மடத்தின் ஈசான்ய மூலையிலே மொட்டு விடும் ரோஜாச் செடியிலிருந்து இரவு பன்னிரண்டு மணிக்குக் கம்பி நீட்டிவிட்ட காவல்காரன்வரை எல்லாத் தகவல்களையும் அறிந்து நிர்வகிக்கும் சுவாமி பரமானந்தர் இதையும் அறிந்துகொண்டதில் வியப்பொன்றுமில்லை என்பதைச் சுவாமி காமேசர் உணர்வார்.

ஆனால் அவ்வளவு நெருங்கிப் பழகியும் அதைக் குறித்துத் தம்மை நேரே ஒரு வார்த்தையும் கேட்காது, நாசுக்காக அமரநாத் யாத்திரைக் கோஷ்டியுடன் சேர்த்து அனுப்பிவிட்டதைக் குறித்தும், ஈச்வரர் விஷத்தை விழுங்கியதுபோல் தம்மீது படிந்த மாசைச் சகித்துப் பொறுத்துக்கொண்டதை நினைத்தும் சுவாமி காமேசருக்குச் சுவாமி பரமானந்தரிடம் முன்பிருந்ததைவிடப் பெரு மதிப்பு உண்டாயிற்று.

2

அன்று—தம் பாபச்சுமையை இமயத்தின் மீது இறக்கவும், மாசுற்ற உடலைத் தூய பனி நீரால் கழுவவும் எண்ணி அமரநாத் யாத்திரை புறப்பட்ட அன்று—அவர் மனம் பட்டபாடு என்றும்பட்டதில்லை.

ஒருகால், அன்று—தன்னையே கதி என்று நம்பிய அவரைக் கை விட்டுவிட்டு அவர் பெயருக்கும் களங்கத்தை உண்டாக்கி விட்டு மறைந்த அவர் பார்சி மனைவி மாளவிகாவை எண்ணி மனமுடைந்து சந்நியாச ஆச்சிரமத்தில் அடி எடுத்து வைத்த அன்று — அவர் மனம் இப்படி அலைப்புண்டதுண்டு, ஆனால் இவ்வளவு தூரமா?

இல்லை. அப்போது அவர்மேல் அதிகமான பிசகில்லை. அவர் நம்பினார். அவள் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டுச் சென்றுவிட்டாள். நாகரிக உலகிலே இது சகஜம்! இரு கண்களையும் அகல விழித்துப் பார்த்து அவளைத் தம் இதய பீடத்தில் ஏற்றியிருக்கலாம். ஆனால் அப்போது அந்தத் தாடகை பேசிய பேச்சு! அவள் வர்ஷித்த அன்பு! அவள் அளித்த இன்ப சுகம்! ஆ! நினைக்குந்தோறும் தித்திக்கும் அந்நாட்கள்! அவர் மனக்குரங்கு அவைகளில் ஈடுபட்டு உலகையே மறந்திருக்கவில்லையா?

அவள் எங்கிருந்தோ வந்து சுவாமி காமேசர் வாழ்க்கையில் குறுக்கிட்டாள்! ஆளை மயக்கும் அழகுடைய அவள் சுவாமி காமேசரின் கம்பீரத்தைக் கண்டு அணுகியிருக்க முடியாது. டெல்லி செக்ரடேரியட்டில் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்த காமேசர் நாகரிக வெள்ளத்தில் மிதந்த தனக்குப் புளியங்கொம்பாக இருப்பார் எனவே எண்ணியிருக்கவேண்டும்.

குறித்த இடத்தில் சந்திப்பதாக முன் கூட்டியே பேசிக்கொண்டு பிரிந்தவர், அப்படியே கூடி மேலே செல்லுவதுபோல் (சுவாமி) காமேசர் மாளவிகாவுடன் தம் இல் வாழ்க்கையை ஆரம்பித்தார். படாடோபமின்றி, தலைநகரின் பெருத்த "தூண்"களின் முன்னிலையிலே நடந்த அவர்கள் சீர்திருத்தத் திருமணத்தின்மேல், இருவரும் மனம் ஒப்பி அரசாங்க ரிஜிஸ்தர் முத்திரையையும் குத்திக்கொண்டனர்.

குடும்பத்தை வெகு திறமையாக நடத்தினாள் மாளவிகா! (மன்னிக்கவேண்டும். மணமானதும் மாளவிகா என்ற தன் பெயரைக் காமேசரின் விருப்பத்திற்கிணங்க மாதவி என மாற்றிக்கொண்டாள்) ஸ்ரீமதி காமேசர் ஆபீஸில் நம்பிக்கையுள்ள தலைமைக் குமாஸ்தாகாட்டிய இடத்தில் கையெழுத்திடுவதுபோல் சம்பளத்தையும் பூர்த்தி செய்யாமல் கையெழுத்து மட்டுமே போட்ட பாங்கி செக் புஸ்தகத்தையும் மாதவியிடம் கொடுத்துவிட்டு, காமேசர் நிர்விசாரமாய் இருந்தார். அப்போது அவருக்கு இவ்வுலகமே சொர்க்க மயமாய் இருந்தது. காவி கட்டிய சாதுக்களையும் கேதார் நாத் பத்ரிநாத் செல்லும் யாத்ரிகர்களையும் கண்டு ஏளனம் செய்தார். "அப்பாவிகள்! அறிவைச் செலவுசெய்து செல்வம்தேடி மனைவியைப் பராமரித்து இன்பங்கண்டு வாழத் தெரியாதவர்கள்! மலைமேல் காலை உடைத்துக் கொண்டு ஏறி, வறண்ட பனிக் கட்டியைக் கட்டிக்கொண்டு அழுவார்கள்! மங்கைய

ரின் பஞ்சுபோன்ற ஸ்பரிசத்தை அஞ்சுவார்கள்! அவளைப் பராமரிக்க, வேலை செய்ய விரும்பாத சோம்பேறிகள்!" இப்படியெல்லாம் இன்பப் போதையில் அவர் பிதற்றியதுண்டு.

ஆனால் எது நிலையான இன்பம் என்பதை மாதவியே அவருக்கு அறிவுறுத்தினாள்!

திடீரென ஒரு நாள் மாதவி மறைந்து விட்டாள். "என்னைத் தயவுசெய்து தேட வேண்டாம். இவ்வளவு நாள் தங்கள் ஆதரவில் வைத்திருந்ததற்காக நன்றி!" என்று மட்டும் எழுதிவைத்துவிட்டுச் சென்றுவிட்டாள். பாங்கி செக் புஸ்தகத்தில் கையெழுத்திட்ட காலி செக்குகள் நிறைய இருந்தன. பிறகுதான் பாங்கியில் பணம் பைசா கூட இல்லை என்பது தெரிந்தது!

* * *

வாழ்வின் வசந்தத்தில் மாங்குயிலைப் போலக் கீதம்பாடி மகிழ்வித்த மாதவி திடீரென மறைந்தது காமேசருக்குப் பெரும் ஏமாற்றத்தையும் உண்டாக்கிவிட்டது. சந்நியாசம் வாங்கிக்கொண்டு இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார்.

பெருங்கஷ்டப்பட்டுக் கடும் சாதனைகளின் மூலம் பத்து வருஷங்களுக்குப் பிறகு தம் பூர்வாசிரமத்தை முழுதும் மறந்து துவிஜீவியானார், காமேசர்.

3

ஆனால் ஆற்றிலே நீந்திக் கரைகண்டவன் குருட்டுத் துணிவுடன் கடலில் நீந்த இறங்கியதுபோல், ஏகாந்தத்திலே மன அமைதி பெற்ற காமேசர் அன்று மாலை சென்னையின் (அ) நாகரிகச் சூழலில் இறங்கினார்.

வேறெங்கும் செல்லவில்லை. சென்னைப் பொருட்காட்சிச் சாலையைப் பற்றிக் கேள்விப்பட்டவர், வேதாந்த சர்ச்சையில் ஈடுபட்ட மனதிற்கு ஓய்வாகவாவது இருக்கட்டும் என்ற நினைப்பில் அங்கே போனார்.

பாவம்! மன அமைதி குலைந்து சித்திரவதைக்கு உள்ளாகக்கூடிய காட்சியை அங்கே காண்போம் என்று அவர் கண்டாரா!

சீ! இது என்ன உலகம்! இது என்ன நாகரிகம்! தாம் அணைத்து இன்பம் நுகர்ந்த உடல், சுவைத்து மகிழ்ந்த இதழ், பார்த்துப் பார்த்துக் களித்த முகமுடைய அவள்! தம்முடன் ஒரேமஞ்சத்தில் சயனித்த அப்பெண்! ஈருடல் ஓர் உயிர் என்று நினைக்கும்படி வாழ்வளித்த அப்பெண்—இன்று தம் முன்னே வேறு ஒருவனுடன் போகிறாள்! இப்போதும் அதே தளுக்கு! அதே குலுக்கு! அதே அலங்காரம்! அதே மாய்மாலம்!

இவைகளின் உண்மையைக் கண்டானா தன்னை மறந்து அவளுடன் செல்லும் அவன்?

விதியின் விசித்திரப் போக்கிலே சுழித்தோடும் வாழ்விலே, சுமாமி காமேசர் பூர்வாசிரமத்திலே தம் மனைவியாக இருந்த மாதவியைச் சென்னைப் பொருட்காட்சிச் சாலையிலே பார்க்கநேர்ந்தது! ஈச்வர சோதனையோ என்னவோ!

முற்றும் துறந்த துறவி இறைவனின் சிருஷ்டி விநோதங்களை குழந்தைகளின் கண்ணாமூச்சி விளையாட்டிலே கண்டு களிப்பதுபோல்—காட்டின் நடைப் பாதையிலே நின்று நின்று, மேய்ந்து மேய்ந்து, அகன்ற விழிகளால் சுற்று முற்றும் பார்த்துப் பார்த்து மதர்த்துத் துள்ளி ஓடும் மானைப் போல்.— தோளைப் பற்றிய கையுடன் நெளிந்து நடந்து, நின்று பேசி, குலுங்க நகைத்து, மேலே சென்ற "அவளை"—பார்த்த கண் வாங்காமல் மலைத்து நின்றார், சுவாமி காமேசர். அவள் தம் கண்ணை விட்டு மறையுமட்டும் அப்படியே பார்த்துக்கொண்டு அங்கேயே நின்றார்.

அக்காட்சியைக்கண்ட அவர் மனம் குழம்பியது. சிந்தனை சிதறியது. பலவித யோக சாதனைகளால் கல்லைப்போன்று கடினமாயிருந்த அவர் உடல் நெக்கு நெக்காக உருகிப் பஞ்சுபோலாய்விட்டது! பூர்வாசிரமத்தில் "அவளு"டன் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் சம்பவங்களும் கண்முன்னே நர்த்தனம் செய்தன.

* * *

உளம் சோர்ந்து மடத்தை அடைந்த அவர் உணவைக்கூட மறந்து சயனிக்கச் சென்றார். தூக்கம் வரவில்லை. முள்ளின்மேல் படுத்துப் புரள்வதுபோல் படுக்கையில் புரண்டார். இரவு நீண்ட நேரமாகியும் உறங்க முடியவில்லை.

தண்ணென்று பொழிந்த நிலவிலே, சில்லென்று உடலை வருடிச்சென்ற இளங்காற்றிலே, மடத்தின் தோட்டத்திற்குள்ளே பிரவேசித்தார், காமேசர். தோட்டத்தின் ஒரு மூலையிலே பாம்பின் சிறலைப் போல் சத்தம் கேட்டது. சுவாமி காமே

சர் கூர்ந்து கேட்டார். இல்லை. பாம்பல்ல. சின்னஞ் சிறு வயதிலே அம்மான் என்ற முறையிலே தொட்டுத் தாலிகட்டி விட்டு எங்கோ ஓடிப்போன தன் மாமனை நினைத்து, தோட்டகாரன் மகள் ஜெண்பகம் விசித்து விசித்து அழுதுகொண்டிருந்தாள்.

சுவாமி காமேசர் அவள் குறையை நன்கு உணர முடிந்தது. தாமிருந்த அந்த மனோ நிலையில் ஜெண்பகத்தின் மனம் என்ன பாடு படும் என்பதை அவர் அறிய முடிந்தது. தம் குறையும் அவள் குறையும் ஒன்றுதான் என எண்ணினார். தெரிந்திருந்தும் அவள் வாய் மொழியாகவே அவள் குறையைக் கேட்க விரும்பியது அவர் மனம். அவள் குறையைக் கேட்டு ஆறுதல் கூறும் வாயிலாகத் தம் மனதில் இருந்ததையும் கொட்டி வேதனையை ஆற்றிக்கொள்ள விரும்பினார்.

அவள் மனதில் தைத்த முள்ளை எடுக்கச் சென்ற அவர், தீராத வேதனையை கொடுக்கும் பெரும் புண்ணை உண்டாக்கிவிட்டார். அதோடல்ல, தம் கண்ணிலும் அம்முள்ளால் குத்திக்கொண்டார்!

அதன் விளைவாகத்தான் மன நிம்மதியின்றி, பனிப் பாறைகளின்மேல் நிர்மானுஷ்யமான அப்பிரதேசத்திலே வேதாளத்தைப்போல் அலைந்து கொண்டிருந்தார், சுவாமி காமேசர்.

4

அமரநாத் குகையில் பனிலிங்கத்தைத் தரிசித்துவிட்டுக் கிளம்பிய சுவாமி காமேசர் தம் விடுதியை அடையும்போது இருட்டி விட்டது. சிறு தூறல்களால் நனைந்திருந்த கம்பளிச் சட்டையைக் களைந்து விட்டு, இலேசாகப் புகைந்துகொண்டிருந்த கணப்பைக் கிளறிவிட்டு விரல்களைச் சூடேற்றிக்கொண்டார். பிறகு தம் பெட்டியைத் திறந்து காகிதமும் பேனாவும் எடுத்துக் கொண்டுபோய், கணப்பின் அருகில் உட்கார்ந்துகொண்டு சுவாமி பரமானந்தருக்கு ஒரு கடிதம் எழுதினார். நமக்கு வேண்டிய அதன் ஒரு பகுதி வருமாறு:

''.........................சகுந்தலைக்குப் பிறந்த பரதன் சௌக்யமாக இருக்கட்டும். பூர்வாசிரமத்தில் இக் கட்டையின் உயிரை இன்ஷியூர் செய்திருந்த இருபதாயிரம் ரூபாயை அவன் பேருக்கு மாற்றிவிடுகிறேன். ஒரு தனி ஆயாள் அமர்த்தி வளர்க்க ஏற்பாடு செய்யுங்கள். அதன் செலவை இக்கட்டை ஏற்றுக்கொள்ளும். அகலிகைகள் மலிந்த இந்த நாகரிக உலகிலே பீஷ்மர்கள் வசிப்பது கடினம்.''

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல்குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனால் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

பஞ்சாயத்தார்

கி. ஸந்தானம்

கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் நீல நிறம் படர்ந்திருந்தது. மலைத்தொடர்கள் பந்திபந்தியாய் எழுந்து கம்பீரமாய் நிமிர்ந்து நின்றன. அவற்றின் சிகரங்கள் வான முகட்டைப் பிளந்துகொண்டு மேலே சென்றிருந்தனபோல் தோன்றின. அநாயாசமாய் நிமிர்ந்து நிற்கும் இவைகளின் முன் மனிதன் எம்மாத்திரம்? என் தலை முன்னோக்கி வளைந்தது. கரங்கள் தாமாகவே குவிந்தன.

இந்த மனோகரமான நீல நிறத்தின் கருத்து என்ன? அலக்ஷ்யமாய் நிமிர்ந்து நிற்கும் முடிகாண முடியாத இம்மலைகள் நீலநிறம் தோற்றுவிக்கின்றன. அகன்று பரந்து ஆழ்ந்து கிடக்கும் கடலும் நீல வர்ணத்தையே காட்டுகிறது. முடிவற்ற விதானம் போல் விரிந்து எங்கும் வியாபித்து நிற்கும் ஆகாயமும் நீல நிறம்தான். இது என்ன விந்தை? பகவானுடைய நிறமும் இதுவே. என் உதடுகள் மெதுவாய் அசைந்தன.

"ஆலம் உலகில் பரந்ததுவோ
ஆழி கிளர்ந்ததோ அவர்தம்
நீல நிறத்தை எல்லோரும்
நினைக்க அதுவாய் நிரம்பியதோ......"

உலகிலுள்ள மலைகளுக்கெல்லாம் தான் சக்கரவர்த்தி என்கிற பெருமிதம் தோன்ற நிற்கிறது இமயமலை. அதோ தன் வலக்கையைக் கீழே ஊன்றி அதன்மேல் தலையைச் சாய்த்து சயனத் திருக்கோலத்தில் இருப்பதுபோல் காட்சி அளிக்கிறான் ஹிமவான்! கங்காதேவி தன் பொன்னான கையால் அவன் இடுப்பைச் சுற்றி வளைத்து நிற்கிறாள். அது தங்க ஒட்டியாணம்போல் பிரகாசித்து அவன் நிறத்தை இன்னும் நன்றாய் எடுத்துக் காட்டுகிறது. அவன் படுத்திருக்கும் இந்தப் பச்சைக் கம்பளத்தின் மேல் எத்தனைவித மலர்கள்! எத்தனை வர்ணச் சேர்க்கைகள்!

மனிதன் உயரப் போகப் போக, அவன் எண்ணங்களும் மேலே மேலே போகின்றன என்று சொல்லுகிறார்கள். அது என்னவோ! இந்த இயற்கைக் காட்சிகளிலே நான் இறைவனைக் கண்டேன். அவனிடத்தே என்மனம் ஒன்றியிருந்தது.

ஹிமாலயம்! எப்பேர்ப்பட்ட உயர்ந்த லக்ஷ்யங்களையும் சிந்தனைகளையும் இது நம்மிடத்தில் எழச்செய்கிறது! நம் பாரத நாடு வளம் கொழிக்கச்செய்யும் சிந்து, கங்கை, பிரமபுத்திரை முதலிய புனித நதிகளெல்லாம் இங்கேதான் உற்பத்தியாகின்றன. வேத கீதம் இங்கேதான் பிறந்தது. பாரமார்த்திக லக்ஷ்யங்கள், ஆத்மீகசிந்தனைகள், நாகரிகப் பண்பாடுகள், எல்லாம் இங்கிருந்துதான் எழுந்தன. வேதத்தை வகுத்துப் புராணங்களை எல்லாம் இயற்றிய வியாசரும் இங்கிருந்துதான் ஸ்ரீமத் பாகவதத்தைச் செய்து சாந்தி பெற்றார். சுகர் முதலிய பிரும்ம ரிஷிகள், மாந்தாதா முதலிய சக்கரவர்த்திகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள், மகான்கள், பண்டிதர்கள், முதலிய எத்தனை எத்தனை பேர்களுக்கு இது புகலிடம் அளித்து உற்சாகம் ஊட்டியிருக்கிறது!

ஆம், நான் பதரிகாச்ரமத்தில் நின்றுகொண்டிருந்தேன். என் காலடியில் சுருட்டிச்சுழித்து அலை மோதிக்கொண்டு ஓடியது ரிஷிகங்கை. சந்தியாகாலம் நெருங்கிவிட்டது. கதிரவன் மேற்றிசை அடைந்துவிட்டான். அவன்செங்கதிர்கள் நீலமலைகளிலும் இரத்தினக் குவியல்போன்ற மலர்களிலும் விழுந்து வர்ணவிசித்திரங்களை எழுப்பின. பதரிநாத் கோவிலில் மணி ஓசை கேட்டது. அது இந்த ரிஷிகங்கையின் கோஷத்தோடு ஒருசமயம் இயைந்தும் ஒருசமயம் முரண்டும் தொனித்தது! கங்கைக்கரை ஓரம் இருந்த குடீரங்கள் குடிசைகள் பர்ணசாலைகள் இவைகளின் வழியே மெல்ல மெல்லக் கோவிலைநோக்கி நடந்தேன்.

ஒரு குடிசையைச் சமீபித்தவுடன் அப்படியே திடுக்கிட்டு நின்றுவிட்டேன். சிற்சில சமயம் நம் கண்ணே நம்மை ஏமாற்றி விடுகிறதல்லவா? அதுபோல் காதால் கேட்டதுகூடப் பொய்யாய் இருக்குமோ என்று யோசித்தேன். நான் கேட்டதை என் மனம் நம்ப மறுத்தது. ஆனால் வார்த்தைகள் என் காதில் ஸ்பஷ்டமாய் விழுந்தன. அதில் சந்தேகம் இல்லை. சந்தியா காலத்தின் அமைதி எங்கும் குடிகொண்டிருந்தது. இந்த மௌனத்தைக் கிழித்துக்கொண்டு இந்தக் குரூர வார்த்தைகள் என் செவியில் மோதின.

"இந்தப் பஞ்சாயத்தாரைக் கொல்லணும்!" என்ன துணிகரமான சதியாலோசனை! அதுவும் இந்தப்புனிதமான பிரதேசத்தில். பதரிநாத் கோவில் பஞ்சாயத்தார் மேல் பழிதீர்க்க யோசனைபோலும் என்று எண்ணினேன். ஐயோ! பெரிய பெரிய மகரிஷிகளெல்லாம் தங்கள் பாத தூளிகளால் புனிதமாக்கிய இந்தத்திவ்ய தேசத்தில்கூட மனிதனின் சிறுமையும் கெட்ட எண்ணங்களும் புகவேண்டுமா? உலகத்தை உத்தாரணம் செய்ய எழுந்த உயர் எண்ணங்கள் போலவே இதை அழிக்கவும் இங்கிருந்து தான் சிந்தனைகள் வெளிப்படப் போகின்றனவோ?

சற்று நேரம் நிசப்தமாய் இருந்தது. பிறகு மற்ஞெரு குரல் பேசியது கேட்டது.

"மகராஜ்! அது நலமாய்த் தோன்றவில்லையே"

"ஆம். சாதனை இன்றி ஒன்றையும் உலகத்தில் சாதிக்க முடியாது. எதற்கும் அப்பியாசமும் முயற்சியும் வேண்டும். பெரிய காரியங்கள் பிரயத்தனம் இன்றிக் கைகூடிவிடுமா?......"

"நான் எவ்வளவோ முயற்சிகள்தான் செய்கிறேன். எவ்வளவோ வழிகள் கையாளுகிறேன். எனக்கு ஒன்றும் பிடிபடவில்லையே."

"பட்டினி போடுதல்தான் சிறந்த வழி. காட்டு மிருகங்களை எப்படி வசப்படுத்துகிறார்கள். நீ பார்த்திருக்கிறாயா......"

என் மனம் நிலைகொள்ளவில்லை. ஒரு மிருகத்தைப் பிடித்துக் கூண்டில் அடைத்து அதைப் பட்டினி போட்டுப் பழக்குவது போல இவர்கள் கோயில் பஞ்சாயத்தார்களை மயக்கி ஒரு இருட்டுக் குகையில் அடைத்துப் பட்டினி போட்டுக் கொலை செய்யப்போகிறார்களா? என்ன கொடுமை! என் கோபம் கட்டு மீறிப் பொங்கிற்று. இந்தச் சதிகாரர்களை, கையும் மெய்யுமாய்ப் பிடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டுக் கதவை ஓர் உதை உதைத்தேன். அது தாளிடப்படாமல் இருந்ததால் உடனே திறந்துகொண்டது. நான் உதைத்த வேகத்தில் அது எவ்வளவு தூரம் பின்னுக்குப் போக முடியுமோ அவ்வளவும் போய்த் திரும்பி உள்ளே நுழைந்துகொண்டிருந்த என் முகத்தில் இடித்தது. எனக்கு நல்ல வரவேற்புத்தான்! கையைத் தலையில் அழுத்திக்கொண்டே உட்பிரவேசித்தேன். நான் கண்ட காட்சி என்னைப் பிரமிக்கச் செய்துவிட்டது!

உள்ளே இருவர் இருந்தனர். ஒருவர் தலையையும் மார்பையும் சற்று உயர்த்திக் காலை நீட்டிச் சாய்ந்துகொண்டிருந்தார். அவரது இடக்கை ஒரு யோகதண்டத்தின் மேல் இருந்தது. நல்ல சிவந்த மேனி. ஆஜானுபாகு. ஜடாமுடி தரித்த ஒளி வீசிய முக மண்டலம். ஜாஜ்வயமான கண்கள். அரையில் ஒரு முரட்டுக் கௌபீனத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. அவர் பக்கத்தில் பணிவாய் அமர்ந்திருந்த மற்றவர் சந்நியாசக் கோலத்தில் விளங்கினார்.

நான் முரட்டுத்தனமாய் உள்ளே பிரவேசித்ததால் அவர்கள் அமைதியைஇழந்துவிடவில்லை. உண்மையில் அவர்கள் என்னை ஆச்சரியத்தோடோ கோபத்தோடோ நோக்கவில்லை. நான் அங்கே அவர்கள் முன்னிலையிலே நின்றேன்—ஒரு குற்றவாளி போல! பரிகாசம் செய்யவந்தவன் பணிந்து நின்ற கதையாய் என்னையும் அறியாமல் என் கரங்கள் குவிந்து நின்றன. குற்றவாளியைப் பிடிக்க வந்த நானே ஒரு பெரிய குற்றவாளிபோல் மன்னிப்புக் கோரி நின்றேன். மனிதன் சிறுமையும் பெருமையும் அவன் எண்ணும் எண்ணத்திலே அடங்கி இருக்கின்றன. துரியோதனனுக்கு உலகத்தில் எல்லோருமே கெட்டவர்களாய்த் தோன்றினர், ஆனால் யுதிஷ்டிரர் ஒரு கெட்டவனைக்கூடக் காண முடியவில்லை. என் எண்ணம் என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது.

என் வரவால் அவர்கள் சம்பாஷணை தடைபடவில்லை. அவர் மேலும் சொல்லிக் கொண்டே போனார்.

"நான் சொல்வது புரிகிறதா? இந்தப் பஞ்சாயத்தார்—அதாவது இந்த ஐம்புலன்களை அடக்கி ஆளவேண்டுமானால் அதற்குச் சிறந்த வழி, அவைகளைப் பட்டினி போடுவதுதான்—அதாவது அவைகள் விஷயங்களோடு உழவாமல் தடுத்தல். விரிவாய்ச் சொல்ல வேண்டுமானால்......"

அதற்குமேல் நான் அங்கே நிற்கவில்லை. சாஷ்டாங்கமாய் விழுந்துநமஸ்கரித்துவிட்டு, என் குற்றத்தை மன்னிக்கும்படி ஒரு மௌனப் பிரார்த்தனையும் செய்து விட்டு, வெளியில் வந்தேன். ரிஷிகங்கை என் நிலைமையைக் கண்டு, கை தட்டிக் கலகலவெனச் சிரித்தது!

600 008

ரெக்ஸோனா

சரும அழகை உண்டாக்குகிறது

...சரும சுகத்தை பாதுகாப்பதன் மூலம்

ஆம், ஏனென்றால் ரெக்ஸோனா சுறுசுறுப்பாய் உற்சாகமூட்டிச் சரும சுகத்தைப் பாதுகாக்கிறது—சரும சுகத்திற்குச் சரும சௌந்தரியமே உண்மையான அடிப்படை—சரும அழகைக் கொடுக்கும் பாத்தியதை தனக்கேயுண்டென்று ரெக்ஸோனா உண்மையாகச் சொல்லக்கூடும்.

இதை எப்படி ரெக்ஸோனா செய்கிறது? சரும வியாதியைப் போக்கும் கிருமி நாசினியாகிய *கேடில் என்னும் மருந்து அதிற் சேர்ந்திருப்பதால் அது அவ்வாறு செய்கிறது. சரும உபத்திரவங்களும், சரும மாசுமறுக்களும் அடிக்கடி அதிகமாய் உண்டாகும் இடங்களுக்கும்—சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திற்கும்—சுகமளித்துச் சுத்தம்செய்கிற கேடில் என்னும் மருந்தை ரெக்ஸோனாவின் விரைவில் உண்டாகும் நுரை கொண்டுபோய்ச் சேர்க்கும் சக்திவாய்ந்தது.

ரெக்ஸோனா, குடும்ப சோப்

அழகான, பசுமைவாய்ந்த, விரைவில் நுரையைத் தரும் இந்த சிறந்த ஒப்பற்ற சோப்பின் குணங்களைக் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் புகழ்ந்து கூறுவார்கள்... சரும அழகைத்தர அது அதிக சிறந்த சக்திவாய்ந்திருப்பதால் ஸ்திரீகள்... ஆரோக்யமான சருமத்தின் அவசியத்தை எல்லா ஜனங்களும் அறிந்திருப்பதால் மனிதர்கள்... குழந்தைகளுக்கு இதைக்காட்டிலும் சிறந்த பாதுகாப்புடைய

சோப் வேறு இல்லை மருந்திடப்பட்ட ரெக்ஸோனாவின் நுரை உடலெரிச்சலைச் சாந்தப்படுத்துகிறது. ரணங்களை ஆற்றிக் காப்பாற்றுகிறது—குழந்தையின் சருமத்தைக் குளிர்ச்சியாகவும், சுகமுடையதாகவும் செய்கிறது சரும சுகம் நிச்சயமாக ஏற்படக் குடும்பம் முழுவதும் ரெக்ஸோனாவை ஒழுங்காய் உபயோகிக்க வேண்டும்.

★ரெக்ஸோனாவிலுள்ள கேடில் கிருமி நாசினியாகிய ஒரு ஒப்பற்ற கலப்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்திவாய்ந்தது; குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தையளித்துக் காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு, விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான் ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சொறிப்புகள், கடிகள், மச்ச மறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனா ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

RP. 29-23-40 TM

REXONA PROPRIETARY LIMITED

பஞ்சப் பாட்டு

யோகி சுத்தானந்த பாரதியார்

கால நிலை

இந்தியா வேதம் பொழியும் நாடு, கீதம் பொழியும் நாடுதான்; ஆனால் இன்று நிலைமை என்ன? ஸினிமாத் திரைகளில் ஹிந்துஸ்தான் ராகங்கள் பொழிகின்றன; சங்கீதக் கச்சேரிகளில் கர்நாடக ராகம் பொழிகிறது. உண்மைதான். ஆனால் மனிதர்களைப் பார்த்தாலோ—கண் கண்ணீர் பொழிகிறது; மனத்தில் கவலை வழிகிறது—வாழ்வே ஏக்கமாயிருக்கிறது. உலகெங்கும் அமைதி நிலை குலைந்துவிட்டது—அரசியல் புரட்சி மட்டுமன்று, வயிற்றுப் புரட்சி ஊழிப் புயல்போலக் கிளம்பியிருக்கிறது. இந்தியாவில் போர் வரவில்லை; குண்டுச் சாவு அதிகமில்லை. ஆனால் பஞ்ச—நமன் வந்தது. வங்காளத்தில் 35 லக்ஷம்பேரை அள்ளிச்சென்றது. இப்போது அந்த நமன் இந்தியா முழுதையும் தீ குமுறப்பார்க்கிறது.

இந்த மாதம் முதல் பஞ்சப் பேய் தலை விரித்தாடத் தொடங்கியுள்ளது—பசிக் கொடுமையால் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தவர் கதையும் பயங்கரமாக வெளிவருகிறது.

இந்தியாவே வங்காளமாகும் நிலையிலிருக்கிறது. இந்திய ஏழைகள் எலும்பெடுத்த கவலைப் பிணங்களாகப் புதை குழிக்கு ஊர்வலம் செல்லும் காட்சி புலனாகிறது!

காபினெட் தூது நமக்கு இந்திய யூனியனைத் தருகிறது; நமது நாடு நமக்கே என்று விட்டுவிடுவதாகச் சொல்லுகிறது —ஆனால் எந்த நிலையில்? நாட்டின் பொருளெல்லாம் கொள்ளை போய், வறுமையும் மடமையும் தாண்டவமாடும் பஞ்ச நிலையில் நாட்டை விட்டுச் செல்லுவதாகச் சொல்லுகிறது. நாட்டின் பொறுப்பை ஏற்கும் தலைவருக்கு ஓயாத வேலையுள்ளது.

அடிமுதல் நாட்டை மீண்டும் புதுக்கியமைக்க வேண்டும். பஞ்சத்தின் பயங்கரத்தை முதலிற் போக்கவேண்டும்.

பஞ்சம் ஏன்?

நமது பாரத நாட்டில் பஞ்சம் வருவானேன்? இங்கே நீர் நிலவளங்களுக்குக் குறைவில்லை; இது செல்வம் பொழியும் நாடு; கனியும் கிழங்கும் தானியங்களும் பொங்கித் ததும்பும் நாடு; தானமும் தருமமும் தழைத்த நாடு; தினம் பன்னிரண்டு மணி நேரம் சளைக்காமல் வேலை செய்யக்கூடிய தொழிலாளர் நிரம்பிய நாடு; இந்தியத் தொழிலாளரின் இரத்தப் பாட்டினாலேதான் தென்னாப்பிரிக்கா, பர்மா, மலேயா பிஜி முதலிய நாடுகள் செழித்தன; இந்தத் திருநாட்டில் பஞ்சமும், பிணியும், கட்டும் கவலையும் துயரும் நாளுக்கு நாள் பெருகிவருவானேன்? சென்ற போருக்குப் பிறகு இருந்த நிலையைவிட இந்தப் போருக்குப் பிறகு நிலைமை படுமோசமாய்விட்டதே! எங்கும் ஏழைமக்களின் ஏக்கக்கண்ணீர்! எங்கும் பசி பசி என்ற பஞ்சைப்பாட்டு! எங்கும் பிச்சைப் பட்டாளம்! ஒரு பிள்ளையார் கோயிலில் சதுர்த் தேங்காய் போட்டால் அதன்மேல் நூறு பிச்சை மக்கள் பாய்ந்து போராடுகிறார்கள். கிராமங்களில் பாடுபடும் கூழுக்கில்லாத ஏழைகள் வயிற்றிலடித்து அலறுகின்றனர். பட்டணங்களில் வரிசை நடந்து ரேஷன் சீட்டைக் காட்டினாலும் சாமான் அகப்படாமல் ஏங்குகிறார்கள். கள்ளச்-சந்தையும், கரவும், சூதுவாதும் பணத்திமிரும் அகம்பாவ நாடகமும், ஏழைகளின் துன்பக் கண்ணீரில் இன்ப நீராடுகின்றன.

தருமராஜ்யம் வேண்டும்.

இந்த நிலை இந்தியாவுக்கு வருவானேன்? இந்தியர் சோம்பேறிகளா? உழைத்துண்ணத் திறமையற்றவர்களா? இல்லை;

மண்ணுண்டு பயிருண்டு; உழைப்புண்டு—பிழைப்புக்குத்தான் திண்டாட்டம்—ஏன்? வங்காளத்தில் இறந்த முப்பத்தைந்து லட்சம் ஏழைகளுக்கும் சோறு துணி தந்து நிலமும் மாடும் கலப்பையும், இராட்டினமும், குடிசைத் தொழில்களும் உதவி —உழைத்துப் பிழையுங்கள் என்று சொல்லும் தருமராஜ்யம் இல்லையே! பாட்டாளிமக்கள் உழைத்து விளைத்த பயனைப் போதுமட்டும் நாட்டார் பகிர்ந் துண்ணப் பொதுநெறியில்லையே!

நமது இந்தியர் நேத்தாலிலும், பிஜியிலும் இடுப்பொடியப் பாடுபடுகின்றனர். கங்காணிகளுடன் கண்ணறியாச் சீமைகளுக்குச் சென்று புண்படுகின்றனர். அவர்களை உள் நாட்டிலேயே வேலைதந்து உண்ணச் சோறு தந்து,ஆதரிக்கும் செல்வரில்லையே!. நாட்டில் பசும் பொருள்கள் ஏராளம்! அவற்றை நமது தொழிலாளிகளைக்கொண்டு இங்கேயே பல பண்டங்கள் செய்து விற்று நாட்டுச் செல்வம் கப்பலேருது காக்கும் உரிமையில்லையே! வாழைக் கொல்லையில் இரவும் பகலும் பாடுபடும் ஏழை மக்களுக்குப் பசியாற ஒரு சீப்புக் கிடைப்பதில்லை—வாழைக் காய் குலை குலையாகப் புகைவண்டியேறி எங்கோ செல்கிறது! இந்த மாபெரும் நாட்டில் நிலமில்லையா? நீரில்லையா? மழை பெய்யாவிட்டால் நடை கிணறு வெட்டி ஏற்றப் பயிர் விளைவிக்கலாமே; ஐரோப்பா அமெரிக்க நாடுகள் மழையை எதிர் பாராமலே நிலத்தை விளைவேற்ற நீர்வளஞ் செய்திருக்கின்றனவே; இங்கே கார்மழை வறண்டால் கண் மழைதான் மிச்சமாயிருக்கிறது. ஆ!பரிதாப இந்தியா!

மகாநாடுகள்

இந்தியாவில் ஏராளமான பஞ்சு விளைகிறது; நூற்கத் தெரிந்தவர்கள் கோடிக் கணக்காயிருக்கிருர்கள்; தறிகளும் இலட்சக் கணக்காயிருக்கின்றன; இந்த நாட்டில் ஆடைப்பஞ்சம் ஏன்? மானங் காக்கத் துணியில்லாமல் தூக்குப் போட்டுக் கொண்டு பெண்கள் இறக்கும் செய்திகள் விஷக் கணைகள்போல வருகின்றனவே! அந்தோ பரிதாப இந்தியா!

இப்போது உலகுக்கே பஞ்சம் வந்து விட்டது; கோடிக் கணக்கான ஜனங்கள் உணவின்றி இறக்கப் போகிருர்களாம்? போரால் மடிந்தவரைவிடப் பசியால் மடிபவர் தொகை அதிகமாகும். இதுகாறும் உலகில் அரசியல் மகாநாடுகளும், சீர்திருத்த மகாநாடுகளும், கலை மகாநாடுகளும் அமளிபட்டன.

இன்றுலகில் உணவு மகாநாடு லண்டனிலும் வாஷிங்டனிலும் டில்லியிலும் நடக்கின்றன. சோற்றுக் கவலையே நாட்டுக் கவலையானது. இந்தியாவிற்கு உணவுப் பிச்சை கேட்கத் தூதுசென்று வந்தனர். அமெரிக்கா ஆஸ்திரேலியா கோதுமை தரக்கூடும்; சையாம் பர்மா அரிசி தரக்கூடும். அதுவும் எனக்கு மிஞ்சித்தானே உனக்கு என்ற கதைதான். சாமான்கள் வந்தாலும் விலை ஏராளமாயிருக்கும்.

ஆராய்ச்சிகள்

வைசிராய் வேவல் பஞ்சத்தைத் தடுக்கத் தம்மால் ஆனதைச் செய்கிருர். மஹாத்மாவும் ஜின்னுவுங்கூட அவருடன் ஒத்துழைக்கிருர்கள். அடுத்த மாதம் சோதனை தொடங்கும். பஞ்சம் வந்து கழுத்தைப் பிடிக்கிறது. இப்போது நாம் வான சாஸ்திரம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. சூரியனில் புள்ளிகள்; 5000 மைல்களுக்குப் புள்ளிகள்; அதனுல் நீராவியை உறிஞ்ச முடியாமல் மழை பெய்யவில்லை; இது வான சாஸ்திரிகள் முடிவு. உலகில் பாபம் அதிகமாய்விட்டது; சந்தி ஜபதபங்கள் குறைந்துவிட்டன; பொய்யும் சூதும் வஞ்சகமும் கொலையும் அதிகமாய், கடவுளுக்குக் கோபம்வந்து மழையை அடக்கிவிட்டார்; இது புராணிகர் ஆராய்ச்சி. வருணஜபம் வைத்தால் மழை வரலாம்; இது புரோகிதர் யோசனை. கொடும்பாவி கட்டியிழுத்தால் கொள்ளை மழை பெய்யும்; இது பாமர மக்கள் மனப்பால். இந்த யோசனைகளெல்லாம் நிறைவேறு முன் இலட்சக் கணக்கான மக்கள் துன்பக் கண்ணீரைச் சிந்தி உடலை உதறி வானுலகிற்கே சென்றுவிடுவர்.

பஞ்ச நிவாரணம்

இப்போது நாம் காரியாம்சத்தைக் கவனிக்கவேண்டும்;

1. இந்திய நிர்வாகம் முழுதும் முதவில் இந்தியர் நம்பிக்கைக்குரிய தலைவர்களிடம் சர்க்கார் மனமொப்பித் தரவேண்டும். இந்திய ஜனசபை தவிர வேறு எந்த அன்னியரும் நிலையைச் சமாளிக்க முடியாது.

2 நாட்டிலுள்ள பணத்தை எல்லாம்—செல்வர் பெட்டகங்களில் உறங்கும் பணத்தையெல்லாம்-முறையாகத் தொழில் வளர்ச்சிக்குப் பங்குவைத்துவிடவேண்டும், ஏழைகள் தெருவில் சாகும்போது பணத்தைப்பைகட்டிப் பூட்டுவது கொடியபாவம். பணம் தொழிலாகவேண்டும். ஒவ்வொரு செல்வனும் இத்தனை ஆட்களுக்கு உழைப்பும் பிழைப்பும் தரவேண்டும் என்று ஜனநாயக சபை வற்புறுத்தலாம்.

3 மனிதனுக்கு மூச்சு எப்படி அவசியமோ அப்படி உழைப்பும் அவசியமாகும். ஒவ்வொருவரும் நாளைக்கு எட்டு மணி நேரம் உழைக்கவேண்டும். உண்ணுமுன் ஒவ்வொருவரும் இன்று நாம் என்ன வேலை செய்தோம்; நமக்கு உணவளித்த நிலத்தாய்க்கு என்ன நன்றி செலுத்தினோம்; என்று நினைத்து உணரவேண்டும். உழைக்காதவனுக்கு உண்ண உரிமை இல்லை. மூளை, கைகால், குரல், பேனு, கலப்பை, தறி, இராட்டை, தண்டசக்கரம், மண்வெட்டி, கோடரி—எதனுலாவது உழைத்து வந்த பலனைச் சாப்பிடுங்கள். அதுவே மனிதத்தன்மை.

4 ஒவ்வொரு வீட்டுக்கொல்லையிலும் முற்றத்திலும் நிலத்திலோ, தொட்டிகளிலோ மண்ணைப் பண்படுத்தி உரம் போட்டுக் காய்கறிகள் விளைவிக்கலாம். மலர்க்காட்சிகளுக்கே தோட்டம் போடும் காலம் இஃதன்று; மலர்ச் செடிகளை வைக்கும் இடத்தில் புடலும், வெண்டையும், அவரையும், பூஷணியும் பயிர் செய்யுங்கள். மண்வெட்டி பிடித்துக் குழி வெட்டி, வீட்டில் குவியும் குப்பை கூளம் சாணங்களை உரம்போட்டு விதை நட்டு இரண்டு குடம் ஊற்றினுல் தள தள வென்று பூமாதேவி பசுநகை புரிந்து பலனளிப்பாள். தோட்டப் பயிர் போடுவதை ஒவ்வொரு வீட்டினரும் தேகப்

விலைகள் குறைந்துவிட்டன!

நாடோறும்—
—நம் தேவைக்குள்ள
பட்டு & நூல் ஜவுளிகள்
கிடைக்குமிடம்
M.N. நாகேந்திரம் சன்ஸ்
பட்டு ஜவுளி வியாபாரம்
மலைவாசல் உள்மண்டபம்
தெப்பக்குளம் P. O. - திருச்சினுப்பள்ளி

பயிற்சியாகவும், கட்டாய வேலையாகவும் செய்யவேண்டும். சாணத்தை முட்டை தட்டிப் பாழாக்காமல் செடிகளுக்கு உரமாக்கவேண்டும்; சாணம் முதல்தரமான உரம். ஒவ்வொரு தெருக்கோடியிலும் குழியுரம் சேர்த்துத் தோட்டங்களுக்கு உதவி செய்க. தொழுவுரமும் சாம்பலும் சிறந்த செடியுணவுகள். நல்ல நெத்து விதைகளை ஊர்ப்பஞ்சாயத்தார் சேர்த்து வீட்டுக்கு வீடு தரவேண்டும். விவசாய இலாகா கருத்தூன்றினல் பயிருக்குப் பஞ்சமில்லை.

5 மழை வறட்சியால் வருந்தும் ஊர்களிலெல்லாம், தோட்டந்துரவுகளிலெல்லாம் கிணறுகள் வெட்ட உடனே ஏற்பாடுகள் செய்யவேண்டும். நமது நாட்டில் ஊற்றுக்குப் பஞ்சமில்லை; சரியான நிலம் பார்த்து, நீரோட்டம் பார்த்து வெட்டினுல் சலசலவென்று நீர் வளந்தரப் பூமாதேவி காத்துக்கொண்டிருக்கிருள். கிணறு வெட்டி ஏராளமான ஏழைகள் பிழைக்கலாம். நாளைக்கு எட்டுமணி நேரம் வேலைசெய்து அவர்கள் இரண்டு வேளை தாராளமாகச் சாப்பிட்டுக் குடும்பத்துடன் பிழைக்க வகை செய்வது ஊர்ப் பஞ்சாயத்தார் கடமையாகும்.

6 கஞ்சித் தொட்டிமட்டும் வைப்பதிற் பயனில்லை. ஒவ்வொருவரும் உழைத்தே உண்ண வழி செய்யவேண்டும். ஒரு கிராமத்திற்கு வேண்டிய தொழில்களையெல்லாம் தக்க குடும்பங்களுக்குப் பகுத்துக் கொடுத்து, வேலை வாங்கிக்கொண்டு, உணவை இரண்டு தடவை தரவேண்டும். கிராம விளைவுகளெல்லாம் பொதுக் களஞ்சியத்திற்கு வரவேண்டும். ஒவ்வொரு தெருவிலும் பொதுவான இடத்தில் உணவு தயாரித்து, காலை மாலை திட்டப்படி அந்தத் தெருக் குடும்பங்கள் பாத்திரங்களில் வாங்கிச் சென்றுண்ண வகை செய்யவேண்டும். இதனுல் நாடுகளில் பண்டம் சேதமாகாமல் காக்கலாம். குடும்பச் செலவுகளை ஒழிக்கலாம். சுகாதார முறைப்படி சமையல் செய்து எல்லோருக்கும் எளிதாக வழங்கிச் சிலர் பிழைக்கவும் இடமுண்டு. பொதுச் சமையலறையை அந்தந்தத் தெருவினர் முறை வைத்துக்கொண்டு நடத்தலாம். பெண்களுக்கும் இதில் நல்ல வேலை கிடைக்கும்.

7. பஞ்சந் தெளியுமட்டும் நஞ்சைப் பயிர்களை விட்டுப் புஞ்சைத் தானியங்களை எல்லாரும் உண்பது நலம். நஞ்சைக்கு ஏராளமான நீர் வேண்டும், உரம் வேண்டும், கடுமையான உழைப்பு வேண்டும். கேப்பை, சோளம், கம்பு, தினை போன்ற புஞ்சைப் பயிர்களை எந்த நிலத்திலும் எளிதாக விளைவேற்றலாம்; இத் தானியங்களை மாவாக்கித் தேங்காயும் சேர்த்து அடை தட்டி அல்லது ஆவியில் வேகவைத்துண்டால் உடலுக்கு உறுதி தரும். மைசூரிலும் மலையாளத்திலும் ஏழைகள் இப்படியே பிழைக்கிருர்கள். மரச்சீனிக் கிழங்கு பசிக்குச் சஞ்சீவி; ஏழைகளின் கற்பகம். மலையாளத்தில் அது ஏராளமாக விளைகிறது; அதைக் கொண்டு ஏழைகள் பசியாறுகிருர்கள். நாடெங்கும் மரச்சீனி எளிதாக விளைவிக்கலாம். அத்துடன் தேங்காயும் கேப்பையும் சேர்ந்தால் சிறந்த சத்துணவாகும். நன்ருக வேலைசெய்து பசித்தே உண்பது என்று வைத்துக்கொணடால் சிறிதளவு உணவே வயிற்றுக்குப் போதும். தாது வருஷப் பஞ்சத்தின்போது இலட்சக் கணக்கான ஏழைகள் கற்ருளம் பழத்தையும் மஞ்சனுத்திப் பழத்தையும் உண்டு பிழைத்தனர். சரியான பசியுடன் உண்டால் எந்த நல்ல உணவும் உடலைத் தாங்கும். அரிசி கோதுமைதான் வேண்டுமென்பதில்லை.

8 பசி நீக்கப்போதிய உணவை மட்டும் அளவாக உண்டாலே போதும். நாக்கிற் கடிமையாகி அல்வா, போண்டா, லட்டு, மைசூர்ப்பாகு, ரசகுல்லா போன்ற சத்தற்ற உணவுகளைச் செய்யவே கூடாது. இந்த உணவுகளால் உடம்புக்கு ஒரு பயனுமில்லை, மலச்சிக்கலே மிச்சம். உணவுப் பொருள்களைப் பதனழியாமல் சுமாராக வேகவைத்துண்டால் சிறிதளவே போதும். பல உணவுப் பொருள்களைப் பச்சையாகவே உண்ணலாம். ஒருவர் தினிச் சிக்கனத்தால் இன்னும் சிலருக்கு உணவு மிஞ்சும். இதை அவரவர் அறிக. பெரிய விருந்துகளும், சடங்குகளும், திருவிழாக்களும் உணவுப் பொருள்களை வீணுக்காமல் கட்டுப்படுத்தவேண்டும். ஆளுக்கு இவ்வளவு என்று அளந்து தந்து அந்த அளவுக்குள் ஜனங்கள் சிக்கனமாக வாழப் பயிற்றவேண்டும்.

சோவியத் ரஷ்யா இந்த வகையில் உதாரணமாக விளங்குகிறது.

"செய்வேலை; இந்தா உணவு" என்கிறது பொதுவுடைமை ரஷ்யா. அதைப் போல உழைத்தோர் உண்ண இங்கும் முறை வகுக்க வேண்டும். ஒரு செல்வரிடம் செலவமிருந்தால் அதைக்கொண்டு ஊருக்குப் பயனுள்ள தொழில் நடத்திப் பிழைக்கச் செய்வது பெரிய அறமாகும்.

9. நாட்டில் பயிர்க் கலைபரப்ப வேண்டும். வேளாளர் குலத்தொழிலை விட்டு வெள்ளைச் சட்டை மோகம் பிடித்தலையக் கூடாது. காபீஸ்டு வேலையைவிடக் கலப்பையுழுவது ஆயிரம் மடங்கு நல்லது. தொழிற் பெருமையை ஒவ்வொருவரும் உணரவேண்டும். தமிழ் வேளாளரின் விவசாயக் கலை மிக உயர்ந்தது. அதை நாம் மறந்து வருகிறோம். கிராமங்களைப் பாழ்போட்டு நகர மோகங் கொண்டலைகிறோம். நகர மேடைச் சிலம்பங்களால் பயனென்ன? கிராமம் கிராமமாகத் தொண்டர் சென்று காலத்திற்கேற்ற நல்ல பயிர்களும், தொழில்களும் செய்யும் வகையை விளக்கித் தாமே செய்துகாட்ட வேண்டும். பட்டினி கிடந்து உயிர் துடிப்பவனுக்குச் சோறுபோட்டு, இளைப்பாறியதும், "அப்பா பிடி மண்வெட்டி, செய் வேலை" என்னவேண்டும்.

திரைப் படங்களும், நாடக மேடைகளும் சும்மா காம விகாரக் கண்ணராவிகளையே காட்டிப் பணம் பறித்தது போதும் பராபரமே! இனி நாடகங்களும் திரைகளும் கல்வியும் தொழிலும் வளரும் காட்சிகளையே கதைகளிற் புகுத்திக்காட்ட வேண்டும். பொதுவுடைமை ரஷ்யாவும், அமெரிக்காவும் அப்படிச் செய்கின்றன. நாடக மேடைதான் பொது ஜனங்களின் கலாசாலை; அவை திருந்தவேண்டும்.

10. பேச்சு மகாநாடுகள் ஏராளமாக நடந்துவிட்டன. ஊர்ப்பணத்தை வசூல் பண்ணி, கொட்டகைபோட்டுக் கூடிக் கொடியேற்றி வீண்கட்சிச் சண்டைப் போட்டுக் கலைவதே நம் அரசியல் பிழைப்பானது. உதாரணமாகச் சமீபத்தில் ராஜாஜி வேண்டும்—வேண்டாம் கூத்து நமது தமிழர் மானத்தைச் சந்தி நாற வைத்துவிட்டது. நமது மனஸ்தாபங்களைத் தீர்க்க வடநாட்டு அசபாலி வர வேண்டுமா? காந்தி ஹரிஜனில் எழுத வேண்டுமா? நமது அருமைத் தலைவர்களை அதிலும் ராஜாஜி போன்ற சமயசஞ்சீவிகளை இப்படியா நடத்துவது! இந்த மாதிரிக் கூட்டங் கும்மாளங்களால் ஒரு மண்ணும் பயனில்லை. மனிதசக்தி வீணுகிறது. அத்தனைபேரும் கலப்பை மண்வெட்டி, இராட்டை பிடித்து வேலைசெய்தால் ஆயிரக்கணக்கான பேர்களுக்கு ஆடை உணவு கிடைக்குமே.

கட்சிச் சண்டைகள் வேரோடொழிக! வெறும் அரசியல் அரட்டை. மகாநாடுகளும் காகிதத் தீர்மானங்களும் இனிப் பயனில்லை. அவையெல்லாம் 1930-ஆம் ஆண்டுடன் சரி.

இப்போது அனுபவஞானம் இருந்தாலே பிழைக்கலாம். தாலுகா ஜில்லா மகாநாடுகள் கூடிப் பேச்சுக் கடைவிரிப்பதற்குப் பதிலாக ஊர்தோறும் விவசாயப் பண்ணைக் காட்சிகள், மாட்டுப் பண்ணைக் காட்சிகள், தொழிற் காட்சிகள், சுகாதாரப் பேச்சுகள் செயலுடன் நிகழ்ந்தால் நிலையான பலன் உண்டாகும். "கல்வி, தொழில், சோறு, துணி' இவையே தேச சேவையின் பல்லவியாயிருக்கவேண்டும்.

11. பிச்சைத் தொழில் ஒழியவேண்டும். கையேந்துவது மிக இழிவு. கையால் உழைத்துண்பதே மாண்பு. ஊரில் பிச்சைக்காரர் வந்தால் தொழிற்சாலையில் வேலைசெய்து சோறுபோட்டனுப்ப ஒரு ஏற்பாடு செய்யவேண்டும். வெள்ளைக்கார நாடுகளில் பிச்சைப் படைகள் தெருவில் வந்தால் உடனே போலீஸ்காரன் இழுத்துச் சென்று, ஏழையில்லத்தில் (Poor House) விடுவான். அங்கே வேலை தந்து சோறு போடுவர். நமது நாட்டைப் போலப் பிச்சைத் தொல்லை எங்குமில்லை. கோயிலுக்குப் போனுல் மதத்தின் பெயரால் பிச்சை. மலைக்குப் போனுல் பரதேசிப் பிச்சை, தெருவில் அன்னக்காவடி முதல் கல்லுளிமங்கம் வரையில் பிச்சை! பஸ் நிற்குமிடங்களில் பிச்சைத்தொல்லை. இந்த இழிநிலை ஒழிக! ஆண்டி பரதேசிமுதல் எல்லாப் பிச்சைப் படைகளுக்கும் வேலை தரவேண்டும்.

இப்படிப்பட்ட உபாயங்களால் பஞ்சப் பேயைக்கொன்று வெற்றிபெறலாம்.

முயல்க! முயல்க!!

கண் பார்வை

க. கணபதி

சிறு வயதிலே எனக்குக் கல்யாணமாகி விட்டது. ஒரு குழந்தையும் பிறந்தது. இறந்துபோய், அதோடு சாவின் வாசலை எட்டிப் பார்த்துவிட்டு வந்தேன். உடம்பு தேறிக்கொண்டு வந்தாலும் என் பார்வை மட்டும் மங்கிக்கொண்டே வந்தது.

என் கணவர் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்தார். தமக்குத் தெரிந்த சிகிச்சை முறைகளையெல்லாம் என்னிடம் பிரயோகிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி அவர் வருத்தப்படவில்லை. தாமே தினந்தோறும் என் கண்களுக்குச் சிகிச்சை செய்தார்.

என் அண்ணா வக்கீலுக்குப் படித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் என்னைப் பார்க்க வந்தவர், என் நிலைமையைக் கண்டு திடுக்கிட்டார்.

“இது என்ன! நீ குழூவின் கண்களைக் கெடுத்துவிடுகிறாயே—ஒரு நல்ல டாக்டரை அழைத்துவந்து காண்பி” என்றார் என் கணவரிடம்.

அவர் எரிச்சலுடன், “ஏன், ஒரு பெரிய டாக்டர்கூட நான் செய்கிறதைவிட அதிகமாக என்ன செய்துவிடுவான்? இது ரொம்ப சின்ன கோளாறு. சிகிச்சையும் எல்லோருக்கும் தெரிந்ததுதான்”.

அண்ணா ஆத்திரத்துடன், “உனக்கும் உன் மெடிகல் காலேஜ் புரொபசருக்குங் கூட வித்தியாசமே இல்லை என்று நினைக்கிறாயாக்கும்!”

“நீ கல்யாணம் செய்துகொண்ட பின் உன் மனைவியின் சொத்துக்களைப்பற்றிய விவகாரம் வந்தால் சட்ட சம்பந்தமாக என் யோசனையைக் கேட்கமாட்டாயே! வைத்திய விஷயத்தில் நீ ஏன் எனக்கு ஆலோசனை சொல்லவருகிறாய்?” என்றார் துடுக்காக.

அவர்களிருவரும் தர்க்கித்துக்கொண்டிருக்கும்போது இரண்டு — அரசர்கள் போரிட்டால் இடையில் அவதிப்படுவது புல்தான் என்றுஎனக்குள் சொல்லிக் கொண்டேன். சச்சரவு அவர்களுக்குள். அதன் பலனை அனுபவிக்க வேண்டியவள் நான்! என் குடும்பத்தார் என்னைக் கல்யாணம் செய்து கொடுத்த பின்புங்கூட இது போலத் தலையிடுவது சரியல்ல என்றே எனக்குப் பட்டது. என்னதான் இருந்தாலும் என்னுடைய சுக துக்கங்கள் எல்லாம் என் கணவருடைய விவகாரம்தானே? அவர்களுடையவையல்லவே?

என் கண்களைப்பற்றிய இந்தச்சின்ன தகராறுக்குப் பிறகு அண்ணாவுக்கும் என் கணவருக்குமிடையே உள்ள அந்நியோன்யம் குறைய ஆரம்பித்தது.

ஒருநாள் மத்தியானம் என் கணவர் வீட்டிலில்லை. அண்ணா ஒரு டாக்டரை அழைத்துக் கொண்டு வந்தார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. டாக்டர் என் கண்களை கவனமாகப் பரிசோதித்தார். அவர் முகத்தில் கவலைக்குறிகள் தென்பட்டன.

“இப்படியே விட்டுவிட்டால் நிலைமை மிகவும் அபாயகரமாகிவிடும்” என்று சொல்லிவிட்டு ஏதோ மருந்து எழுதிக் கொடுத்தார். அண்ணா உடனே ஆள் அனுப்பிவிட்டார் மருந்து வாங்கிவர. டாக்டர் போன பிறகு “இதுபோல் ரகசியமாக டாக்டர் வருவதால் கெடுதல்தான்......ஆகவே நீ இதில் தலையிட வேண்டாம்,” என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டேன். அண்ணாவிடம் எனக்கு எப்போதும் பயம். ஆகவே இன்று இவ்வளவு தைரியமாகப் பேசியதைப்பற்றி எனக்கே ஆச்சரியமாக இருந்தது. அவர் கூட ஆச்சரியப்பட்டிருப்பார். சற்றுநேரம் மௌனமாக இருந்தார். பிறகு, “குழூ—ரொம்ப சரி! இனிமேல் டாக்டரை அழைத்துவரவில்லை. ஆனால் இப்பொழுது மருந்து வந்ததும் அவைகளை நீ அவசியம் உபயோகிக்கவேண்டும்,” என்றார். மருந்து வந்தது. அண்ணா போனதும் அவைகளையெல்லாம்—மருநது பவுடர் எல்லாவற்றையும் கிணற்றிலே போட்டேன்.

அண்ணா தலையிட்டார் என்ற ஆத்திரத்தில் என் கணவர் முன்னிலும் பன்மடங்கு அதிகமாக எனக்குச்சிகிச்சை செய்ய ஆரம்பித்தார். எத்தனையோ மருந்துகள் பிரயோகித்தார். அவர் சொல்லுவதுபோலவே கண்களில் ‘பாண்டேஜ்’ கட்டிக்கொள்வேன். கறுப்புக் கண்ணாடி அணிந்து கொள்வேன். சொட்டு மருந்து. பவுடர்,

"லக்ஸ் டாய்லட் சோப்பை
உபயோகிப்பதுதான் என்
எளிதான அழகுபடுத்திக்
கொள்ளும் முறை" என்று
கூறுகிருர்
மாயா பானர்ஜி
லக்ஸ் டாய்லட் சோப்பின் நுரையை தாராளமாக சருமத்தின் மேல் தடவுகிறேன்...
சுத்தமான, குளிர்ந்த ஜலத்தில் கழுவுகிறேன்..
பின்பு, உலர்ந்த மிருதுவான துண்டினுல் முகத்தை துடைக்கிறேன்
LUX TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும் அழகையளிக்கும் சோப்
ஒரு சினிமா நட்சத்திரத்திற்கு அப்பழுக்கற்ற சருமம் சௌந்தரியத்தை கொடுப்பதுமல்லாமல் அவர் வாழ்க்கைக்கே ஒரு விலை மதிக்கமுடியாத ஆஸ்தியுமாகிறது. அதனுலேயே இந்தியாவிலுள்ள கியாதி பெற்ற சினிமா நட்சத்திரங்கள் எல்லோரும் தங்கள் அருமையான வனப்பை லக்ஸ் டாய்லட் சோப்பினுல் பாதுகாத்துக் கொள்ளுகிருர்கள். நீங்களே இச் சுலபமான அழகுபடுத்திக் கொள்ளும் முறையை உங்கள் வீட்டில் வைத்துச் செய்யலாம்—30 நாட்கள் முயர்ச்சித்துப் பாருங்கள்— இச் சோப்பின் சுறு சுறுப்பளித்து சுத்தம் செய்யும் சக்தியைக்கண்டு மகிழ்வீர்கள்.
LEVER BROTHERS (INDIA) LIMITED
LTS. 137-23-40 TM

எல்லாம் போட்டுக்கொள்வேன். அவர் கொடுத்த மீனெண்ணெயைக்கூட, எவ்வளவோ அருவருப்பாக இருந்தாலும், குடித்துத் தொலேத்தேன். தினந்தோறும் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பி வந்ததும் கவலேயுடன் கேட்பார் "எப்படி இருக்கு?" என்று. நானும் "ரொம்பதேவலே" என்றுதான் சொல்வேன். உண்மையில் என்னேயே ஏமாற்றிக்கொள்வதில் கைதேர்ந்தவளாய்விட்டேன். என் கண்களில் ஜலம் அதிகமாக வர ஆரம்பித்ததும்—அது நன்மைக்காகத்தான்—அப்போதுதான் கண்ணிலுள்ள துர்நீர் எல்லாம் வடிந்துபோகும்—என்று மனதைத் தேற்றிக்கொள்வேன். நீர் வடிவது குறைந்துபோனுல் என் கணவரின் சாமர்த்தியத்தைப்பற்றிப்பூரித்து மகிழ்ச்சியடைவேன்.

ஆனுல் கொஞ்சகாலம் கழித்து உபத்திரவம் பொறுக்க முடியவில்லே, பார்வையும் மங்கிவிட்டது. இரவும் பகலும் தலேவலி தாங்கமுடியவில்லே. என் கணவரும் திடுக்கிட்டுவிட்டார். யாராவது ஒரு பெரிய டாக்டரை அழைக்கவாவது சாக்குக்கிடைக்குமா—என்று அவர் தவிப்பது போலவே இருந்தது. ஆகவே, "அவசியமானுல் டாக்டரைக் கூப்பிடுகிறதுதானே" என்று ஜாடையாகச் சொல்லிவைத்தேன். அதில் அவருக்குச் சற்றே கவலே திர்ந்தது.

அன்றைக்கே ஓர் ஆங்கில டாக்டரை அழைத்து வந்தார். அவர்களிருவரும் என்ன பேசிக்கொண்டார்களோ—தெரியாது. ஆனுல் அவரை மிகவும் கடுமையாகக் கோபித்துக்கொண்டார் என்பது மட்டும் புரிந்துகொள்ளமுடிந்தது.

டாக்டர் போனபிறகு அவர் சற்றுநேரம் பேசவே இல்லே. அவர் கைகளே என் கையில் ஏந்திக்கொண்டு, "அவன் என்ன கொஞ்சமாவது மரியாதை தெரியாதவன்! நீங்கள் ஓர் இந்திய டாக்டரை அழைத்திருக்கக் கூடாதோ?.........உங்களேவிட இவனுக்கு ரொம்ப தெரிந்துவிட்டது என்ரு நினேக்கிறீர்கள்......?" என்றேன்.

அவர் சிறிதுநேரம் பதில் சொல்லவில்லே. பிறகு, "குமு, உன் கண்களே ஆபரேஷன் செய்ய......வேண்டுமாம்...' என்று தழுதழுத்த குரலில் சொன்னுர். அவ்வளவு நாளாக என்னிடம் சொல்லாமல் ஒளித்து வைத்திருந்ததற்குக்கோபித்துக் கொள்வது போலப் பாசாங்கு செய்தேன்.

"இது உங்களுக்கு எவ்வளவு காலமாகத் தெரியும்? அப்படி இருந்தும் என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வில்லேயே—நானும் என்ன குழந்தையா ஆபரேஷனுக்குப் பயப்படுவதற்கு?" என்றேன். அது அவரை உற்சாகப்படுத்தியது.

"ஆபரேஷன் என்றதும் பயமில்லாமல் தைரியமாக இருப்பது ரொம்ப குறைவு" என்ருர்.

"வாஸ்தவந்தான்! ஆண்பிள்ளேகளின் வீரமெல்லாம் அவர்களுடைய மனேவியின் முன்னுல்தானே!" என்றேன் சிரித்துக் கொண்டே.

"நீ சொல்வது உண்மையே. புருஷர்கள் வெறும் பெருமை பிடித்தவர்கள்."

"பெருமையடித்துக்கொள்வதில்கூட, நீங்கள் ஸ்திரீகளேத் தோற்கடிக்க முடியாதே!" என்று மறுபடியும் சிரித்தேன்.

அண்ணு வந்தார். அவரை ஒரு புறமாக அழைத்துச் சென்று "அண்ணு, நீ அழைத்து வந்த டாக்டரின் மருந்து எவ்வளவோஎன் கண்களேக் குணப்படுத்தியிருக்கும். ஆனுல் உள்ளுக்குச்சாப்பிடும் மருந்தைத்தவறுதலாகக்கண்களில் விட்டுக்கழுவிவிட்டேன்.அது முதல் என் கண்கள் மோசமாக ஆரம்பித்துவிட்டன. இப்போது ஆப்பரேஷன் செய்ய வேண்டுமாம்" என்றேன்.

"நீ உன் கணவனின் சிகிச்சையில் இருந்தாய். அதனுலேயே உன்னேப் பார்க்க வருவதைக்கூட நிறுத்திக்கொண்டேன்"

"ஆனுல் உண்மையில் உன் டாக்டர் கொடுத்த மருந்து தான் ரகசியமாக உபயோகித்து வந்தேன்" என்று புளுகினேன். ஐயோ! ஸ்திரீகள் என்னென்ன பொய் புளுகவேண்டியிருக்கிறது. தாய் என்ற முறையில் குழந்தைகளேத் திருப்திசெய்ய எத்தனேயோ பொய்! பிறகு மனேவியின் ஸ்தானத்தில் எங்கள் குழந்தைகளின் தகப்பனுரைத் திருப்திசெய்ய இன்னும் எத்தனே பொய்களோ! இந்த நிலேமையிலிருந்துமட்டும் ஒருபோதும் விடுதலேயே கிடையாது.

என் ஏமாற்றுவித்தையினுல் அண்ணுவுக்கும் அவருக்குமிடையே மீண்டும் சிநேகபாவம் ஏற்பட்டது. என் கண்களுக்குத் தெரியாமல் ரகசியமாகச் சிகிச்சை செய்துகொள்ளச்சொன்னதற்காக அண்ணு தம்மையே நொந்துகொண்டார். அண்ணுவின் ஆலோசனேயை ஆரம்பத்திலேயே ஏற்றுக்கொள்ளாததற்காக என் புருஷனும் வருந்திஞர். பிறகு இரண்டுபேருமாகச் சேர்ந்து முடிவுசெய்து ஓர் ஆங்கில டாக்டர் வந்து

என் இடது கண்ணை ஆப்பரேஷன் செய்தான். அதைச்சமாளிப்பதற்குக்கூட அந்தக் கண்ணில் சக்தியில்லை. கொஞ்சம் நஞ்சம் இருந்த ஒளியும் அத்துடன் மறைந்து விட்டது. நாளாவட்டத்தில் மற்றொரு கண்ணும் அந்தகாரத்தில் ஆழ்ந்தது.

ஒரு நாள் என் கணவர் வந்தார் என் படுக்கைக்கு. "குமூ! இனிமேலும் இதை நான் மறைத்து வைத்துக்கொண்டிருக்க முடியாது. நான்தான் உன் கண்களைப் பாழாக்கியவன்" என்றார். அவர் கண்களில் நீர் பெருகியது. தொண்டையும் அடைத்துக்கொண்டது. அவருடைய வலதுகையை என் கைகளில் எடுத்துக்கொண்டு, "ஏன், எது சரியோ அதைத்தானே செய்தீர்கள். அது முற்றிலும் உங்களுடையது. அதைத் தானே உங்கள் மனதில் பட்டபடி பிரயோகித்தீர்கள். வேறு யாரோ ஒரு டாக்டர் வந்து என்னைக் குருடாக்கியிருந்தால் எப்படியிருக்கும்? சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அப்போது எனக்கு என்ன ஆறுதல் ஏற்பட்டிருக்கும்? ஆனால் இப்போது நடந்ததெல்லாம் நன்மைக்குத்தான் என்று என்னால் எண்ண முடியும். என் கண்களை இழந்ததும்உங்கள் கையில்தான் என்பதில் கூட எனக்கு ஒருவித ஆறுதல் ஏற்படுகிறது. ஸ்ரீராமச்சந்திரன் தம் பூஜைக்கு ஒரு மலர் குறைவாக இருந்ததற்குப் பதிலாகத் தம்மிருகண்களையும் அர்ப்பணம் செய்தாராம். என் கண்களையும் என் இஷ்ட தெய்வத்திற்கு அர்ப்பணம் செய்து விட்டேன். இனிமேல் நீங்கள் எதாவது சந்தோஷம் உண்டாக்கும் வஸ்துவைக் கண்டால் எனக்கு அதை விவரித்துச்சொல்லுங்கள்,உங்கள் பார்வையினால் எனக்குக் கிடைத்த அன்புப் பிரசாதமாக அவ்வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு மகிழ்வேன்" என்றேன்.

இவ்வளவையும் நான் அப்பொழுதே சொல்லிவிடவில்லை. ஆனால் இதுபோன்ற வார்த்தைகளைப் பற்றியே சதாகாலமும் சிந்திப்பேன். எப்போதாவது சற்று உற்சாகமற்று இருக்கும்போது, அல்லது என் பக்தியில் உறுதி குறைந்து என் துரதிருஷ்டத்தைப்பற்றித் துக்கப்பட நேர்ந்தாலும் இந்த வார்த்தைகளை ஒவ்வொன்றாகச்சொல்லிக்கொள்வேன், கேட்ட கதையைத்திருப்பிச் சொல்லும் குழந்தையைப் போல. இதனாலேயே என் மனதில் சாந்தியும் அன்பும் தழைக்க ஆரம்பித்தன.

"குமூ, என் முட்டாள்தனத்தினால் விளைந்த விபரீதத்தை இனி ஒரு போதும் மாற்றமுடியாது. எனினும் ஒன்று செய்யலாம். எப்பொழுதும் உன் பக்கத்திலேயே இருந்துகொண்டு என்னால் முடிந்த வரையில் உனக்குக் கண்களில்லை என்றகுறையை நிவர்த்திக்க முற்படுவேன்," என்றார்.

"அப்படி ஒன்றும் வேண்டாம். உங்கள் வீட்டைக்குருடர்களுக்கான ஆஸ்பத்திரியாக மாற்றிவிட வேண்டாம். ஆனால் நீங்கள் செய்யவேண்டியது ஒரே ஒரு காரியம்—மறுபடியும்......விவாஹம் செய்து கொள்வது தான். இதன் அவசியத்தை அவரிடம் விவரித்துப்பேச ஆரம்பித்தபோது என் தொண்டை அடைத்துக் கொண்டது. கொஞ்சம் கனைத்துக்கொண்டு என் உணர்ச்சிகளை ஒருவாறு அடக்கிக் கொள்ளப் பிரயத்தனப்பட்டேன். ஆனால் உடனே அவர், "குமூ, நான் ஒரு பெரிய முட்டாள்; தற்பெருமைக்காரன்; இன்னும் என்னவேண்டு மானாலும் சொல்லலாம். ஆனால், கொலை பாதகனல்ல. இனி எப்பொழுதாவது நான் கல்யாணம் செய்து கொண்டால், நமது குல தெய்வம் கோபிநாதரின்மேல் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். பாவங்களுக் கெல்லாம் மகா பாவமாகிய தகப்பனைக் கொன்ற பாவத்தின் பலன் என் தலையில் விழட்டும்..." என்றார் வெகு ஆவேசமாக. ஐயோ! இவ்வளவு பயங்கரமான பிரதிக்ஞையை எடுத்துக்கொள்ளும்படி அவரை விட்டிருக்கக் கூடாது. ஆனால் என் கண்களில் நீர் பெருகியது. தொண்டை அடைத்துக்கொண்டது. அடக்கமுடியாமல் திணறிக்கொண்டு, முழுதும் அனுபவிக்க இயலாத ஆனந்தத்தினால், ஒரு வார்த்தைகூட என்னால் பேச முடியவில்லை. என் குருட்டுக் கண்களைத்தலையணையில் புதைத்துக்கொண்டு, தேம்பித் தேம்பிஅழுதேன். கண்ணீர் வெள்ளம் ஒருவாறு ஓய்ந்த பிறகு, அவர் தலையை எடுத்து என் மார்போடு அணைத்துக் கொண்டேன். "ஐயோ! அவ்வளவு பயங்கரமாக ஏன் சபதம் செய்தீர்கள். உங்கள் இச்சைகளைத்தீர்த்துக் கொள்ளுவதற்காகவா கல்யாணம் செய்து கொள்ளும்படி தூண்டினேன்? இல்லவே இல்லை. என்னைப்பற்றியே நினைத்துக்கொண்டு, என் கண்களிருக்கும்போது நான் உங்களுக்குச் செய்துவந்த சிசுருஷைகளை அவள் செய்யட்டும்— என்று நினைத்துத்தான் சொன்னேன்."

"சிசுருஷைகளா! சிசுருஷை!! அதை வேலைக்காரர்கள் செய்யட்டுமே! எனக்குச் சேவை செய்யும் அடிமை ஒருத்தியை வீட்டிற்குள் அழைத்துவந்து, அவள் என் காதல் தெய்வமாகிய உன்னுடன் சரிசமானமாக உன் தெய்வபீடத்தை பங்கிட்டுக் கொள்

ளும்படி பார்த்துக்கொண்டிருக்க அவ்வளவு பைத்தியக்காரனா நான்''

''என் தெய்வம்'' என்ற வார்த்தையை அவர் உச்சரிக்கும்போது என் முகத்தைத் தம் கைகளில் ஏந்திக்கொண்டு, என் புருவங்களுக்கு மத்தியில் முத்தமிட்டார். அந்த நேரத்தில் ஒருவித தெய்வீக சக்தி, ஞானக்கண் என்பதுபோன்ற மூன்றாவது கண், அவர் முத்தமிட்ட இடத்தில் திறக்கப் பட்டதாக உணர்ந்தேன். உண்மையில் அப்போது ஒருவித தெய்வீகமான மறுமலர்ச்சியே எனக்கு ஏற்பட்டது.

''நடந்தவரையில் சரிதான். லௌகிக சம்பந்தமான சாதாரண சில்லறைக்காரியங்களில் இனிமேல் அவருக்கு என்னால் சேவை செய்ய இயலாது. ஆனால் சற்று உன்னதமான நிலையில் இருந்துகொண்டு அவருக்கு ஆத்மீக நலன் ஏற்படும்படியாகச் செய்வேன். பொய், புளுகு, ஏமாற்றம், இனி இவை எதுவும் எனக்கு வேண்டாம். என் கடந்த காலவாழ்க்கையில் இருந்த அற்பத்தனங்களும், வஞ்சகமும் மீண்டும் தலைக் காட்டாதபடி ஒழிந்து தொலைந்து போகட்டும்......'' என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன்.

அன்று. நாள்முழுதும் என்னுள்ளே ஒரு பெரிய போராட்டம் நிகழ்வதை உணர்ந்தேன். இதுபோல் சத்தியம் செய்தபிறகு அவர் மீண்டும் கல்யாணம் செய்துகொள்வதே சாத்யமல்ல—என்பதை நினைத்தவுடன் ஒருவித சந்தோஷம் என் இதயத்தில் வந்து நிறைந்தது. நான் என்னதான் முயன்றாலும் அதை அசைக்கவோ, பெயர்க்கவோ முடியவில்லை. ஆனால் புதிதாக என் இதயத்தைப் பீடமாகக் கொண்ட தேவதை மட்டும்—காலம் வரும்போது தாம் செய்த பிரதிக்ஞையை மீறிவிட்டு மீண்டும் கல்யாணம் செய்துகொள்வது கூட உன் புருஷனுக்கு நன்மையாக இருக்கும், என்றது. ஆனால் சபதம் என்றால் சபதம்தான், அதை மீறவே முடியாது—என்று பெருமையடித்துக்கொண்டது என்னுள்ளிருக்கும் பெண்மையுணர்ச்சி. ''அதற்காக நீ ஆனந்தப்பட வேண்டியதில்லையே!'' என்றது அந்தத்தெய்வஅணங்கு.

''நீ சொல்வது வாஸ்தவமாக இருக்கலாம். ஆனால் அவர்தான் சபதம் செய்துவிட்டாரே'' என்றது பெண்ணுள்ளம் சளைக்காமல். இப்படியே பேச்சு நடந்தது வெகுநேரம். கடைசியில் அந்தத்தெய்வம் மௌனநிலை அடைந்தது. பயம் என்ற இருள் என்னைச்சூழ்ந்து கொண்டது.

என் காரியங்களை வேலைக்காரர்கள் செய்யும்படி என் கணவர் விடமாட்டார், எல்லாவற்றையும் தாமே செய்வார். ஒவ்வொரு சின்ன விஷயத்திற்குங்கூட நான் அவரையே ஆதரவாகக் கொண்டிருப்பது ஆரம்பத்தில் எனக்கு அளவில்லாத ஆனந்தத்தையே அளித்தது. அவரை என் பக்கத்திலேயே இருக்கச்செய்ய அது ஒரு நல்ல சாதனமாகவும் இருந்தது. மேலும் நான் என்பார்வையை இழந்ததுமுதல் அவரை என்னுடனேயே வைத்திருக்க வேண்டும் என்ற ஆவலுக்கும் அளவேயில்லை. அவர் என் பக்கத்திலிருப்பதைக் கண்கள் உணராததால் மற்றப்புலன்கள் அவரை அதிகமாக விரும்பின. அவர் என்னுடன் இல்லாத சமயங்களில் எங்கேயோ நடு ஆகாயத்தில் திரிசங்குவைப் போல் தத்தளிப்பது போன்ற ஒரு பரதவிப்புத்தான் எனக்கு ஏற்பட்டது.

முன்பெல்லாம் என் கணவர் ஆஸ்பத்திரியிலிருந்து வர நேரமானாலும் ஜன்னலைத் திறந்துகொண்டு அவர் வரும் வழியையே பார்த்துக்கொண்டு இருப்பேன். அவருலகத்தையும் என்னையும் அந்த ரோடுதான் பிணைத்தது. பார்வையிழந்ததன் பலனாக அந்தத் தொடர்பு அற்றுப்போகவே என்னுடல் முழுதும் அவரைத் தேட விரும்பும். நடுவில் கிடுகிடு பாதாளமான இடைவெளி. அவர் என்னை விட்டுப் போனதும் அந்த இடைவெளி என்னையே விழுங்கிவிடுவது போல வாயைப் பிளந்துகொண்டிருக்கும். அவருடைய உலகிலிருந்து அவராகவே என்னிடம் திரும்பிவரும் வரையில் நான் காத்துக் கொண்டிருப்பதைவிட என்ன செய்யமுடியும்? ஆனால் அவ்வளவு தீவிரமாக அவரை விரும்புவதும், எதற்கும் அவரையே நம்பியிருப்பதும் நல்லதாக இருக்கவே முடியாது. மனைவி ஒரு புருஷனுக்கு எந்த விதத்திலும் பாரமாகத்தான் இருக்கிறாள். போதாகுறைகு அவள்குருடாகவும் இருந்துவிட்டால அவர் வாழ்க்கை சங்கடமாக இருக்கும்!—என்னதான் நேர்ந்தாலும் நானேதனியாக என் அவஸ்தைகளை அனுபவிப்பேன். அவரையும் எப்போதும் என்னுடன் இருத்திவைத்து, என்னைச்சுற்றிச் சூழ்ந்துள்ள அந்தகாரத்தில் அவரையும் அமுக்கிவிட மாட்டேன்—என்று சபதம் செய்துகொண்டேன்.

கூடிய சீக்கிரத்தில் என் காரியங்களை நானாகவே செய்துகொள்ளப் பழக்கிக் கொண்டேன். பார்க்கப்போனால் எப்போதையும்விட அதிக சாமர்த்தியமாகக்கூட என் காரியங்களைச் செய்வதாகவே எனக்குப் பட்டது. பார்வை, நமக்கு உதவியளிப்

பதற்குப் பதிலாகச் சில சமயம் இடைஞ்சலாகவே இருக்கிறது. ஆகவே என் குறுகுறுப்பான கண்கள் போய்விட்டாலும் மற்ற அவயவங்கள் சகல காரியங்களையும் அதற்கேற்ப ஈடுசெய்து சமாளிக்கலாயின. வீட்டுக் காரியங்களை நானே செய்துகொள்ளப் போதுமான பழக்கம் ஏற்பட்டதும் அவரை எந்தக் காரியமும் எனக்காகச் செய்யவிடுவதில்லை. அவர்கூட தாம் பிராயச்சித்தம் செய்வதை நான் தடுப்பதாகப் புகார் செய்வார். அவர் என்னதான் சொன்னாலும் எனக்குச் சமாதானப்படாது. வீட்டுக் காரியங்களையெல்லாம் செய்து முடிந்ததும் ஓய்ந்துபோய் உட்காருவார். குருட்டு மனைவியை வைத்துக்கொண்டு அவளுடைய காரியங்களையும் தானே செய்துகொண்டிருந்தால் ஒரு மனிதனுக்கு வாழ்வு வாழ்வாகுமா?

— 2 —

அவருக்கு மெடிகல் காலேஜ் படிப்பும் முடிந்தது. கல்கத்தாவை விட்டு ஒரு சின்ன ஊரில் தொழில் நடத்துவதற்காக சென்றார். நான் குருடாக இருந்த போதிலும் அந்தக் கிராமம் என்னைக் குதூகலப் படுத்தியது. என் தாயின் அன்பணைப்பிற்கு மீண்டும் வந்தடைந்தது போன்ற ஓர் இன்ப உணர்வைப் பெற்றேன். நான் பிறந்து வளர்ந்த கிராமத்தைவிட்டு என் எட்டாவது வயதிலேயே கல்கத்தாவுக்குப் போய்விட்டேன். பத்து வருடங்களாக நகர வாழ்க்கையிலீடுபட்டவளுக்குக் கிராமத்தின் நினைவுகள் மங்க ஆரம்பித்தன. கண்பார்வை இருந்த வரையில் கல்கத்தாவின் காட்சிகள் என் குழந்தைப் பிராயத்து நினைவுகளை மறைத்தன. பார்வையை இழந்ததும் கல்கத்தா கண்ணைத்தான் கவர்ந்தது; கருத்தைக் கவரவில்லை என்பதை முதன் முதலாக உணரலானேன். தற்போது என் பழைய நினைவுகள் வந்து பிரகாசிக்க ஆரம்பித்தன, மாலை நேரத்து வான வெளியில் ஒவ்வொன்றாக வந்து தலை நீட்டும் நட்சத்திரங்களைப்போல.

கல்கத்தாவைவிட்டு, நாங்கள் ஹரிசிங்கப் பூருக்குப் போகும்போது நவம்பர் ஆரம்பம். ஊர் எனக்குப் புதிது; எனினும் கிராமத்திற்கே இயல்பான மணமும் ஓசைகளும் என்னைச் ஆழ்ந்து தழுவிக்கொள்ளலாயின.

MEHTA'S SPECIALITIES

Well-known for their efficacy and Medicinal values

1 **SUNADRI ELIXIR**
For all kinds of female irregularities in menses and a great uterine tonic.

2 **PHOSPHORUS OIL**
A great pain relieving oil ever prepared in annals of medicine.

3 **MASTANA PILLS**
Unique in the field, combining both Allopathic & Ayurvedic systems, curing general debility, Rheumatic pains, Hay fever & what not.

4 **DRAKHYASAVA WITH GOLD & MAKARDHWAJA**
A great Blood Purifier & digestive & Potential Tonic.

Stocked by all important Chemists & Druggists of South India

K. S. MEHTA & CO.

250, China Bazaar, MADRAS.

புதிதாக உழப்பட்ட நிலங்களின்மேல் மிதந்துவரும் காலை இளங்காற்று, அப்போதுதான் மலரும் கடுகுச் செடிகளின் மனோரஞ்சிதமான மணம், வெகுதூரத்தில் ஆடுமேய்க்கும் இளைஞர்கள் எழுப்பும் குழலோசையின் நாதப்பிரவாகம், இவை தவிர கிராமாந்தர சாலைகளில் கிரீச், கிரீச் என்று சப்தமிட்டுக்கொண்டுபோகும் கட்டை வண்டிகளின் ஓசைகூட—என் உலகத்தை இன்பமயமாக நிரப்பும். இளம்பிராய வாழ்க்கையின், நினைவுகள் மணங்கள், ஒலிகள் சம்பந்தப்பட்டவரையில் அது நிதர்சனமான, நித்யமான, வாழ்வு—என்ற நினைவையே இது வலியுறுத்தியது. ஆகவே, என் குழந்தைப் பிராய வாழ்க்கையைத் திரும்பவும் நடத்த ஆரம்பித்தேன். ஆனால் ஒரேஒரு குறை—என் அன்னை இல்லையே என்று.

எங்கள் வீடு. எதிரில் குளம். கரையில் உயர்ந்த மரங்கள், வீட்டின்முன் பாட்டி தரையில் உட்கார்ந்துகொண்டு, தலையை அவிழ்த்து உலரவைத்துக்கொண்டு, வெயிலில் குளிர் காய்ந்துகொண்டே வற்றல், வடாம் முதலியவைகளைக் காயவைத்துக் கொண்டிருப்பது—இந்தக் காட்சிகள் என் மனக்கண்முன் வரும். ஆனால், அவள், தன் தழுதழுத்த மெல்லிய குரலில் தனக்குமட்டில் மெதுவாக முணுமுணுக்கும் பாட்டுக்களை—மட்டும் என்னவோ நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. மாலையில் மாடுகள் திரும்பிவரும் நேரத்தில், அவைகளின் சப்தத்தைக் கேட்டவுடனேயே, என் தாயார் ஒரு கையில் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு கொட்டில்களைச் சுற்றி வருவதைக்கூட நான் காணமுடியும். ஆடுமாடுகளின் நனைந்த தினியின் வாசனையும் வைக்கோல் எரிவதால் எழும் புகையினால் மூச்சை அடக்கித் திணறவடிப்பதுபோன்ற உணர்வும் வரும். தூரத்திலுள்ள கோவிலில் பூஜை நடக்கும்போது அடிக்கும் மணியின் மங்கல ஓசை, ஆற்றங்கரைவழியாகவரும் தென்றல் காற்றில் மிதந்தபடி வந்துகொண்டிருக்கும்.

கன்னா பின்னா சப்தம், ஊர்வம்பு முதலியவைகள் நிறைந்த கல்கத்தா இதயத்தை இறுகவைத்துவிடுகிறது. அங்கே வாழ்க்கையின் சுமுகமான கடமைகள்கூட அதன் தூய்மையையும், இனிமையையும் இழந்துவிடுகின்றன. ஒருநாள்: அதை நான் இன்னும் மறக்கவில்லை. ஒரு சிநேகிதி வந்தாள். "குமு, உன்னை உன் புருஷன் நடத்துவதைப் போல என் புருஷன் என்னை நடத்தினால் அவர் முகத்தில்கூட நான் விழிக்கமாட்டேன். நீ கொஞ்சங்கூட ஆத்திரப்படவில்லையா?" என்றாள். என் கணவர் ரொம்ப நாள் வரையில் என் சிகிச்சைக்காக டாக்டரை அழைத்து வராததற்றாக நான் அவர் மேல் கோபப்படவேண்டுமென்றே அவள் தூண்டினாள். "என் பார்வையிழந்ததே போதுமானது. என் புருஷன்மேல் வெறுப்பையும் வளர்த்து என் நிலைமையை இன்னும் மோசமாக்கிக்கொள்வானேன்?" என்றேன். சின்னஞ்சிறுமியான என்னிடமிருந்து கிழவிகள் பேச்சைப்போன்ற இந்த வார்த்தைகள் அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே மிகவும் வெறுப்படைந்தவளாய் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டாள். அந்தச் சமயம் அவளிடம் நான் எப்படிப் பதில் சொல்லியிருந்தபோதிலும் அவளுடைய வார்த்தைகளிலிருந்த விஷம் மட்டும் தங்கிவிட்டது. ஒரு தடவை பட்ட பிறகு அந்த விஷத்தின் வேகம் மட்டும் என் ஆவியைவிட்டகலவில்லை.

கல்கத்தா இதுபோன்ற எல்லையில்லாத ஊர்வம்புப் பேச்சுக்களினால் மனித உள்ளத்தைக் கருங்கல்லாக்கிவிடுகிறது. ஆனால் மீண்டும் நான் கிராமத்தையடைந்ததும் இளம்பிராயத்தில் நான் உண்மையாகவும் உறுதியுடனும் கண்ட கனவுகள், நினைவுகள், எல்லாம் திரும்பவும் உயிர் பெற்றுப் பிரகாசமாக விளங்கின. கடவுள் வந்து என் இருதயத்தையும் என் உலகத்தையும் நிரப்பினார். அவரை மண்டியிட்டு வணங்கி, நீர் என் குறுகுறுப்பான விழிகளை எடுத்துக் கொண்டதும் நன்மைக்குத்தான். இப்போது நீர் என்னுடனேயே இருக்கிறீர் என்றேன்.

ஆனால் எது சரியோ அதற்கு அதிகமாகவே சொல்லிவிட்டேன். "நீர் என்னுடனேயே இருக்கிறீர் என்பது அதிகப் பிரசங்கித்தனம். நான் உம்மிடம் உண்மையாகவே இருக்கவேண்டும்" என்றுதான் நாம் சொல்லக்கூடும். நமக்காக வேறு ஒன்றும் மிஞ்சியில்லாவிட்டாலும்கூட உயிரைவைத்துக்கொண்டு ஜீவிக்கத்தான் வேண்டியிருக்கிறது.

— 3 —

சிலமாதங்கள் சந்தோஷமாகவே கழிந்தன. என் கணவருக்குத் தொழிலில் பேரும் புகழும் ஏற்பட்டது. அதோடு பணமும் வந்தது. ஆனால் பணத்திலுள்ள விஷமம் யாரை விடுகிறது. ஏதோ ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது, எனினும் பார்வை இழந்தவர்களுக்கு மற்றப் புலன்கள் கூர்மையாக இருப்பதால் செல்

வம் வந்த பிறகு என் கணவருக்கு ஏற்பட்ட மாறுதலை என்னுல் உணர முடிந்தது.

சிறு வயதில் அவருக்கு நியாய-அநியாயத்தில் அக்கரை அதிகம், தாம் டாக்டரான பிறகு ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டுமென்று எவ்வளவோ ஆர்வத்தோடு அடிக்கடி அவர் தொழில் சகபாடிகள் அநேகர் வியாதியஸ்தர்கள் ஏழையாயிருந்தால் காசில்லாமல் கையைக்கூடத் தொட்டுப் பார்க்க மறுப்பதைக் கண்டு மனம் புழுங்கி வெறுப்பார். ஆனுல் இப்போது அவரிடமும் ஒரு மாறுதலைக் கண்டேன். ஒரு நாள் ஒரு ஏழைப் பெண்மணி வியாதியாயிருக்கும் தன் ஒரே குழந்தைக்கு வைத்தியம் பார்க்கும்படி எவ்வளவோ கெஞ்சியும் கொஞ்சங்கூட இரக்கமின்றி மறுத்துவிட்டார். ஆனுல் நான் போய் அவரை மன்ருடிக் கேட்டுக் கொண்டதும் ஏதோ கடனுக்கு—என்ற விதத்தில் கவனித்தார்.

எங்களுக்கு அவ்வளவாகப் பணமில்லாத போது, பணம் கொடுக்கல் வாங்கல் விஷயங்களிலுள்ள சூதுவாதுகளையும் வெறுப்பார். தம்வரையில் மிகவும் கௌரவமாகவும், நாணயமாகவும் நடந்துகொள்வார். ஆனுல் பாங்கிலுள்ள தம் பணம் வளர ஆரம்பித்தபிறகு, எப்போது பார்த்தாலும் யாராவது ஒரு லேவாதேவித் தரகனுடன் ரகசியமாகப் பேசிக் கொண்டிருப்பார். அவைகளினுல் ஒரு நன்மையும் ஏற்படப் போவதில்லை.

அவர் எங்கேயோ நழுவிப்போய்க்கொண்டிருக்கிருரே—என் நேத்திரங்களை இழப்பதற்கு முன்பு நான் அறிந்த என் கணவர், என் புருவங்களுக்கு மத்தியில் முத்தமிட்டு என்னை தெய்வ பீடத்தில் ஆவாஹனம் செய்த என் கணவர்,—அவருக்கு என்ன நேர்ந்தது? எங்கே போய்விட்டார். திடீரென்று குரோத எண்ணங்களின் விளைவாக எழுந்த ஆவேசத்தினுல் புழுதியில் விழுந்து புரண்டவர்கள்கூட மீண்டும் தூயஎண்ணங்களினுல் தூண்டப்பட்டவர்களாய்ப் புத்துயிர் பெற்றெழுவார்கள். ஆனுல், தினந்தோறும் தம் ஆத்மீக வாழ்வின் தசையை உலர அடிக்கப்பட்டு ஏதோ ஒரு விஷக்கிருமியின் ஆக்கிரமிப்பால். தம் ஆத்மீகவாழ்வும் விழுங்கப்பட்டு, பரதவிக்கும் இவர்கள், எந்தச் சக்தியினுலும் திரும்பவும் உயிரூட்ட முடியாத சாவையே அடைகிருர்கள்.

நான் குருடானதால் எனக்கு ஏற்பட்ட பிரிவு—பார்க்கப் போனுல், மிகவும் அற்பம். ஆனுல் நான் குருடாகி விட்டேன் என்று முதன்முதலாகத் தெரிந்த சமயம் என்னுடன் இருந்தாரே 'அவர்', இனிமேல் என்னுடன் இல்லை — என்ற உண்மையின் உணர்வு—ஐயோ என்னை மரணவேதனைக் குள்ளாக்குகிறதே! வாஸ்தவத்தில் பிரிவு என்பது இதுதான்.

என் அன்பின் ஆதர்சமோ நம்பிக்கையோ அணுவளவும் சிதையாமல், என் இதயத்தின் கண்ணுள்ள தெய்வ பீடத்தையே என் புகலிடமாகக் கொண்டுவிட்டேன். காலத்தின் கொடூரமான கோலாகலத்தையே அறியாத அதன் குளிர் நிழலைவிட்டு அவர்மட்டும் விலகிவிட்டார். தங்கம், தங்கம், என்ற தாபத்தின் தவிப்பால் தண்ணீரின் தட்பத்தையே அறிந்திராத பாலை நிலத்திற்குள் வெகுவேகமாக மறைந்து வருகிருர். சில சமயங்களில் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை. நான் குருடாக இருப்பதால் எல்லாவற்றையும் மிகைப் படுத்துகிறேன் என்ற எண்ணம் தட்டும். ஒரு சமயம் என் கண்களிருந்தால் நான் பார்க்கும் உலகத்தை அப்படியே உண்மையென்று நம்பினுலும் நம்பியிருப்பேன் — அதுதான் சரி. என்னுடைய எண்ணங்களெல்லாம் வெறும் சித்தப் பிரமைகள், என் கணவரும் சொல்வார்.

ஒருநாள், ஒரு முஸ்லீம் வீட்டுக்கு வந்தார். வியாதியாயிருக்கும் தன் பேத்திக் குழந்தையை வீட்டில்வந்து பார்க்கும்படி அவரையழைத்தார். "பாபு, நான் ஏழை, அல்லா உங்களுக்கு அருள்புரிவார். தயவுசெய்து வாருங்கள்" என்று தீனக்குரலில்அவர் கெஞ்சுவது என் காதில் விழுகிறது. "அல்லா என்ன செய்வாரோ, அது நிலைமையை ஒரு விதத்திலும் மாற்றிவிடாது. நீ எனக்கு என்ன தருவாய் என்பதுதான் நான் தெரிய விரும்பும் விஷயம்" என்ருர் என் கணவர்.

இது என் காதுகளில் விழுந்ததும், கண்ணைக்கொடுத்த தெய்வம் என் காதையும் செவிடாக்கி இருக்கக்கூடாதா என்ற நினைவுதான் வந்தது. அந்த முஸ்லீம் கிழவனுர் ஏங்கிப் பெருமூச்சு விட்டுவிட்டுப் போய்விட்டார். என் வேலைக்காரியை விட்டு அவரை என் அறைக்கு அழைத்துவரச் செய்தேன். அவர் கையில் கொஞ்சம் பணத்தைக் கொடுத்து—தயவு செய்து உங்கள் பேத்திக்காக இதை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு நம்பிக்கையுள்ள டாக்டராக அழைத்துப் போய் அவளைக் கவனியுங்கள். அதோடு என் புருஷனுக்காகப் பிரார்த்தியுங்கள்—" என்றேன்.

அன்று முழுவதும் எனக்கு அன்ன ஆகாரம் ஒன்றும் செல்லவில்லை. அன்று மாலை என் கணவர் தூங்கி எழுந்து வந்தவர், என்

முகமெல்லாம் வெளுத்துப்போயிருக்கிறது என்றார். பழைய வழக்கம்போல ஒன்றுமில்லை என்று சொல்ல வாயெடுத்தேன், ஆனால் அதுபோன்ற ஏமாற்றும் காலம் தான் போய்விட்டதே. ஆகவே பச்சையாக விஷயத்தைச் சொன்னேன்.

"உங்களிடம் ஒரு விஷயத்தைப் பிரஸ்தாபிக்க அநேக நாட்களாகத் தயங்கிக் கொண்டிருந்தேன். நிச்சயமாக அது என்ன விஷயம் என்று குறிப்பிட்டுச் சொல்ல நினைத்து நினைத்துப் பார்த்தும் சிரமமாக இருக்கிறது. இப்பொழுதுங்கூட என் மனதிலுள்ளது என்னவென்று விவரித்துச் சொல்ல முடியவில்லை. ஆனால் என்ன நடந்திருக்கிறது என்பதை நீங்களும் அறிவீர்கள். எப்படியோ நாமிருவரும் விலகிக் கொண்டே போகிறோம்........."

அவர் சற்றுச் சிரமத்துடன் சிரிப்பை வருவித்துக்கொண்டு,

"மாறுதல் என்பது இயற்கையின் நியதி தானே?"

"அதை நானும் அறிவேன். எனினும் என்றும் நிரந்தரமான, அழிவில்லாத வஸ்துக்களும் சில இருக்கின்றனவே!"

"உண்மையிலேயே வருத்தப்பட வேண்டிய ஸ்திரீகளும் சிலர் இருக்கின்றனர். சில கணவன்மார்கள் போதுமான பணம் சம்பாதிப்பதில்லை. சிலர் தமது மனைவிமாரை நேசிப்பதில்லை. ஆனால் நீ காரணமே எதுவுமில்லாமல் உன்னை வேதனைக்குள்ளாக்கிக்கொள்கிறாய்......"

மாறுதலே இல்லாத உலகத்தைக் காண முடிந்தது என் பார்வையை இழந்ததால் தான் என்பதைப் பிறகு நான் உணர முடிந்தது. ஆமாம் உண்மைதான். நான் மற்ற ஸ்திரீகளைப் போலல்ல. என் புருஷரும் என்னை ஒருபொழுதும் அறிந்து கொள்ளமாட்டார்.

— 4 —

கொஞ்சகாலம் எங்கள் தினசரி வாழ்க்கை எப்படியோ ஒரு மாதிரியாகக் கழிந்தது. அதிலும் திடீரென்று ஒரு மாறுதல். ஒரு நாள் என் புருஷருடைய அத்தை வந்தாள். என்னைப் பார்த்ததும் பாராததுமாக அவள் முதல் வார்த்தை "என்னடீ குமூ—நீ தான் பாவம் குருடாய் விட்டாய். அதற்காக உன் கணவனையும் ஏன் அவதிப்படவைக்கிறாய். இன்னொரு கல்யாணம் செய்து கொள்ளச் சொல்லக்கூடாதோ?"......என்றாள்.

அவரும் இருந்தார். சற்றுநேரம் ஒன்றும் பேசவில்லை. அப்பொழுதே அவர் ஏதாவது கேலியாகச் சொல்லிச் சிரித்திருந்தாரானால் ஒன்றும் நேர்ந்திருக்காது. ஆனால் அவர் ஒருமாதிரி வாய் குழறினதுபோலத் தத்தளித்து, அசடு வழியும்படியாக "அப்படியா நினைக்கிறாய், அத்தை! நீ உண்மையில் அப்படியொன்றும் சொல்லக்கூடாது.........." என்றார்.

அத்தை என்னைப் பார்த்து, "நான் சொன்னது தப்பா குமூ..." என்றாள். நான் சிரித்தேன்; ஆனால் அதில் உணர்ச்சியில்லை.

"கல்யாணம் செய்வது நல்லதல்ல? எனினும் அதைத் தீர்மானிக்க என்னைவிட அனுபவமுள்ளவர்களைக் கேளுங்கள். முடிச்சவிழ்ப்பவன், யாரிடம் திருடப்போகிறானோ அவர்களுடைய சம்மதத்தைக் கேட்பதில்லையே!" என்றேன்.

"நீ சொல்வது சரிதான், அபிநாஸ், வாடா; நாம் தனியாகக் கலந்து முடிவு செய்யலாம். நீ என்ன சொல்லுகிறாய்...?"

சிலநாள் கழித்து, அத்தைக்குத் தெரிந்த இடத்தில் யாராவது நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண், எங்களிடம் வந்து உதவிக்காக இருக்கக் கிடைப்பாளா? "என்று என் முன்னிலையிலேயே அத்தையைக் கேட்டார். எனக்கு உதவிக்கு ஆள் தேவையில்லை என்பது அவருக்கும் தெரியும். நானும் ஒன்றும் சொல்லவில்லை.

"வேண்டிய பேர் இருக்கா......என் ஒன்று விட்டமைத்துனன் உறவில்கூடக் கல்யாணம் செய்யக்கூடிய வயதில் ஒரு பெண் இருக்கிறாள். நன்றாக இருப்பாள். பார்த்தால் உனக்கும் பிடிக்கும். உன்னை மாப்பிள்ளையாகக் கொள்ள அவர்களுக்கும் சந்தோஷமாகத்தான் இருக்கும்......" என்றாள்.

மறுபடியும் ஒரு மாதிரியான வறட்டுச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "நான்............கல்யாணத்தைப் பற்றி.........பிரஸ்தாபிக்கவே...இல்லையே......" என்றார்.

"நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, வயது வந்த பெண் ஒருத்தி, உன் வீட்டுக்கு வந்து கல்யாணம் எதுவும் இல்லாமல் உன் வீட்டிலேயே இருக்கச் சம்மதிப்பாளா?"

அதுவும் நியாயந்தான் என்று ஒப்புக் கொண்டார். பிறகு பேசவே இல்லை. அவர் போனபிறகு என் அறைக் கதவுகளைச் சாத்திவிட்டு, "கடவுளே! என் கணவனைக் காப்பாற்றும்" என்று பிரார்த்தித்தேன்.

ஒருநாள் "குமு—அன்று பேசிக்கொண்டிருந்தோமே ஒரு பெண்ணைப் பற்றி-இதோ வந்திருக்கிறாள்......உன்னைப் பார்க்க அவளுக்கும் விருப்பம்தான். ஹேமா—வாடியம்மா—இதோ உன் அக்கா"—என்றாள் அத்தை. அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவரும் அறைக்குள் நுழைந்தார். அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அங்கே தவறி வந்துவிட்டதைப் போல வெளியே போக யத்தனித்தார்.

"கண்ணே அபிகாஸ், ஏண்டா ஓடுகிறாய்; இவள்தான் ஹேமாங்கனி. உன்னைப்பார்க்க வந்திருக்கிறாள். ஹேமா! அவனுக்கு நமஸ்காரம் பண்ணு.

எதிர்பாராதபடி அவர் வந்து விட்டதைப் போல, எப்பொழுது வந்தாள்? எப்படி? ஏன்? என்றெல்லாம் கேள்விகளைச் சரமாரியாக அடுக்கிக்கொண்டே போனார். இந்த ஹம்பக்கெல்லாம் எனக்குத் தெரியும். ஹேமாங்கனியின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு என் அறைக்குச் சென்றேன். அவளுடைய முகம் புஜம் கூந்தல் முதலியவைகளைத் தடவும்போதே, அவள் சிரித்துக்கொண்டு, "என்ன என்னை வசியம் செய்யப்போகிறாயா?" என்றாள். எங்கள் இருவருக்குமிடையே சூழ்ந்துகொண்டிருந்த கறுத்த மேகப் படலங்கள் அவளுடைய இனிமையான சிரிப்பின் ஒலியைக் கேட்டதுமே விலகிவிட்டன. எனது வலது கையால் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டேன். "கண்ணே, நான் உன்னைப் "பார்க்க" முயற்சிக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே என் இடது கையால் அவளுடைய மிருதுவான முகத்தைத் தடவினேன். அவள் திரும்பவும் சிரித்துவிட்டு, "என்னைத் தடவிப் பார்க்கிறாயே! நான் என்ன, உன் தோட்டத்தில் காய்த்த வெண்டைக்காயா? என்னை முழுதும் தடவிப்பார்த்து மிருதுவாக இருக்கிறேனா—என்று பார்க்கிறாயா?"

உடனே எனக்கு ஞாபகம் வந்தது. எனக்குப் பார்வை இல்லாதது அவளுக்குத் தெரியாது—என்று.

"ஹேமா! எனக்குக் கண் பார்வையில்லை..............." என்றேன். அவள் மௌனமாக இருந்தாள். அவளுடைய அகன்ற பெரிய விழிகளால் என்னை ஊடுருவி நோக்குவதாக உணரலானேன். அந்தக்கண்களில் இரக்கம் தோன்றும் என்று அறிவேன். சற்று யோசிப்பதுபோல இருந்துவிட்டு,

"அப்படியா? இப்போதுதான் தெரிகிறது! அதனால்தான் உன் கணவர் அத்தையை இங்கேயே வந்திருக்க அழைத்திருக்கிறார்........."

"இல்லை. அவர் அழைக்கவில்லை. அவளாகவேதான் வந்தாள்......" என்றேன். மறுபடியும் சிரித்தாள். "என் அத்தை வழக்கமே அப்படித்தான். அழைப்பில்லா வீட்டிற்கு வந்திருப்பது எவ்வளவு நல்லது. ஆனால் அவள் வந்த வரையில் இன்னுங் கொஞ்சகாலத்திற்கு இதைவிட்டு அவளை யாராலும் அசைக்கக்கூட முடியாது. நான் நிச்சயமாகச் சொல்வேன்......" பிறகு சற்று நிதானித்து "ஆனால் என் அப்பா என்னை ஏன் இங்கே அனுப்பினார்? உனக்குத் தெரியுமா?" என்றாள். அதற்குள் அத்தை வந்துவிட்டாள். ஹேமா அவளிடம் "அத்தை எப்பொழுது வீட்டிற்குத் திரும்ப உத்தேசம்?" என்றாள். அத்தைக்கு இது பிடிக்கவில்லை. "இது என்ன கேள்வி? உன்னைப்போல் துறுதுறுத்தவர்களை நான் பார்த்ததே இல்லை. இப்போதுதான் வந்தோம், அதற்குள் கேட்கிறாயே எப்போது திரும்புகிறதென்று!........." என்றாள்.

ஹேமா "உன்னைப்பற்றிய வரையில் சரிதான். உனக்கு இவர்கள் நெருங்கிய உறவு. ஆனால், என்பாடு என்ன? நான் இங்கே தங்கமுடியாது......" என்று சொல்லிவிட்டு என் கையைப்பிடித்து "அக்கா! நீ என்ன நினைக்கிறாய்?" என்றாள். அவளை என்மார்போடு சேர்த்துத் தழுவிக்கொண்டேன். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. அத்தைக்குச் சங்கடமாகிவிட்டது. விஷயம் எல்லையைமீறி வெகுதூரம் சென்றுவிட்டதாக உணர்ந்தாள். ஆகவே தானும் ஹேமாவும் ஆற்றிற்கு ஸ்நானம் செய்யப் போக வேண்டும் என்றாள். "அப்படியானால் நாமிருவரும் போகலாம் வா" என்றாள் ஹேமா என்னைக் கட்டிக்கொண்டு. இதை மறுத்தால் அதற்குமேலும் எதிர்ப்புத்தான் என்பதை அத்தை அறிந்துகொண்டு ஒன்றும் சொல்லாமலே ஆற்றுக்குப்போனதும் ஹேமா, "அக்கா! உனக்குமுன் குழந்தை பிறக்கவில்லை?" என்றாள்.

இந்தக் கேள்வி என்னைத் திடுக்கிடச் செய்தது. "நான் எப்படிச் சொல்ல முடியும்? கடவுள் அனுக்கிரகம் செய்யவில்லை. அவ்வளவுதான்" என்றேன்.

"அல்ல! அதுவல்ல காரணம். நீ ஏதாவது பாவம் செய்திருப்பாய். என் அத்தையைப் பார்; அவளுக்குக் குழந்தையில்லை. அது அவளுடைய கெட்ட எண்ணத்தினால்தான். ஆனால், உன் இதயத்தில் என்ன கெட்ட எண்ணம் இருக்கமுடியும்?"

2000 வருஷங்களுக்குமுன்

முன்னோர்கள் சந்தனத்தை குறைவற்ற தன்மைக்கு ஒப்பிட்டார்கள். இன்று நாம், ஒரு நல்ல பொருளை அந்த வர்க்கத்தின் "ரோல்ஸ் ராய்ஸ்" என்று சொல்லுகிறோம். அதேபோல முன்னோர்கள் ஒவ்வொரு உயர்ந்த பொருளையும் சந்தனத்திற்கு சமமாகச் சொல்லுவார்கள். ஸ்நானத்திற்கு அனுகுணமான வாசனைத் திரவியங்களின் சேர்க்கைக்கு சந்தனத்தைலம் இன்றியமையாததாக இருப்பதின் காரணம் அதன் சுகந்த மணமும் குளிர்ச்சியளிக்கும் குணமுமேயாம். அசோகனாண்ட காலத்தின் உண்மை என்றும் உண்மையே.

மைசூர்
சந்தண சோப்

சந்தணம் குறிப்பது குற்றமற்ற குணமே

★ ★ மைஸூர் கவர்மெண்டு தயாரிப்பு ★ ★

அந்த வார்த்தைகள் என்னைத் தைத்தன. வினைப்பயனைப்பற்றியும் அதற்கான விடி மோக்ஷத்தைப்பற்றியும் எனக்கு ஒன்றுமே தெரியாது. நீண்ட பெருமூச்சுவிட்டு "கடவுளே காரணத்தை நீயே அறிவாய்" என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன்.

"அட கடவுளே! நீ எதற்காகப் பெருமூச்சுவிட்டு ஏங்கவேண்டும்? என் வார்த்தையை யாரும் பிரமாதமாக எடுத்துக் கொள்ளமாட்டார்களே!" என்றாள். அதோடு அவள் சிரிப்பின் ஒலி ஆற்றிற்கு அப்பாலும் காற்றில் மிதந்தது.

— 5 —

அதற்குப் பிறகு என் கணவரின் தினசரி வேலைகள்கூடத் தடைப்படுவதை உணர்ந்தேன். தூரத்திலிருந்து யாரும் வந்து கூப்பிட்டால் போக மறுத்துவிடுவார். உள்ளூரில் யார் அழைத்தாலும் சில சமயங்களில் அவர்கள் கண்ணில் படாமல் மறைந்துவிடுவார். முன்பெல்லாம் மத்தியானம் சாப்பிடும்போதும் இராக்காலத்திலும்தான் நாங்கள் இருக்கும் உள் கட்டிற்கு வருவார். ஆனால், இப்பொழுது அத்தையின் சௌகரியங்களைக் கவனிப்பதற்காக அநாவசியமாக அடிக்கடி நாள் முழுதும் வந்துகொண்டிருப்பார். ஹேமாவை ஒரு டம்ளர் ஜலம் கொண்டுவரும்படியாக அன்று அத்தை கூப்பிட்டபோதுதான் அவர் அத்தையின் அறைக்குப்போனார் என்பதும் எனக்குத் தெரியும். ஆரம்பத்தில் அந்தப் பெண்ணும் சொன்னதையெல்லாம் கேட்பாள். பிறகு வரவர எதையுமே செய்வதேயில்லை. உடனே அத்தை அருமையாக "ஹேமா," ஹேமா,வாடிகண்ணே!"என்றெல்லாம் கூப்பிடுவாள். ஆனால் அவள் மிகவும் இரக்கத்துடன் என்னையேகட்டிக்கொண்டிருப்பாள். ஒருவிதமான பயமும், துக்கமும் அவளைச் சூழ்ந்துகொண்டு அவளை மௌனமாக்கிவிடும். சில சமயங்களில் வேட்டையாடப்பட்ட பிராணியைப்போலப் பயந்து ஒடுங்கி என்ன செய்வதென்று தெரியாமல் என்னுடன் ஒட்டிக்கொள்வாள். ஒரு நாள் கல்கத்தாவிலிருந்து என் அண்ணா என்னைப்பார்க்க வந்திருந்தார். எல்லாவிஷயங்களையும் தூண்டித்துருவி ஆராய்ந்து தாமே அறிந்துகொள்ளும் அவர் ஆற்றலைப்பற்றி எனக்குத் தெரியும்.

அண்ணாவிடம் அவர் குற்றவாளியைப் போல நின்றுகொண்டு பதில்சொல்லியாக வேண்டுமே என்றெல்லாம் பயந்தேன். அதனால் உண்மை நிலைமையை மறைக்க உத்தேசித்துச் சகஜமாகவே இருப்பதாக நடந்துகொண்டேன். ஆனால் இயற்கைக்கு அதிகமாகவே நடந்துவிட்டேனாக்கும். தவிர என் கணவரும் தம் கவலையை வெளிப்படையாகவே காட்டிக்கொண்டு அண்ணா இன்னும் எத்தனை நாளைக்குத் தங்குவார் என்று கேட்டார். அவர் பொறுமையை இழந்து கொஞ்சம் மரியாதைக் குறைவாகக் கூட நடக்க ஆரம்பித்தார். ஆகவே வேறு வழியில்லாமல் அண்ணா ஊருக்குத் திரும்பலாயிற்று. அவர் புறப்படுவதற்கு முன்பாக என் சிரசின்மேல் கையைவைத்தார். சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. அவர்கை நடுங்குவதையும் உணர்ந்தேன். அவர் என்னை மௌனமாகவே ஆசீர்வதிக்கும் போது அவர் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. ஏப்பிரல் மாதம், மாலை நேரம், மார்க்கெட்டுக்காக வந்த ஜனங்கள் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். புயலடிக்கப்போவது போன்ற ஓர் உணர்வு எங்கும் நிலவிற்று. நனைந்த மண்ணின் மணமும் காற்றில் கலந்த ஈரத்தின் தன்மையும் எங்கும் பரவி இருந்தன. என் படுக்கையறையில் எரியும் விளக்கு வைத்துக்கொள்வதில்லை, ஏதாவது துணிமணியில் தீப்பிடித்துவிடப்போகிறதே என்று. என் இருண்ட அறையில், தரையில் உட்கார்ந்தபடியே என் குருட்டு உலகத்துத் தெய்வத்தை அழைத்தேன். "கடவுளே, உன் முகம் மூடப்பட்டிருக்கிறது. என்னால் பார்க்க முடியவில்லை. நான் குருடி. உடைந்துபோன துடுப்பைப்போல என் ஹிருதயத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறேன். என் கையில் ரத்தம் கசியும்வரையில் நான் சமாளிக்க முடியாத அளவிற்கு அலைகள் அடிக்கின்றன. என்னை எவ்வளவு நாளைக்குச் சோதிக்கப்போகிறாய் பகவானே! இன்னும் எத்தனை நாளைக்கு?".

என் கட்டிலில் தலையைச் சாய்த்தவண்ணமாகத் தேம்பித் தேம்பி அழலானேன். கட்டில் அசைவது தெரிந்தது. அடுத்த க்ஷணம் ஹேமாங்கனி என் பக்கத்தில் வந்துவிட்டாள். என் கழுத்தைக் கட்டிக்கொண்டு என் கண்ணீரைத் துடைத்தாள் மௌனமாக. அவள் அன்று மாலை ஏன் தனியாக உள் அறையிலேயே இருந்தாளென்றோ அந்தி நேரம் வரையில் தனியாக ஏன் படுத்துக்கொண்டிருந்தாள் என்றோ எனக்குத் தெரியாது. என்னை ஒன்றும் கேட்கவில்லை. ஒரு வார்த்தைகூடப் பேசவுமில்லை. என் நெற்றியில் தன் குளிர்ந்த கையை வைத்து என்னை முத்தமிட்டாள். அவ்வளவுதான், போய்விட்டாள்,

மறுநாள் காலை, நானும் இருந்தேன். ஹேமா அத்தையிடம், "நீ இஷ்டப்பட்டால் இரு. நான் வீட்டிற்குப் போகிறேன்; வேலைக்காரியை அழைத்துக்கொண்டு" என்றாள். தானும் வருவதால் தனியேபோக அவசியமில்லை என்று அத்தையும் சொன்னாள். அதோடு சிரித்துக்கொண்டு முத்துக்கள் பதித்த மோதிரத்தை எடுத்து," இதோ பார் ஹேமா! அபினஸ் உனக்காக எவ்வளவு அழகான மோதிரம் வாங்கியிருக்கிறான் பார்" என்றாள்.

ஹேமா அதை அவள் கையிலிருந்து வெடுக்கென்று பிடுங்கி, "அத்தை! என் குறி எவ்வளவு நன்றாக இருக்கிறதென்று பார்" என்று சொல்லிக்கொண்டே ஜன்னலுக்கு வெளியிலிருந்த குளத்தில் வீசி எறிந்துவிட்டாள். அத்தைக்குக் கோபம், ஆத்திரம், பயம் எல்லாம் கிளம்பிவிட்டன.

"குழு, இவள் குழந்தைத்தனமாகச் செய்ததை அபினஸ் காதில் போடாதே! அவன் ரொம்ப வருத்தப்படுவான்" என்று அங்கலாய்த்தாள்.

"அதற்காகக் கவலைப்படவேண்டிய அவசியமே இல்லை" என்று சொல்லித் தேற்றினேன்.

மறுநாள், வீட்டிற்குப் புறப்படுமுன் ஹேமா என்னைத் தழுவிக்கொண்டு, "அக்கா, என்னை மறந்துவிடாதே" என்றாள்.

அவள் முகத்தை என் விரல்களால் தடவிக்கொண்டே, "கண்ணே! பார்வையை இழந்தவர்களுக்கு ஞாபகசக்தி அதிகம்" என்றேன். அவள் நெற்றி, தலையின் உச்சி எல்லாவற்றையும் முத்தமிட்டேன்.

என் உலகம் வெறிச்சென்றிருந்தது. அவளிருந்தபோது என்னைச் சுற்றித் தழுவிக்கொண்டிருந்த, அழகு, சிரிப்பு, யவ்வனத்தின் குதூகலம் எல்லாம் அவளுடன் மறைந்தன. என் பாலைவன உலகில் இன்னும் என்ன பாக்கியாக இருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாமென்று தடவிக்கொண்டே புறப்பட்டேன்.

சற்று நேரம் சென்று அவர் வந்தார். அவர்களெல்லாரும் போனதைப்பற்றி அப்பாடா என்று அலுத்து ஓய்ந்தவர்போலக் கபடநாடகம் நடித்தார். அத்தை வந்து தன் வேலைகளைக்கூடத் தடைப்படுத்திவிட்டதாகச்சொன்னார். இவ்வளவு நாள் எனக்கும் அவருக்குமிடையில் என் பார்வை இல்லாத கொடுமையே எங்களைப் பிரித்துவைத்தது. ஆனால் தற்போது இன்னுமொன்று. ஹேமாவைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசாததுதான். அந்த விஷயமாகத் தமக்கு ஒன்றும் சிரத்தையே இல்லை என்கிற மாதிரி காட்டிக்கொண்டார். ஆனால் அதைப்பற்றி அவருக்குக் கடிதப் போக்குவரத்துக்கூட நடந்து வருவதையும் நான் அறிவேன்.

மே மாதத்தில் ஒரு நாள் காலையில் என் வேலைக்காரி அறைக்குள் வந்தவள், "அம்மா ஆற்றங்கரையில் ஏதோ தடபுடலாக ஆயத்தம் நடக்கிறது? எஜமான் எங்கேபோகிறார்?" என்றாள்.

ஏதோ—நடக்கப்போவது எனக்குத் தெரியும். ஆனால்—எனக்கு ஒன்றும் தெரியாதே என்று அவளிடம் சொன்னேன். அதற்குமேல் என்னை எந்தக் கேள்வியையும் கேட்க அவளுக்குத் தைரியமில்லை. சற்றே பெருமூச்சு விட்டுவிட்டுப் போய்விட்டாள்.

அன்று இரவு வெகு நேரங்கழித்து அவர் வந்தார். "உன் கிராமத்தில் ஒரு நோயாளியைப் பார்க்கப் போகவேண்டும். நாளை அதிகாலையிலேயே புறப்பட்டுவிடுவேன். திரும்பிவர இரண்டு மூன்று நாள் செல்லும்." என்றார்.

படுக்கையிலிருந்து எழுந்தேன். அவர் எதிரில் நின்றேன். "எதற்காக என்னிடம் இந்தப் பொய்யைச் சொல்லுகிறீர்கள்?" என்றேன்.

"என்ன! என்ன பொய்யைச் சொல்லிவிட்டேன்" என்று நாக்குழறக் கேட்டார்.

"நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறீர்கள்"

அவர் மௌனமாக இருந்தார். நானே மீண்டும், "சொல்லுங்கள். உண்மைதான் என்று."

"ஆம்", என்றார். மெல்லிய எதிரொலியைப்போல இருந்தது அவர் குரல்.

திரும்பவும் பலத்த குரலில், "முடியாது, நான் உங்களை ஒருபோதும் விடமாட்டேன். இந்தப் பெரிய படுகுழியில், பெரிய பாவத்தில், விழாமல் காப்பேன். இதில் நான் தவறிவிட்டால் உங்கள் மனைவி என்று சொல்லிக்கொண்டு நான் ஏன் இருக்கிறேன். என் தெய்வத்தை எதற்காகத் தொழுகிறேன்..." என்றேன்.

அறை நிசப்தமாக இருந்தது. நான் கீழே விழுந்து அவர் கால்களைக் கட்டிக்

கொண்டேன், "நான் என்ன செய்துவிட்டேன்? என்ன குறை செய்துவிட்டேன்? உண்மையைச் சொல்லுங்கள். நீங்கள் எதற்காக இன்னொரு மனைவியை விரும்புகிறீர்கள்?''

''உண்மையைச் சொல்லி விடுகிறேன்'' என்று மெதுவாக ஆரம்பித்தார். ''நீ பார்வையை இழந்ததும் உன்னை ஒரு கோட்டைக்குள் அடைத்துக்கொண்டாய். அதற்குள் நுழைய எனக்கு வழியில்லை. நீ வெறும் ஸ்திரீயாக இல்லை. தெய்வத்தைப்போல அவ்வளவு உன்னதமாக இருக்கிறாய். தினசரி வாழ்க்கையில் உன்னோடு அன்னியோன்னியமாய்க் கூடிவாழ முடியவில்லை. எனக்கு வேண்டியது ஒரு ஸ்திரீ—சமயத்திற்கேற்றபடி அவளை அன்புடன் அணைக்கவோ, கெஞ்சவோ, கொஞ்சவோ, கோபிக்கவோ—என் இஷ்டம்போல நடந்துகொள்ள ஒரு சாதாரண ஸ்திரீயைத்தான் நான் விரும்புகிறேன்......''

''ஐயோ! என் ஹிருதயத்தைப் பிளந்து பாருங்களேன். நானும் ஒரு சாதாரண ஸ்திரீதானே. நான் அதைத் தவிர வேறு என்ன? உங்களிடம் நம்பிக்கை கொள்ளவும், உற்றது அற்றது பேசவும், கொண்டாடிப் பூஜிக்கவும், ஆவலுள்ளவளுமான பெண்தானே? உங்களைக் கலியாணம் செய்துகொண்ட புதுசில் இருந்த அதே பெண்தானே இப்பொழுதும்'' நான் என்னென்ன பேசினேன் என்பது சரியாக நினைவில்லை. ஆனால் இதுதான் எனக்கு நினைவிருக்கிறது. ''நான்மட்டும் உங்களுக்கு உண்மையான மனைவியாக இருந்தால், கடவுள் சாக்ஷியாக நீங்கள் ஒருபோதும் உங்கள் வாக்கை மீறக்கூடாது; ஒருபோதும் இந்தக் கெட்ட காரியத்தைச் செய்யவே கூடாது. ஆனால் அப்பேர்ப்பட்ட துஷ்கிருத்தியத்தைச் செய்யுமுன்பு ஒன்று நான் விதவையாகவேண்டும், அல்லது ஹேமாங்கனி இறந்துபோகவேண்டும்.''

பிறகு மயக்கம் வந்தவளாய்க் கீழே தரையில் விழுந்துவிட்டேன். என் நினைவு வந்து பார்க்கையில் ஒரே இருட்டாக இருந்தது. வெளியில் குருவிகள்கூடச் சப்தம் செய்யவில்லை. அவர் போய்விட்டார்.

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம் ★ ஹெட்ஆபீஸ்: மதராஸ்

வாக்களிக்கப்பட்ட மூலதனம் ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. 18,75,000
ரிஸர்வ் பண்டு ... ரூ. 5,50,000
மொத்த ஆஸ்தி ... ரூ. 4 கோடிக்குமேல்

ஸிட்டி ஆபீஸ்கள்:

சைனாபஜார், மாம்பலம், மயிலாப்பூர், பெரியமேட், திருவல்லிக்கேணி

அமதலவாலஸா	காரைக்குடி	சாலூர்	திருச்சினாப்பள்ளி
அனகாபள்ளி	கும்பகோணம்	சீயாழி	திருவாரூர்
சிதம்பரம்	மதுரை	தஞ்சாவூர்	வேலூர்
சித்தூர் (கொச்சி)	மருடேரு	தாடபள்ளிக்கூடம்	விழுப்புரம்
கடலூர் N. T.	பாலக்காடு	திலாறு R. S.	விருதுநகர்
காஞ்சீவரம்	பார்வதிபுரம்	திருநெல்வேலி டவுன்	விஜயநகரம்
ஈரோடு	புதுக்கோட்டை	திருநெல்வேலி ஜங்ஷன்	நாகப்பட்டணம்
அம்பாசமுத்ரம்	தென்காசி	வேதாரண்யம்	ஆம்பூர்

பிக்ஸட் டிபாஸிட்கள்:- ஒரு வருஷம் நூற்றுக்கு வட்டி ... ... $2\frac{3}{4}$% விதம்
இரண்டு ,, ,, ... 3% ,,
சேவிங்ஸ் பாங்கு கணக்கு வாரம் ரூ. 250/வாங்கக்கூடியது ரூ. 5000/வரை வட்டிவிதம் $2\frac{1}{2}$% ,,
கரண்ட் கணக்கு .. .. $\frac{1}{2}$% ,,
தங்கம், வெள்ளிபார், கவர்மெண்ட் பாண்டு, கடன் பத்திரங்கள், ஷேர்கள், வியாபாரச் சரக்குகள் முதலியவைகளின் பேரில் கடன்கள் கொடுக்கப்படும்.

எல்லாவிதமான பாங்கு நடவடிக்கைகளும் நடத்தப்படும்

எஸ். என். என். சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்.

அன்று முழுதும் வீட்டிலுள்ள பூஜை அறையிலேயே இருந்துகொண்டு பிரார்த்தித்துக்கொண்டே இருந்தேன். மாலையில் இடி, மின்னல், மழையுடன் கூடிய புயல் அடித்து வீட்டையே ஆட்டிவிட்டது. அந்தச் சமயம் அவர் ஆற்றில் மாட்டிக்கொண்டு தவித்திருப்பார். ஆனால் அப்போது அவரைக் காப்பாற்றும்படி நான் மண்டியிட்டுப் பிரார்த்திக்கவில்லை. என்னதான் நேர்ந்தாலும் அவர் இந்தப் பாவத்தில் சிக்காமல் காப்பாற்றப்பட வேண்டும் என்றே நான் வேண்டிக்கொண்டேன்.

இரவும் கழிந்தது. மறுநாள் முழுதும் பிரார்த்தனையிலேயே ஈடுபட்டிருந்தேன். பொழுதுபோனதும் என் நினைவை யிழந்தேன். பிறகு நடந்தது எனக்கு ஒன்றும் தெரியாது. என் அறைக் கதவைத் தட்டிப் பார்த்துவிட்டுப் பிறகு உடைத்துத் திறந்து பார்த்து, நான் பிரஞ்ஞையின்றி கீழே கிடப்பதைக் கண்டு என் அறைக்குத் தூக்கிச் செல்லப்பட்டேன்.

என் நினைவு வந்ததும் யாரோ என் காதில் ரகசியமாக "அக்கா" என்று கூப்பிடுவது கேட்டது. என் அறையில்தான் படுத்திருந்தேன். என் தலை ஹேமாவின் மடியில் கிடந்தது. என் தலை அசைந்ததும் அவள் புடவை அசைவதால் உண்டாகும் சப்தம் கேட்டது.

கல்யாணப் புதுப் புடவையின் சப்தம் தான்—"ஐயோ கடவுளே! கடவுளே! என் பிரார்த்தனை உன் காதில் விழவில்லையா? என் கணவர் படுகுழியில் விழுந்துவிட்டார்."

ஹேமா குனிந்து காதோடு காதாக இனிய குரலில், "அன்புள்ள அக்கா, என் கல்யாணத்திற்கு உன் ஆசீர்வாதத்தைப் பெற வந்திருக்கிறேன்" என்றாள். முதலில் என் உடல் முழுதும் விறைத்தது போலாயிற்று. இடி விழுந்த மரத்தைப்போல, பிறகு எழுந்து உட்கார்ந்து மன வேதனையுடன், "உன்னை ஏன் நான் ஆசீர்வதிக்கக்கூடாது? நீ என்ன குற்றம் செய்தாய்?" என்று சற்றே சிரமத்துடன் தயங்கித் தயங்கிச் சொன்னேன். ஹேமா வழக்கம்போல் உற்சாகமாகச் சிரித்தாள்.

"குற்றமா? நீ கல்யாணம் செய்து கொண்டபோது அது சரி! நான் செய்து கொண்டால் மட்டும் அது குற்றம் என்று சொல்லு!" அவள் சிரிப்புக்குப் பதிலாக நானும் புன்னகை செய்ய முயற்சித்தேன். என் பிரார்த்தனையே இந்த உலகில் முடிவான வார்த்தையல்ல. எல்லாம் அவன் செயல், என்ன வேண்டுமானாலும் என் தலையில் விழட்டும். ஆனால் எனக்குக் கடவுளிடத்தில் உள்ள பக்தியையும் நம்பிக்கையையும் மட்டும் குறைக்காமல் செய்யட்டும் என்று எனக்குள்ளாகவே சொல்லிக்கொண்டேன்.

ஹேமா என்னை வணங்கி என் பாதங்களைத் தொட்டாள். "இடையறாத சகல சௌபாக்யங்களுடனும் நீ சந்தோஷமாக இரு" என்று அவளை ஆசீர்வதித்தேன்.

"அக்கா என்னைமட்டும் ஆசீர்வதித்தால் போதாது, எங்கள் சந்தோஷத்தைப் பூரணமாக்கவேண்டும். உன் புனிதக் கையால் என் கணவரையும் உன் வீட்டிற்குள் வர வேற்கவேண்டும். அவரை உன்னிடம் அழைத்துக்கொண்டு வரட்டுமா?"

"சரி அழைத்து வா".

கொஞ்சநேரம் சென்று, எனக்குத் தெரிந்த காலடி சப்தம் கேட்டது. அத்துடன், "குமூ' எப்படி இருக்கிறாய்?" என்ற கேள்வியும் வந்தது. நான் திடுக்கிட்டுத் தரையோடு வணங்கிவிட்டு "அண்ணா" என்றேன்.

"இது என்ன வேடிக்கை? இன்னுமா அண்ணா என்று கூப்பிடுகிறாய்? உன் தங்கையாகிய என்னை மணந்துகொண்ட சின்னப் பையனைக் காதைப் பிடித்து இழுத்து, தம்பி என்று கூப்பிடு" என்றாள்.

இப்போதுதான் புரிந்தது! பெரிய பாவத்திலிருந்து என் கணவர் மீட்கப்பட்டார். அவர் நரகத்தில் விழுந்துவிடவில்லை! அண்ணா கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லை என்று முடிவு செய்திருந்தது எனக்குத் தெரியும். அம்மாவும் இறந்த பிறகு கல்யாணம் செய்துகொள்ளத்தான் வேண்டும் என்று சலுகையுடன் வற்புறுத்த யாருமில்லை. ஆனால் தங்கையாகிய என்னுடைய அதியவசிய நிலைமை அவரைக் கட்டாயப்படுத்திவிட்டது. எனக்காகவே அவர் கல்யாணம் செய்து இருக்கிறார். என் குருட்டுக் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகி என் கன்னங்களில் வழிய ஆரம்பித்தது. எவ்வளவோ முயன்றும் அதை என்னால் நிறுத்த முடியவில்லை. அண்ணா மெதுவாக என் தலையில் கையை வைத்துத் தடவிக் கொடுத்தார். ஹேமா

என்னைக் கட்டிக்கொண்டு சிரிக்க ஆரம்பித்தாள்.

அன்றிரவு முழுதும் விழித்துக்கொண்டே என் படுக்கையில் கிடந்தேன். என் கணவரின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டே. அவருக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் அவமானத்தையும் எப்படிச் சகிப்பார் என்று எனக்குத் தெரியவில்லை. நடுநிசிக்குமேல் என் அறைக் கதவு திறந்தது. படுக்கையில் எழுந்து உட்கார்ந்து கவனித்தேன். அவருடைய காலடிதான். என் ஹிருதயம் வெகு வேகமாக அடிக்க ஆரம்பித்தது, படுக்கைக்குச் சமீபத்தில் வந்து என் கைகளைப் பிடித்தார்.

"நான் அழிந்து போகாதபடி உன் அண்ணு என்னைக் காப்பாற்றிவிட்டார். ஒரு க்ஷணநேரப் பைத்திய எண்ணத்தால் நான் பாதாளத்திற்கு இழுத்துச் செல்லப் பட்டேன். ஒருவிதமான மூர்க்க வெறி என்னைப் பிடித்துக்கொண்டது. அதன் பிடிப்பிலிருந்து என்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. அன்று படகில் நான் ஏறும்போது என் ஹிருதயத்தில் எவ்வளவு பாரத்தைச்சுமந்துகொண்டிருந்தேன் என்பதைக் கடவுள் ஒருவரே அறிவார். ஆற்றில் புயலடித்தது, வானமுழுதும் கறுத்து இருள் சூழ்ந்திருந்தது. என்னுடைய எல்லாவிதப்பயங்களுக்குமிடையில் அந்தச்சமயம் அப்படியே ஆற்றில் முழுகித் தொலையக் கூடாதா? அப்படியாவது நானே முடிந்துகொண்ட முடிச்சிலிருந்து என்னை விடுவித்துக்கொள்ளலாம் என்றுதான் அந்தரங்கமாக எண்ணினேன். பிறகு மதுர் கஞ்சை யடைந்தேன்.

அங்கே சென்றதுமே என்னை விடுவிக்கப் பட்ட செய்தி என் செவியை எட்டியது. உன் அண்ணு ஹேமாவைக்கல்யாணம் செய்துகொண்டு விட்டார். எவ்வளவு சந்தோஷத்துடனும்............ அவமானத்துடனும் அந்தச் செய்தியைக்கேட்டேன் என்று என்னால் சொல்லமுடியாது. உடனே திரும்பவும் படகுக்குச்சென்றேன். என் அறிவீனத்தை முழுதும் அறிந்து கொண்ட, அந்தக்ஷணநேரத்தில், உன்னையல்லாது எனக்குச்சந்தோஷமே இல்லை என்பதை அறிந்து கொண்டேன். நீ ஒரு தெய்வந்தான்!

நான் அழுதேன், சிரித்தேன். அதே சமயத்தில் "இல்லவே இல்லை, இனி நான் தெய்வமாகவே இருக்கப்போவதில்லை, உங்களுடைய மனைவியாகவே நான் இருக்கப்போகிறேன். நான் ஒரு சாதாரண ஸ்திரீதான்...... ...." என்று சொன்னேன்

"கண்ணே, நானும் உன்னிடம் சொல்ல வேண்டியவையிருக்கின்றன. என்னை உன் கடவுள் என்று சொல்லி என்னை அவமானப்படுத்தாதே"

மறுநாள் சங்க நாதத்தின் ஒலி எங்கும் பரவி ஊரையே குதூகலப் படுத்தியது. ஆனால் கிட்டத்தட்ட எல்லாமே இழந்து போயிருக்கக்கூடிய அந்தப் பைத்தியம் பிடித்த இரவைப்பற்றி மட்டும் யாருமே பிரஸ்தாபிக்கவில்லை.

"காவேரி" சந்தா விபரங்கள்

	உள்நாடு	சிலோன்	பர்மா & மலேயா
வருஷம்	4 8 0	4 12 0	6 0 0
ஆறுமாதம்	2 4 0	2 8 0	3 0 0
தனிப்பிரதி	0 6 0	40 சதம்	0 8 0

ஏஜென்ஸி இல்லாத இடங்களுக்குப் பொறுப்புள்ள ஏஜண்டுகள் தேவை.

1980

Edited & Published by N. R. Ramanujan & Printed by S. Rangaswami at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

இவை எல்லாம் சென்னையிலேயே இப்பொழுது தயாராகின்றன

பதப்படுத்திய உருக்கு ஸ்பானர்கள்

அசிடிலின் ஜெனரேட்டர்கள்—மீடியம் பிரெஷர்

அசிடிலின் ஜெனரேட்டர்கள்—லோ பிரெஷர்

டெயில் போர்ட் செயின்கள்

ஸ்லாம் பூட்டுகள் (இரண்டு வகை வேலை செய்வது)

ஹெவி ட்யூடி பஸ், லாரி ஜாக்கிகள்

போர்ட்டபிள் தொழிற்சாலை கிரேன்கள்

போர்ட்டபிள் தொழிற்சாலை போர்ஜுகள்

ஸ்டோரேஜ் டாங்குகள்

உலோகத் தகடுகள் வெட்டும் ரோட்டரி மெஷின்கள்

போர்ட்டபிள் ரோலர் ஊத்தும் மெஷின்கள்

வீல் பாரோஸ்

பிளாட்பாரம் டிராலிகள்

அட்ஜஸ்டபிள் மெடல் ஸ்டூல்கள் முதலியவைகள்

தயாரிப்பவர்கள்:—

ஸிம்ஸன் அண்ட் கம்பெனி லிமிடெட்

மவுண்ட் ரோட், சென்னை.

பிராஞ்சுகள்:— பெங்களூர், திருச்சினுப்பள்ளி, உதகமண்டலம், ஹைதராபாத் (டக்கான்).

No. M. 4405 Cauveri

— டி. எஸ். ஆர். கோகுல் தைலத்தை —

தொடர்ந்து உபயோகித்த இம்மங்கை தனது கூந்தல்
அடர்ந்து கவர்ச்சியாக வளர்ந்திருப்பதைக் கண்டு
— அகமகிழ்கிறாள் —

இம் மகிழ்ச்சியை நீங்களும்
- எளிதில் அடையலாம் -

டி. எஸ். ஆர்.

கோகுல் கூந்தல் தைலம்

சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம்

இவைகள் குற்றால ஸ்நானத்தின் குளிர்ச்சிக்கு நிகரானவை!

மதராஸ் ஸிடி ஏஜண்டு **புஷ்பவனம் ஸ்டோர்ஸ்** பைக்ராப்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி.

T. S. R. & CO. PERFUMERS KUMBAKONAM

Cauveri Colour Pr[illegible]s, K[illegible]